உ

சிவமயம்

# நீதிநூற் கொத்து

## மூலமும் உரையும்

வெளியீடு :

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்.

1976

உ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

17/9/92

உ

சிவமயம்

# நீதி நூற் கொத்து

## மூலமும் உரையும்

★

ஔவையார் அருளிய

**ஆத்திசூடி**

ஔவையார் அருளிய

**கொன்றைவேந்தன்**

உலகநாதனார் இயற்றிய

**உலக நீதி**

அதிவீரராமபாண்டியர் இயற்றிய

**வெற்றிவேற்கை (நறுந்தொகை)**

ஔவையார் அருளிய

**வாக்குண்டாம் (மூதுரை)**

ஔவையார் அருளிய

**நல்வழி**

சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

**நன்னெறி**

★

வெளியீடு :

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

யாழ்ப்பாணம்

1976

SHANTHY PRINTERS
575. K. K. S. ROAD,
JAFFNA.

VAYAGAR... LIBRARY
ALAI WEST
CHUNNAKAM
F-A/1

# முன்னுரை

தமிழுக்கும் தமிழ் பேசும் நல்லுலகத்துக்கும் பெருமை தரும் அருமை வாய்ந்த நூல்களில் அறநூல்களும் ஒரு தொகுதியாகும். ஆத்திசூடி முதல் திருக்குறள் வரையுள்ள அறநூல்களை அறியாதார் இல்லை. சின்னஞ்சிறு குழந்தைகள் மழலை மொழியோடு மழலை மொழியாகப் பயிலும் ஆத்திசூடியின் அரும்பெரும் விளக்கம் ஆண்டுகள் கழியவே புலனுகின்றது. அந்த வகையில் அமைந்த இந்த நீதிநூற் கொத்து மூலமும் உரையும் சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருக்கும் பயன் படும் என்பது எங்கள் நம்பிக்கை.

'திருஆலவாய்',
யாழ்ப்பாணம்,
3-9-76.

க. கனகராசா
உரிமையாளர்
(மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்)

சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில், குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பெற்று, மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபர் திரு. க. கனகராசா அவர்களால் வெளியிடப்பெற்றது.

உ

சிவமயம்

# ஆத்திசூடி

## உரையுடன்

காப்பு

**ஆத்தி சூடி யமர்ந்த தேவனை**
**ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே.**

ஆத்தி — திருவாத்திப் பூமாலையை, சூடி — தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த — விரும்பிய, தேவனை—பிள்ளையாகிய விநாயகக் கடவுளை, ஏத்தி ஏத்தி—துதித்துத் துதித்து, தொழுவோம் — வணங்குவோம், யாம்—நாங்கள்; என்றவாறு.

**அறஞ்செய விரும்பு.**

அறம் — தருமத்தை, செய — செய்தற்கு, விரும்பு — நீ ஆசைகொள்ளு. 1

**ஆறுவது சினம்.**

ஆறுவது—(உன்னுள்ளே) தணிய வேண்டுவது, சினம்—கோபமே ஆம். 2

**இயல்வது கரவேல்.**

இயல்வது — (கொடுப்பதற்கு) இசைவதை, கரவேல்—(நீ வறுமையினலே யாசிப்பவர்களுக்கு) ஒளியாதே. 3

**ஈவது விலக்கேல்.**

ஈவது—(தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்—நீ தடுக்காதே. 4

**உடையது விளம்பேல்.**

உடையது—(உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்—(நீ மற்றவர் அறியும்படி) சொல்லாதே. 5

**ஊக்கமது கைவிடேல்.**

ஊக்கமது—(செய் தொழிலில்) மனஞ் சோராமையை, கைவிடேல்—நீ கைவிடாதே. 6

**எண்ணெழுத் திகழேல்**

எண்—கணித நூலையும், எழுத்து—இலக்கண நூலையும், இகழேல்—நீ இகழ்ந்து தள்ளாதே. 7

**ஏற்ப திகழ்ச்சி.**

ஏற்பது—(ஒருவரிடத்திலே போய்) இரப்பது, இகழ்ச்சி—பழிப்பாகும். 8

**ஐய மிட்டுண்.**

ஐயம்-பிச்சையை, இட்டு-(இரப்பவர்களுக்குக்) கொடுத்து, உண்—நீயும் உண். 9

**ஒப்புர வொழுகு.**

ஒப்புரவு—உலக நடையை அறிந்து, ஒழுகு—(நீ அந்த வழியிலே) நட. 10

**ஓதுவ தொழியேல்**

ஓதுவது — (அறிவு நூல்களை) வாசிப்பதை, ஒழியேல் — (நீ மரணபரியந்தம்) விடாதே. 11

**ஔவியம் பேசேல்.**

ஔவியம் — பொறாமை வார்த்தைகளை, பேசேல் — நீ பேசாதே. 12

**அஃகஞ் சுருக்கேல்.**

அஃகம் — தானியத்தை, சுருக்கேல் — (அதிக இலாபத்துக்காகக்) குறையாதே. 13

**கண்டொன்று சொல்லேல்.**

கண்டு-(ஒன்றைக்)கண்டு, ஒன்று-வேறொன்றை, சொல்லேல்-(நீ சாட்சியாகும்போது)சொல்லாதே [கண்டபடியே சொல் என்பது கருத்து] 14

**ஙப்போல் வளை.**

ஙப்போல்—ஙகரம் (தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்) போல, வளை-(நீ பிரயோசனமுள்ளவனாயிருந்து உன் இனத்தைத்) தழுவு.

ஙகரமானது அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் என்று சொல்லுக்குக் காரணமாய் வரும். அதின் வருக்கங்களாகிய ஙா ஙி ஙீ ஙு ஙூ ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ என்கின்ற பதினொன்றும் சொல்லுக்குக் காரணமாதல் இல்லை. ஆயினும் ஙகரத்தின்பொருட்டு இவைகளையும் நெடுங்கணக்கிலே வழங்குவார்கள். அதுபோலவே, நீ கல்வி செல்வங்களினாலே பிறருக்கு உதவி செய்வா

யாயின், அவர் உன்னைத் தழுவுவதன்றி உன் பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவார் என்பதாம். 15

**சனி நீராடு.**

சனி — சனிக்கிழமைதோறும், நீர்ஆடு — (எண்ணெய் இட்டுக்கொண்டு) நீரிலே தலை முழுகு. [புதன்கிழமையிலும் முழுகலாம்.] 16

**ஞயம்பட வுரை.**

ஞயம்பட — (பேசுஞ் சொல்லிலே) இன்பம் விளையும்படி, உரை — நீ பேசு. [நயம் என்பது ஞயம் எனப் போலியாயிற்று]. 17

**இடம்பட வீடெடேல்.**

இடம் — இடமானது, பட — (அளவுக்கு மேற்பட்டு) வெறுமையாய்க் கிடக்கும்படி, வீடு — வீட்டை, எடேல் — (நீ பெரிதாகக்) கட்டாதே. 18

**இணக்கமறிந் திணங்கு.**

இணக்கம் — (சிநேகிதத்துக்கு ஏதுவாகிய) நற்குண நற்செய்கைகளை, அறிந்து — தெளிந்து, இணங்கு — (பின் ஒருவரோடு) சிநேகஞ் செய். 19

**தந்தைதாய் பேண்.**

தந்தை — (நீ உன்) பிதாவையும், தாய் — மாதாவையும், பேண் — (எப்பொழுதும் பூசித்துக்) காப்பாற்று. 20

**நன்றி மறவேல்.**

நன்றி — (ஒருவர் உனக்குச் செய்த) உபகாரத்தை மறவேல் — நீ ஒருபோதும் மறவாதே. 21

**பருவத்தே பயிர்செய்.**

பயிர் — பயிர்களை, பருவத்தே — (அது அது விளையும்) பக்குவகாலத்திலே, செய் — (வேண்டும் முயற்சியிலே வழுவாமல்) செய். 22

பயிருக்கு வேண்டும் முயற்சிகளாவன; உழுதல், எரு இடுதல், களை பிடுங்கல், நீர் பாய்ச்சல், காத்தல் என்கிற ஐந்துமாம்.

**மன்றுபறித் துண்ணேல்.**

மன்று — தருமசபையில் இருந்துகொண்டு, பறித்து — (வழக்குத் தீர்ப்புக்கு வரும் குடிகளுடைய பொருளைக்) கவர்ந்து, உண்ணேல் - நீ சீவனம் பண்ணுதே. 23

**இயல்பலாதன செயேல்.**

இயல்பு அலாதன—(தருமநூலுக்குப்) பொருத்தமல்லாதவைகளை, செயேல் — நீ செய்யாதே. 24

**அரவ மாட்டேல்.**

அரவம் - (நஞ்சுடைய) பாம்புகளை, ஆட்டேல்-நீ பிடித்து ஆட்டாதே. 25

**இலவம்பஞ்சிற் றுயில்.**

இலவம் பஞ்சில் — இலவம் பஞ்சு மெத்தையில், துயில் — நீ நித்திரை கொள். 26

**வஞ்சகம் பேசேல்**

வஞ்சகம் — கபட வார்த்தைகளை, பேசேல் — நீ பேசாதே. 27

**அ,ழகலா தனசெயேல்**

அழகு அலாதன — (நீ துன்பப்பட வந்த காலத்தும்) இழிவுள்ள செயல்களை, செயேல்-செய்யாதே.

அழகுடையன உயர்வுள்ள செயல்கள். ஆதலால், .அழகலாதன இழிவுள்ள செயல்கள் என்பதாம். 28

**இ,ளமையிற் கல்**

இளமையில்—இளமைப் பிராயத்திலே, கல்—(நீ வித்தையை விரும்பிக்) கற்றுக்கொள். 29

**அ,றனை மறவேல்**

அறனை — தருமத்தை, மறவேல் — (நீ ஒரு போதும்) மறவாதே. 30

**அ,னந்த லாடேல்.**

அனந்தல்—நித்திரையை, ஆடேல் — (நீ அதிகமாகச்) செய்யாதே. (அனந்தல்—கள் மயக்கமுமாம்.) 31

**கடிவது மற.**

கடிவது — (ஒருவரைச்) சினந்து பேசுவதை, மற—நீ மறந்துவிடு. 32

**காப்பது விரதம்.**

காப்பது—(உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல்) அவைகளைக் காப்பாற்றுவதே, விரதம்-விரதமாம்.

**கிழமைப் படவாழ்.**

கிழமைப்பட-(உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கு) உரிமைப்படும்படி, வாழ்—நீ வாழு. 34

**கீழ்மை யகற்று.**

கீழ்மை—கீழ்மையாகிய குணத்தை, அகற்று—நீ நீக்கு. 35

**குணமது கைவிடேல்.**

குணமது-(மேலாகிய) குணத்தை, கைவிடேல்-நீ விட்டுவிடாதே. 36

**கூடிப் பிரியேல்.**

கூடி-(நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல்-(நீ பின் அவரை விட்டு) நீங்காதே. 37

**கெடுப்ப தொழி.**

கெடுப்பது—(பிறருக்குக்) கேடு செய்வதை, ஒழி—நீ விட்டுவிடு. 38

**கேள்வி முயல்.**

கேள்வி-(கற்றவர் சொல்லும் நூற்பொருளைக்) கேட்பதற்கு, முயல்—நீ முயற்சி செய். 39

**கைவினை கரவேல்.**

கைவினை-(உனக்குத்தெரிந்த) கைத்தொழிலை, கரவேல்—(நீ மற்றவர்களுக்கு) ஒளியாதே. 40

**கொள்ளை விரும்பேல்**

கொள்ளை-(பிறருடைய பொருளைக்) கொள்ளையிடுதற்கு, விரும்பேல்—நீ ஆசைப்படாதே. 41

**கோதாட் டொழி.**

கோது—குற்றம் பொருந்திய, ஆட்டு—விளையாட்டை, ஒழி—நீ நீக்கு. 42

**சக்கர நெறிநில்.**

சக்கர நெறி - (அரசனுடைய ஆஞ்ஞையாகிய) சக்கரம் செல்லும் வழியிலே, நில் - நீ அடங்கி நில், [அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நட என்பது கருத்து]. 43

**சான்றோ ரினத்திரு.**

சான்றோர் — அறிவினாலே நிறைந்தவர்களுடைய, இனத்து — கூட்டத்திலே, இரு — (நீ எந்நாளும் சேர்ந்து) இரு. 44

**சித்திரம் பேசேல்.**

சித்திரம் — மெய்போலத் தோன்றும் பொய் மொழிகளை, பேசேல் — நீ பேசாதே. 45

**சீர்மை மறவேல்.**

சீர்மை — புகழுக்கு ஏதுவாகிய குணத்தை, மறவேல் — நீ மறந்துவிடாதே. 46

**சுளிக்கச் சொல்லேல்.**

சுளிக்க — (கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல்லேல் — (நீ ஒன்றையும்) பேசாதே. 47

**சூது விரும்பேல்.**

சூது - சூதாடலை, விரும்பேல் - (நீ ஒருபோதும்) விரும்பாதே. 48

**செய்வன திருந்தச்செய்.**

செய்வன — செய்யும் காரியங்களை, திருந்த — செவ்வையாக, செய் — நீ செய். 49

**சேரிட மறிந்துசேர்.**

சேர் இடம் – அடையத்தகும் (நன்மையாகிய) இடத்தை, அறிந்து - தெரிந்து, சேர் – நீ அடை. 50

**சையெனத் திரியேல்.**

சை என – (பெரியோர் உன்னைச்) சீ என்று அருவருக்கும்படி, திரியேல் - (நீ துட்டனாய்த்) திரியாதே. 51

**சொற்சோர்வு படேல்.**

சொல்–(நீ பிறரோடு பேசும்) சொற்களிலே, சோர்வுபடேல் - மறதிபடப் பேசாதே, [சொல்ல வேண்டுவதை மறவாமற் சொல் என்பது கருத்து].

**சோம்பித் திரியேல்.**

சோம்பி – (நீ செய்யவேண்டும் முயற்சியைச் செய்யாமல்) சோம்பல் கொண்டு, திரியேல் – (வீணாகத்) திரியாதே. 53

**தக்கோ னெனத்திரி.**

தக்கோன் என - (உன்னைப் பெரியோர்கள்) யோக்கியன் என்று புகழும்படி, திரி – நீ திரி. 54

**தானமது விரும்பு.**

தானமது – (சற்பாத்திரங்களிலே) தானம் செய்தலை, விரும்பு – நீ விரும்பு. 55

**திருமாலுக் கடிமைசெய்.**

திருமாலுக்கு - விஷ்ணுவுக்கு, அடிமை செய் - தொண்டு செய். 58

**தீவினை யகற்று.**

தீவினை – பாவச் செயல்களை, அகற்று – (நீ செய்யாமல்) நீக்கு. 57

**துன்பத்திற் கிடங்கொடேல்.**

துன்பத்திற்கு — (தொழிலைச் செய்யும்போது முயற்சியினாலே வரும் சரீரப்பிரயாசத்தால் ஆகிய) துன்பத்துக்கு, இடம் கொடேல்—(சிறிதாயினும்) இடங் கொடாதே. [அத் துன்பத்தை இன்பமென்று கொண்டு முயற்சியை விடாது செய் என்பது கருத்து.] 58

**தூக்கி வினைசெய்.**

தூக்கி—(முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்து, வினை—ஒரு தொழிலை, செய்—(நீ அதன் பின்பு) செய். 59

**தெய்வ மிகழேல்.**

தெய்வம்—கடவுளை, இகழேல்—(நீ மறந்தாயினும்) இகழாதே. 60

**தேசத்தோ டொத்துவாழ்.**

தேசத்தோடு — (நீ வசிக்கும்) தேசத்திலுள்ளவர்களுடனே, ஒத்து—(பகையில்லாமல்) ஒற்றுமையாய், வாழ்—வாழு. 61

**தையல்சொற் கேளேல்.**

தையல் — (உன்) மனைவியுடைய, சொல் — சொல்லை, கேளேல் — நீ கேட்டு நடவாதே. 62

**தொன்மை மறவேல்.**

தொன்மை — பழைமையாகிய சிநேகிதத்தை, மறவேல் — நீ மறந்துவிடாதே. 63

**தோற்பன தொடரேல்.**

தோற்பன—தோல்வியடையக்கூடிய வழக்குக்களிலே, தொடரேல்—நீ சம்பந்தப்படாதே. 64

**நன்மை கடைப்பிடி.**

நன்மை—புண்ணியத்தையே, கடைப்பிடி—(நீ விடாமல்) உறுதியாகப் பிடி. 65

**நாடொப் பனசெய்.**

நாடு—உன் நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன—ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய்—நீ செய். 66

**நிலையிற் பிரியேல்.**

நிலையில்—(நீ நிற்கின்ற உயர்ந்த) நிலையிலே நின்று, பிரியேல்—(ஒருபோதும்) நீங்காதே. 67

**நீர்விளை யாடேல்.**

நீர்—(ஆழம் உள்ள) நீரிலே, விளையாடேல்—நீ (நீந்தி) விளையாடாதே. 68

**நுண்மை நுகரேல்.**

நுண்மை—(நோயைத் தருகிற) சிற்றுண்டிகளை, நுகரேல்—உண்ணாதே. 69

**நூல்பல கல்.**

நூல்பல—(அறிவை வளர்க்கின்ற) நூல்கள் பலவற்றையும், கல் — நீ கற்றுக்கொள். 70

**நெற்பயிர் விளை.**

நெற் பயிர்—நெல்லுப் பயிரை, விளை—(நீ வேண்டிய முயற்சி செய்து) விளைவி. 71

**நேர்பட வொழுகு.**

நேர்பட-(உன்ஒழுக்கம்கோணாமல்)செவ்வைப்பட, ஒழுகு — நீ நட. 72

**நைவினை நணுகேல்.**

நை-(பிறர்) கெடத்தக்க, வினை - தீவினைகளை, நணுகேல் - (நீ ஒருபோதும்) செய்யாதே. 73

**நொய்ய வுரையேல்.**

நொய்ய - (பயன் இல்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல் - (நீ ஒருபொழுதும்) சொல்லாதே.

**நோய்க்கிடங் கொடேல்.**

நோய்க்கு - வியாதிகளுக்கு, இடங்கொடேல் - (அவபத்தியம் முதலானவைகளைச் செய்து) இடங் கொடாதே. 75

**பழிப்பன பகரேல்.**

பழிப்பன-(அறிவுடையவர்களாலே) பழிக்கப் படுவனவாகிய இழி சொற்களை, பகரேல் - நீ பேசாதே.

இழி சொற்களாவன: பொய், குறளை, கடுஞ் சொல், பயனில்சொல் என்கிற நான்குமாம். 76

**பாம்பொடு பழகேல்.**

பாம்பொடு - (பால்கொடுத்தவருக்கும் விஷத்தைக் கொடுக்கிற) பாம்பைப் போல்பவர்களுடனே, பழகேல் - நீ சகவாசஞ் செய்யாதே. 77

**பிழைபடச் சொல்லேல்.**

பிழைபட - பிழைகள் உண்டாகும்படி, சொல்லேல் - (நீ ஒன்றையும்) பேசாதே. 78

**பீடு பெறநில்.**

பீடு - பெருமையை, பெற - பெறும்படியாக, நில் - நீ (நல்ல வாழ்விலே) நில். 79

**புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.**

புகழ்ந்தாரை — உன்னைத் துதிசெய்து அடுத்தவரை, போற்றி — (கைவிடாமற்) காப்பாற்றி, வாழ்—நீ வாழு. 80

**பூமி திருத்தியுண்.**

பூமி - உன் விளைநிலத்தை, திருத்தி - சீர்திருத்திப் பயிர் செய்து, உண் - நீ உண்ணு. 81

**பெரியாரைத் துணைக்கொள்.**

பெரியாரை - (அறிவிலே சிறந்த) பெரியோரை, துணைகொள் - உனக்குத் துணையாகப் பேணிக்கொள். 82

**பேதைமை யகற்று.**

பேதைமை - (பிறவிக்குக் காரணமாகிய) அஞ்ஞானத்தை, அகற்று - (நீ மெய்ஞ்ஞானத்தினாலே) போக்கு. 83

**பையலோ டிணங்கேல்.**

பையலோடு-சிறு பிள்ளையோடு இணங்கேல்-நீ கூடாதே. 84

**பொருடனைப் போற்றிவாழ்.**

பொருள் தனை-திரவியத்தை போற்றி-(மேன்மேலும் உயரும்படி) காத்து, வாழ்—நீ வாழு. 85

**போர்த்தொழில் புரியேல்.**

போர்—சண்டையாகிய, தொழில்—தொழிலை, புரியேல்—நீ செய்யாதே. 86

**மனந்தடு மாறேல்.**

மனம் — மனசு, தடுமாறேல் — (யாதொரு விஷயத்திலும்) கலங்காதே. 87

**மாற்றானுக் கிடங்கொடேல்.**

மாற்றானுக்கு-பகைவனுக்கு, இடங்கொடேல்-[உன்னை நெருங்கிப் பின் வருந்தும்படியாக நீ] இடங் கொடாதே .88

**மிகைபடச் சொல்லேல்.**

மிகைபட—(சொற்கள் சுருங்காமல்) அதிகப் படும்படி, சொல்லேல்—நீ சொல்லாதே. 89

**மீதூண் விரும்பேல்.**

மீது ஊண்—அதிக போசனத்துக்கு, விரும் பேல்—நீ ஆசைப்படாதே. 90

**முனைமுகத்து நில்லேல்.**

முனைமுகத்து—சண்டை முகத்திலே, நில்லேல்—(நீ போய்) நில்லாதே. 91

**மூர்க்கரோ டிணங்கேல்.**

மூர்க்கரோடு-அறிவில்லாதவர்களுடனே, இணங் கேல்—நீ சிநேகம் பண்ணாதே. 92

**மெல்லினல்லா டோள்சேர்.**

மெல்—மெல்லிய, இல்—(உன்) மனையாட்டி யாகிய, நல்லாள்—பெண்ணினுடைய, தோள்—தோள்களையே, சேர்—நீ சேர்.

இதனாலே, பிறர் மனைவியர், பரத்தையர் என்கிற இவர்களை ஒருபோதும் விரும்பாதே என்பது பெறப்படும். 93

**மேன்மக்கள் சொற்கேள்.**

மேன்மக்கள்-மேன்மையாகிய மனிதருடைய, சொல்-சொல்லை, கேள்—நீ கேட்டு நட. 94

**மைவிழியார் மனையகல்.**

மை விழியார் – மை தீட்டிய கண்களையுடைய வேசிகளது, மனை—வீட்டை, அகல்—(நீ ஒருபோதும் கிட்டாமல்) அகன்று போ. 95

**மொழிவ தறமொழி.**

மொழிவது—சொல்லப்படும் பொருளை, அற—(சந்தேகம்) நீங்கும்படி, மொழி—நீ சொல்லு. 96

**மோகத்தை முனி.**

மோகத்தை-(நிலையில்லாத பொருள்களின்மேலதாகிய) ஆசையை, முனி—கோபித்து விலக்கு. 97

**வல்லமை பேசேல்.**

வல்லமை—(உன்னுடைய) சாமர்த்தியத்தை, பேசேல்—(நீ புகழ்ந்து) பேசாதே. 98

**வாதுமுற் கூறேல்.**

வாது—வாதுகளை, முன்—(பெரியோர்) முன்னே, கூறேல்—நீ பேசாதே. 99

**வித்தை விரும்பு.**

வித்தை – கல்விப் பொருளை, விரும்பு – நீ விரும்பு. 100

**வீடு பெறநில்.**

வீடு—மோக்ஷத்தை, பெற—அடையும்படி, நில்—(அதற்குரிய ஞான வழியிலே) நில். 101

**உத்தம ஞயிரு.**

உத்தமனுய் — (நற்குண நற்செய்கைகளினுலே எல்லாரிலும்) மேலானவனுகி, இரு — நீ இரு. 102

**ஊருடன் கூடிவாழ்.**

ஊருடன் — ஊரவர்களுடனே, கூடி — (சுபாசுப கன்மங்களிலே) அளாவி, வாழ் — நீ வாழு. 103

**வெட்டெனப் பேசேல்.**

வெட்டு என — கத்தி வெட்டைப் போல, பேசேல் - (ஒருவரோடுங் கடினமாகப்) பேசாதே.

**வேண்டி வினைசெயேல்.**

வேண்டி - (யாதொரு பிரயோசனத்தை) விரும்பி, வினை — தீவினையை, செயேல் —(நீ ஒருவனுக்கும்) செய்யாதே. 105

**வைகறைத் துயிலெழு.**

வைகறை — (நீ தினந்தோறும்) விடியற்காலத்திலே, துயில் எழு — நித்திரையை விட்டு எழுந்திரு.

**ஒன்ஞரைத் தேறேல்.**

ஒன்ஞரை — பகைவர்களை, தேறேல் — (நீ ஒருபோதும்) நம்பாதே. 107

**ஓரஞ் சொல்லேல்.**

ஓரம் — பக்ஷபாதத்தை, சொல்லேல் — (நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே. 108

உ

# கொன்றைவேந்தன்

## உரையுடன்

### காப்பு

**கொன்றை வேந்தன் செல்வ னடியிணை**
**என்று மேத்தித் தொழுவோ மியாமே.**

கொன்றை — கொன்றைப்பூ மாலையைச் சூடிய, வேந்தன் — சிவபெருமானுக்கு, செல்வன் — குமாரனாகிய விநாயகக் கடவுளுடைய, அடி இணை — பாதங்களிரண்டையும், என்றும் — எந்நாளும், ஏத்தி — துதிசெய்து, தொழுவோம் — வணங்குவோம், யாம் — நாங்கள்.

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**

அன்னையும் — தாயும், பிதாவும் — தகப்பனும், முன் — முன்னே, அறி — காணப்பட்ட, தெய்வம் — தெய்வங்களாவார். 1

**ஆலயந் தொழுவது சாலவு நன்று**

ஆலயம் — கோயிலுக்குப் போய், தொழுவது — கடவுளை வணங்குவது, சாலவும் — மிகவும், நன்று — நல்லது. 2

**இல்லற மல்லது நல்லற மன்று**

இல்லறம் — மனையாளோடு கூடிச் செய்யும் அறமானது, நல் அறம் — எளிதிற் செய்யத் தகும் அறமாகும், அல்லது — இல்லறமல்லாத துறவறமானது, அன்று — எளிதிற் செய்யத்தகும் அறமன்றாகும். 3

**ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**

ஈயார் — கொடாதவருடைய, தேட்டை — சம்பாத்தியத்தை, தீயார் — (கள்வர் முதலிய) தீயவர், கொள்வர் — அபகரிப்பர். 4

**உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு**

உண்டி — போசனம், சுருங்குதல் — (அளவிற்) குறைதல், பெண்டிர்க்கு — பெண்களுக்கு, அழகு — அழகாகும். 5

**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**

ஊருடன் — (தான் இருக்கும்) ஊராருடன், பகைக்கின் — (ஒருவன்) விரோதித்தால், வேருடன் — (தன்) வமிசத்துடன், கெடும் — (அவன்) கெடுவான். 6

**எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்**

எண்ணும் — கணிதநூலும், எழுத்தும் — இலக்கணநூலும், கண் எனத் தகும் — (மனிதருக்கு) கண்களென்று சொல்லப்படும். 7

**ஏவா மக்கண் மூவா மருந்து**

ஏவா — (பெற்றவர் இதைச் செய் என்று) ஏவுவதற்கு முன் குறிப்பறிந்து செய்கிற, மக்கள் — பிள்ளைகள், மூவா மருந்து — (அப் பெற்றவருக்குத்) தேவாமிர்தம் போல்வர். 8

**ஐயம் புகினுஞ் செய்வன செய்**

ஐயம் புகினும் — பிச்சையெடுத்தாலும், செய்வன — செய்யத்தகும் கருமங்களை, செய் — நீ (விடாது) செய். 9

**ஒருவனைப் பற்றி ஓரகத் திரு**

ஒருவனை – (நற்குணமுடைய) ஒருவனை, பற்றி- (துணையாகப்) பற்றிக்கொண்டு, ஓரகத்து – ஓரிடத்திலே தானே, இரு – நீ (எப்போதும்) வாசம் பண்ணு. 10

**ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்**

வேதியர்க்கு – பிராமணருக்கு, ஒழுக்கம் – ஆசாரமானது, ஓதலின் – (வேதம்) ஓதலினும், நன்று – நல்லது. 11

**ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு**

ஔவியம் – பொறாமை வார்த்தைகளை, பேசுதல் – (ஒருவன்) பேசுதல், ஆக்கத்திற்கு – (அவன்) செல்வத்துக்கு, அழிவு – கேட்டைத் தருவதாகும். 12

**அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு**

அஃகமும் – தானியத்தையும், காசும் – திரவியத்தையும், சிக்கெனத் தேடு – நீ வீண்செலவு செய்யாமற் சம்பாதி. 13

**கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை**

கற்பு எனப்படுவது – (பெண்களுக்குக்) கற்பென்று சொல்லப்படுவது, சொல் – (கணவர்) சொல்லுக்கு, திறம்பாமை – தப்பி நடவாமையாம். 14

**காவல் தானே பாவையர்க் கழகு**

காவல் தானே – (கற்புக்கு அழிவு வராமல் தம்மைக்) காத்துக் கொள்வதுதானே, பாவையர்க்கு – பெண்களுக்கு, அழகு – அழகாகும். 15

**கிட்டா தாயின் வெட்டென மற**

கிட்டாது ஆயின் — (இச்சித்த ஒரு பொருள்) கிடையாதானல், வெட்டென — சீக்கிரத்திலே தானே, மற — (அப்பொருளை) மறந்துவிடு. 16

**கீழோ ராயினுந் தாழ வுரை**

கீழோர் ஆயினும் — (கேட்பவர் உனக்குக்) கீழ்ப்பட்டவராயிருந்தாலும், தாழ — (உன் சொல்) வணக்க முடையதாய் இருக்கும்படி, உரை — (நீ அவருடன்) பேசு. 17

**குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை**

குற்றம்—குற்றங்களை, பார்க்கின்—(ஆராய்ந்து) பார்த்தால், சுற்றம் — உறவாவோர். இல்லை — (ஒருவரும்) இல்லை. 18

**கூரம் பாயினும் வீரியம் பேசேல்**

கூர் அம்பு ஆயினும் — (உன் கையிலிருக்கிறது) கூர்மை பொருந்திய அம்பானலும், வீரியம் — வீரத் தன்மையை, பேசேல் — (நீ வீணுகப்) பேசாதே. 19

**கெடுவது செய்யின் விடுவது கருமம்**

கெடுவது — கெடுவதை, செய்யின்—(தன் சினேகிதன்) செய்தால், விடுவது—(அவன் சினேகத்தை) விடுவதே, கருமம் — (விவேகிக்கு) நற்செய்கையாம். 20

**கேட்டி லுறுதி கூட்டு முடைமை**

கேட்டில் - (கைப்பொருள்) இழந்த காலத்திலே, உறுதி — மனந் தளராமை, உடைமை — முன்போல அப்பொருளுடையவனுந் தன்மையை, கூட்டும் — சேர்க்கும், 21

**கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி**

கைப்பொருள் தன்னில் — கையிலிருக்கின்ற பொருளைப் பார்க்கிலும், மெய்ப்பொருள் — அழியாத பொருளாவது, கல்வி — கல்வியேயாம். 22

**கொற்றவ னறித லுற்றிடத் துதவி**

கொற்றவன் — அரசனானவன், அறிதல் — (ஒருவனை) அறிந்திருத்தல், உற்ற இடத்து — (அவனுக்கு ஆபத்து) வந்த இடத்து, உதவி — உதவியாகும். 23

**கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு**

கோட்செவி — கோள் கேட்குங் குணத்தோனுடைய காதிலே, குறளை — (பிறர்மேல் ஒருவன் வந்து சொன்ன) கோளானது, காற்றுடன் — காற்றுடனே சேர்ந்த, நெருப்பு — நெருப்பைப்போல மூளும். 24

**கௌவை சொல்லி னெவ்வருக் கும்பகை**

கௌவை — (பிறர்மேலே) பழிச் சொல்லுகளை, சொல்லின் - (ஒருவன்) சொல்லினால், எவ்வருக்கும் - எல்லாருக்கும், பகை — அவன் பகையாவான். 25

**சந்ததிக் கழகு வந்திசெய் யாமை**

சந்ததிக்கு — தன் வமிசம் பெருகுதற்கு, அழகு — அழகாவது, வந்தி — மலடியாக, செய்யாமை — செய்யாமல் (தன் மனையாளோடு) கூடி வாழ்தலாம். 26

**சான்றோ ரென்கை ஈன்றோட் கழகு**

சான்றோர் என்கை — (தன் புத்திரரைக்) கல்வியறிவால் நிறைந்தோர் என்று (கற்றவர்) சொல்லுகிறது, ஈன்றோட்கு — பெற்றவளுக்கு, அழகு — அழகாகும். 27

**சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு**

சிவத்தை — (முதற் பொருளாகிய) பரம சிவத்தை, பேணின் — (ஒருவன்) வழிபட்டால், தவத்திற்கு — அவன் செய்யும் தவத்திற்கு, அழகு— அழகாம். 28

**சீரைத் தேடி னேரைத் தேடு**

சீரை — சௌக்கியத்தை, தேடின் — (உனக்குத்) தேடுவாயானுல், ஏரை — பயிரிடுந் தொழிலை, தேடு — நீ தேடிக்கொள்ளு. 29

**சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்**

சுற்றத்திற்கு — உறவினருக்கு, அழகு — அழகாவது, சூழ — (சுபாசுப கருமங்களிலே பலரும் வந்து) சூழ, இருத்தல் — (சமீபங்களிலே) குடியிருக்கையாகும். 30

**சூதும் வாதும் வேதனை செய்யும்**

சூதும் — சூதாடுதலும், வாதும் — தருக்கம் பேசுதலும், வேதனை — வருத்தத்தை, செய்யும் — உண்டாக்கும். 31

**செய்தவ மறந்தாற் கைதவ மாளும்**

செய்தவம் — செய்யுந் தவத்தை, மறந்தால் — (ஒருவன்) மறந்தால், கைதவம் — பொய்யாகிய அஞ்ஞானமானது, ஆளும் — (அவனை அடிமை கொண்டு) ஆளும். 32

**சேமம் புகினும் யாமத் துறங்கு**

சேமம் — காவற்கூடத்திலே, புகினும் — போய் (ஒரு வேலையும் இல்லாமல்) இருந்தாலும், யாமத்து — ஏழரை நாழிகைக்குப்பின், உறங்கு — நீ நித்திரை பண்ணு. 33

**சையொத் திருந்தா லையமிட் டுண்**

சை ஒத்து இருந்தால் — பொருள் ஒத்திருந் தால், ஐயம் இட்டு — பிச்சை இட்டு, உண் — நீயும் உண்ணு. (சை — பொருள்) 34

**சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்**

சொக்கர் என்பவர் — பொன்னுடையவர் என்று சொல்லப்படுவோர், அத்தம் — (அறமும் இன்பமுமாகிய மற்றைப்) புருஷார்த்தங்களையும், பெறுவர் — பெறுவார். (சொக்கு — பொன்.) 35

**சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்**

சோம்பர் என்பவர் — சோம்பலுடையவர் என்று சொல்லப்படுவோர், தேம்பி — (வறுமை யினால்) வருந்தி, திரிவர் — (இரந்து) திரிவார். 36

**தந்தைசொன் மிக்க மந்திர மில்லை**

தந்தை — பிதாவினுடைய, சொல் — சொல் லுக்கு, மிக்க — மேற்பட்ட, மந்திரம் — (பலனைத் தரும்) மந்திரமானது, இல்லை — (ஒருவனுக்கு எந் நூலிலும்) இல்லை. 37

**தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை**

தாயின் — மாதாவைப் பார்க்கிலும், சிறந்த — சிறப்புப் பொருந்திய, ஒரு கோயிலும் — ஒரு ஆலயமும், இல்லை — (ஒருவனுக்கு எங்கும்) இல்லை. 38

**திரைகட லோடியுந் திரவியந் தேடு**

திரைகடல் — அலை பொருந்திய கடலிலே, ஓடியும் — (தோணியேறித் தூரதேசங்களிற்) போயாயினும், திரவியம் — திரவியத்தை, தேடு — நீ சம்பாதி. 39

**தீராக் கோபம் போரா முடியும்**

தீரா — நீங்காத, கோபம் — கோபமானது, போரா — (பின்பு) சண்டையாக, முடியும் — முடிந்து விடும். 40

**துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு**

துடியா — (தன் கணவனுக்குத் துன்பம் வந்த போது) மனம் பதையாத, பெண்டிர் — பெண்கள், மடியில் — (அவர்) வயிற்றில், நெருப்பு — அக்கினிக்கு ஒப்பாவார். 41

**தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்**

தூற்றும் — (தன் கணவன்மேற் குற்றஞ்சொல்லித்) தூற்றுகிற, பெண்டிர் — பெண்களை, கூற்று எனத் தகும் — (அவனுக்கு) யமன் என்று எண்ணத் தகும். 42

**தெய்வம் சீறிற் கைதவ மாளும்**

தெய்வம் — தெய்வமானது, சீறின் — (ஒருவனைக்) கோபித்தால், கைதவம் — (அவனுக்குக்) கைகூடியிருந்த தவமும், மாளும் — (பயன் கொடாமல்) அழியும். 43

**தேடா தழிக்கிற் பாடா முடியும்**

தேடாது — (ஒருவன் வருந்திச்) சம்பாதியாமல், அழிக்கின் — (இருக்கிற பொருள்களைச்) செலவழித்தால், பாடா முடியும்— (அவனுக்குப்) பின் வருத்தமாக முடியும். 44

**தையும் மாசியும் வையகத் துறங்கு**

தையும்—தை மாதத்திலும், மாசி — மாசி மாதத்திலும், வை அகத்து — (பனி வருத்தந் தராத) வைக்கோலினால் வேய்ந்த வீட்டிலே, உறங்கு — நீ நித்திரை செய். 45

## தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது

தொழுது — (ஒருவரைச்) சேவித்து, ஊண் — உண்ணும் உணவினது, சுவையின் — சுவையைப் பார்க்கிலும், உழுது — உழுது பயிர் செய்து, ஊண் — உண்ணும் உணவின் சுவை, இனிது — இன்பந் தருவதாகும். 46

## தோழ னோடு மேழைமை பேசேல்

தோழனோடும் — (உன்) சிநேகிதனோடாயினும், ஏழைமை — (உனக்கு இருக்கின்ற) சிறுமையை, பேசேல் — (நீ எப்படிப்பட்ட வேளையிலும்) பேசாதே. 47

## நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்

நல் இணக்கம் அல்லது — நல்ல சகவாசம் அல்லாதது, அல்லல்—துன்பத்தையே, படுத்தும் — உண்டாக்கும். 48

## நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை

நாடு எங்கும் — தேசமெங்கும், வாழ — செழித்திருக்குமாயின், கேடு ஒன்றும் — (திருட்டு முதலாகிய) கேடொன்றும், இல்லை — இல்லையாம். 49

## நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை

நிற்க — (ஒருவன் தகுதியான வழியில்) நிலை பெறும்படி, கற்றல் — கற்றலாவது, சொல்— (தான் சொல்லும்) சொல்லுகளிலே, திறம்பாமை- (ஒரு போதும்) தப்பி நடவாமையாம். 50

## நீரகம் பொருந்திய வூரகத் திரு

நீர் — நீர்வளமானது, அகம் — தனக்குள்ளே, பொருந்திய — (மழையில்லாத பஞ்சத்திலும்) அமைந்த, ஊரகத்து — ஊரினிடத்தே, இரு — நீ குடியிரு. 51

**நுண்ணிய கருமமு மெண்ணித் துணி**

நுண்ணிய — சிறிய, கருமமும் — தொழிலையும், எண்ணி — (முடிக்கும் வழியை நன்றாக) ஆலோசித்து, துணி — (நீ முன்பு அதைச்) செய்யத் துணி. 52

**நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு**

நூல்—தருமநூலிலே சொல்லப்பட்ட, முறை— (விதிகளின்) முறையை, தெரிந்து — அறிந்து, சீலத்து-நல்லொழுக்க வழியில், ஒழுகு-நீ நட. 53

**நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை**

நெஞ்சை — (தம்முடைய) மனசுக்கு, ஒளித்த — மறைக்கப்பட்ட, ஒரு வஞ்சகம் — யாதொரு வஞ்சனையும், இல்லை — (யாவரிடத்திலும்) இல்லையாம். 54

**நேரா நோன்பு சீரா காது**

நேரா - மனசினால் உடன்படாத, நோன்பு — தவமானது, சீர் ஆகாது - சீர்பெற முடியாது. 55

**நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்**

நைபவர் எனினும் — (கேட்போர் எதிர் பேசாமல்) வருந்துவோராயினும், நொய்ய — அற்ப வார்த்தைகளை, உரையேல் — நீ சொல்லாதே. 56

**நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்**

நொய்யவர் என்பவர் — (உருவத்தினாலே) சிறியவர் என்று இகழப்படுவோரும், வெய்யவர் ஆவர் — (செய்காரியத்தால்) யாவரும் விரும்புங் குணத்தையுடையவராவர். 57

**நோன்பென் பதுவே கொன்றுதின் ஞமை**

நோன்பு என்பது - தவம் என்று சொல்லப் படுவது, கொன்று - (ஒரு சீவனை) வதை செய்து, தின்னுமை - (அதன் மாமிசத்தை) தின்னுமையே யாம். 58

**பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்**

பண்ணிய - (ஒருவன்) செய்த, பயிரில் - விளை விஞலும் விளைவின்மையிஞலும், புண்ணியம்-(அவ னிடத்தே) புண்ணியம் இருத்தலும் இல்லாமை யும், தெரியும் - அறியப்படும். 59

**பாலோ டாயினுங் கால மறிந்துண்**

பாலோடு ஆயினும் - பாலோடு கூடிய அன்னத்தை உண்டாலும், காலம் அறிந்து - (உண்ணத் தகும்) காலத்தை அறிந்து, உண் - (நீ அதை) உண்ணு. 60

**பிறன்மனை புகாமை அறமெனத் தகும்**

பிறன் - பிறனுடைய, மனை - மனையாளிடத் தில், புகாமை - (இச்சித்துப்) போகாமையே, அறம் எனத் தகும் - (எல்லாத் தருமங்களினும் உயர்ந்த) தருமம் என்று சொல்லத் தகும். 61

**பீரம் பேணி பாரந் தாங்கும்**

பீரம் பேணி - முலைப்பால் குறைவற உண்டு வளர்ந்தவன், பாரம்-பாரமான சுமையை, தாங் கும் - சுமப்பான். (அதுபோல முன்னே காரணங் களைக் குறைவறக் கொண்டவன் பின்னே பெரிய காரியங்களையும் வருத்தமின்றி முடிப்பான்.) 62

**புலையுங் கொலையுங் களவுந் தவிர்**

புலையும்-புலால் உண்ணுதலையும், கொலையும்-சீவ வதை செய்தலையும், களவும்-பிறர் பொருளைத் திருடுதலையும், தவிர்-(நீ செய்யாது)ஒழித்துவிடு. 63

**பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்**

பூரியோர்க்கு - கீழ்மக்களுக்கு, சீரிய - சிறப்பாகிய, ஒழுக்கம் - நடையானது, இல்லை - (உண்டாதல்) இல்லையாம் 64

**பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்**

பெற்றோர்க்கு - (மெய்ஞ்ஞானத்தைப்) பெற்றவர்க்கு, சுற்றமும்-உறவினர்மேல் ஆசையும், சினமும் - (மற்றவர்மேல்) வெறுப்பும், இல்லை - இல்லையாகும். 65

**பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்**

பேதைமை என்பது - மடம் என்று சொல்லப்படுங் குணமானது, மாதர்க்கு - பெண்களுக்கு, அணிகலம் - ஆபரணமாகும்.

மடம் - அறிந்தும் அறியார்போன் றிருத்தல். 66

**பையச் சென்றால் வையந் தாங்கும்**

பைய-மெள்ள, சென்றால்-(ஒருவன் தகுதியான வழியிலே) நடந்தால், வையம்-பூமியிலுள்ளோர், தாங்கும்-(அவனை) மேலாகக் கொள்வர். 67

**பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்**

பொல்லாங்கு என்பவை - தீங்குகள் என்று சொல்லப்பட்டவைகளாகிய, எல்லாம் - எல்லாவற்றையும், தவிர்-(நீ செய்யாது) ஒழித்துவிடு. 68

**போனக மென்பது தானுழந் துண்டல்**

போனகம் என்பது-போசனம் என்று சொல்லப் படுவது, தான் உழந்து—தான் பிரயாசைப்பட்டுச் சம்பாதித்து, உண்டல்-உண்ணுதலாம். 69

**மருந்தே யாயினும் விருந்தோ டுண்**

மருந்தே ஆயினும்- (உண்ணப்படுவது கிடைத் தற்கரிய) தேவாமிர்தமேயானாலும், விருந்தோடு- வந்த விருந்தாளிகளோடு கூடி, உண்-நீ உண்ணு. 70

**மாரி யல்லது காரிய மில்லை**

மாரி யல்லது—மாரியினால் அல்லாமல், காரியம்- யாதொரு காரியமும், இல்லை - யாருக்கும் நடப்பது இல்லை. 71

**மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை**

மின்னுக்கு எல்லாம்-வானத்திற் காணப்பட்ட மின்னலுக்கு எல்லாம், பின்னுக்கு மழை – (அப் பொழுது மழையில்லையாயினும்) பின்னே மழை உண்டாகும். (அதுபோல ஒருவனிடத்திலே காணப் பட்ட நல்ல முயற்சிகளுக்கெல்லாம் அப்போது பயன் இல்லையாயினும் பின்னே பயன் உண்டாகும்.) 72

**மீகாம னில்லா மரக்கல மோடாது**

மீகாமன் – தன்னை ஓட்டத்தக்க மாலுமி, இல்லா-இல்லாத, மரக்கலம் – தோணியானது, ஓடாது – கடலிலே செவ்வையாக ஓடாது. (அது போல நல்வழியில் நடத்தும் தலைவனில்லாத குடும் பமும் வேந்தனில்லாத நாடும் முதலியன செவ்வை யாக நடைபெறமாட்டா.) 73

**முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்**

முற்பகல் - ஒரு முகூர்த்த காலத்தின் முன் பங்கிலே, செய்யின் - (பிறனுக்குத் தீங்கு) செய்தால், பிற்பகல்-அதன் பின்பங்கிலே, விளையும்-(செய்தவனுக்கு அத் தீங்கு தானே) உண்டாகும். (பகல்-முகூர்த்தம்.) 74

**மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்**

மூத்தோர்-(கல்வியறிவினுலே) முதிர்ந்தவர், சொன்ன - சொல்லிய, வார்த்தை - வார்த்தையானது, அமிர்தம்-தேவாமிர்தத்தைப்போலும். 75

**மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு**

மெத்தையில் - பஞ்சணையிலே, படுத்தல் - படுத்தலானது, நித்திரைக்கு-(ஒருவன் செய்கிற) நித்திரைக்கு, அழகு-அழகாகும். 76

**மேழிச் செல்வங் கோழை படாது**

மேழி - கலப்பை பிடித்து உழுது பயிர்செய்தலால் உண்டாகின்ற, செல்வம் - செல்வமானது, கோழைபடாது - ஒருபோதும் குறைவை அடையாது. 77

**மைவிழி யார்தம் மனையகன் றொழுகு**

மைவிழியார்தம்-மைதீட்டிய கண்ணையுடைய வேசிகளது, மனை - வீடுகளை, அகன்று ஒழுகு - நீ அணுகாமலே விலகி நட. 78

**மொழிவது மறுக்கி னழிவது கருமம்**

மொழிவது - கற்றோர் சொல்லுகின்ற உபாயத்தை, மறுக்கின்-கேளாமற் செய்தால், கருமம்-(ஒருவன் செய்யுந்) தொழில், அழிவது - கெடுவதாகும். 79

## மோன மென்பது ஞான வரம்பு

மோனம் என்பது — மௌன நிலை என்பது, ஞானம் — மெய்ஞ்ஞானத்துக்கு, வரம்பு — எல்லையாகும். 80

## வளவ னாயினு மளவறிந் தளித்துண்

வளவன் ஆயினும்-(சம்பத்திலே) சோழனுக்கு ஒப்பானவனாய் இருந்தாயானாலும், அளவு — (பொருள் வரவின்) அளவை, அறிந்து — தெரிந்து, அளித்து — கொடுத்து, உண் — அனுபவி. 81

## வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்

வானம் — மழையானது, சுருங்கின் — பெய்தல் குறையுமாயின், தானம் — (சற்பாத்திரருக்குக்) கொடுக்கிற கொடையும், சுருங்கும் — குறைவுபடும். 82

## விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்

விருந்து இல்லோர்க்கு—விருந்தினரை உபசரித்தல் இல்லாதவருக்கு, பொருந்திய—தாம் பொருந்திய, ஒழுக்கம் — இல்லறம், இல்லை — (இருந்ததாயினும்) இல்லாததற்குச் சமானமாகும். 83

## வீரன் கேண்மை கூரம் பாகும்

வீரன்—வீரனுடைய, கேண்மை—சிநேகம் (ஒருவனுக்கு இருந்தால்), கூர் அம்பு ஆகும்—(அவனுக்கு அதுவே தன் பகையை வெல்லுதற்குக்) கூர்மை பொருந்திய அம்பாகும். 84

## உரவோ ரென்கை இரவா திருத்தல்

உரவோர் என்கை—வல்லவர் என்று சொல்லப்படுதல், இரவாது (தமக்குச் சிறுமைவந்த காலத்திலும் பிறரை) இரவாமல், இருத்தல் — இருக்கையாம். 85

**ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு**

ஊக்கம் - (செய்தொழிலிலே) மனந் தளராமையை, உடைமை - (ஒருவன்) உடையனாதல், ஆக்கத்திற்கு - அவன் செல்வத்திற்கு, அழகு- அழகாகும். 86

**வெள்ளைக் கில்லைக் கள்ளச் சிந்தை**

வெள்ளைக்கு - களங்கமில்லாத பரிசுத்த குணமுடையவனிடத்து, கள்ளம் - வஞ்சனை பொருந்திய, சிந்தை-நினைப்பானது, இல்லை-இல்லை. 87

**வேந்தன் சீறி ளாந்துணை யில்லை**

வேந்தன் - அரசனானவன், சீறின் - ஒருவனைக் கோபித்தால், ஆம் - (அப்போது) அவனுக்கு (உதவி) ஆகின்ற, துணை - துணைவர், இல்லை (ஒருவரும்) இல்லை. 88

**வையந் தோறுந் தெய்வந் தொழு**

வையந்தோறும் - பூமியிலுள்ள தலங்கள் தோறும் (போய்), தெய்வம் - கடவுளை, தொழு- நீ தரிசித்து வணங்கு. 89

**ஒத்த விடத்து நித்திரை கொள்**

ஒத்த இடத்து - (மேடு பள்ளம் இல்லாமற்) சமமான இடத்திலே, நித்திரை கொள்-(நீ படுத்து) நித்திரை கொள்ளு. 90

**ஓதாதார்க் கில்லை உணர்வொடு மொழுக்கம்**

ஓதாதார்க்கு - (அறிவு நூல்களைப்) படியாதவர்க்கு, உணர்வொடும்-அறிவுடனே, ஒழுக்கம்- நல்ல நடையும், இல்லை-(உண்டாதல்) இல்லை. 91

௨

# உலகநீதி

## உரையுடன்

காப்பு

உலக நீதி புராணத்தை யுரைக்கவே
கலைக ளால்வருங் கரிமுகன் காப்பு.

பதவுரை: உலக நீதி புராணத்தை – உலக நீதியாகிய பழைய முறைமைகளை, உரைக்க – யான் கூறுவதற்கு, கலைகள் ஆய்வு அரும் – வேதம் முதலிய நூல்களாலும் ஆராய்ந்து காண்பதற்கு அரிய, கரிமுகன் காப்பு – யானை முகத்தையுடைய விநாயகக் கடவுள் காப்பாவார். என்றவாறு.

### சூத்திரம்

ஓதாம லொருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

ப – ரை: ஓதாமல் ஒருநாளும் – (நூல்களைப்) படிக்காமல் ஒருநாளாவது, இருக்கவேண்டாம் – (நீ) இருக்கக்கூடாது; ஒருவரையும் பொல்லாங்கு – எவரையும் தீய சொற்களால், சொல்லவேண்டாம் – நிந்திக்காதே; மாதாவை ஒரு நாளும் – தாயை ஒருபொழுதும், மறக்க வேண்டாம் –

மறவாதே ; வஞ்சனைகள் செய்வாரோடு – கபடச் செயல்களைச் செய்யுங் கீழ்மக்களுடன், இணங்க வேண்டாம் – சேராதே ; போகாத இடந்தனிலே – தகாத இடத்திலே, போகவேண்டாம் – போகாதே; போகவிட்டுப் புறம் சொல்லி – (ஒருவர்) உன்னிடம் வந்து போன பின்னர் அவரைப்பற்றி இழிவாகக் கூறி, திரியவேண்டாம்–அலையாதே; வாகு ஆரும்– தோள்வலி நிறைந்த, குறவருடை – குறவருடைய (மகளாகிய), வள்ளி பங்கன் – வள்ளிநாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனாகிய, மயில் ஏறும் பெருமானை – மயிலின் மீது ஏறி நடத்தும் முருகக்கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் – மனமே வாழ்த்துவாயாக. எ – று. 1

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை யொருநாளுங் கெடுக்க வேண்டாம்
மஞ்சாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

ப – ரை : நெஞ்சு ஆர பொய் தன்னை – மனப் பூர்வமாகப் பொய்யை, சொல்லவேண்டாம் – சொல்லாதே; நிலை இல்லா காரியத்தை–உறுதியில்லாத காரியத்தை, நிறுத்தவேண்டாம் – தாபிக்க வேண்டாம்; நஞ்சுடனே – விடத்தையுடைய பாம்பு போன்றவர்களுடனே, ஒரு நாளும் – ஒரு பொழுதும், பழகவேண்டாம் – சேர்ந்து பழகாதே; நல் இணக்கம் இல்லாரோடு–நல்லநடத்தை நட்பு இல்லாதவர்களுடன், இணங்கவேண்டாம் - நட்புக் கொள்ளாதே, அஞ்சாமல் – பயமில்லாமல், தனி

வழி போகவேண்டாம்—தனிமையாக வழிச் செல் லாதே; அடுத்தவரை ஒரு நாளும் — உன்னிடத்து வந்துசேர்ந்தவரை ஒருபொழுதும், கெடுக்கவேண் டாம்—கெடுக்காதே; மஞ்சு ஆரும் குறவருடை — வலிமை மிகுந்த குறவருடைய (மகளாகிய), வள்ளி பங்கன் — வள்ளிநாய்ச்சியாரைப் பக்கத்தில் உடை யவனுகிய, மயில் ஏறும் பெருமாளை — மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்த் தாய்—மனமே (நீ) வாழ்த்துவாயாக. எ — று. 2

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
  மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணுமற் புதைக்க வேண்டாம்
  தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி யல்லலையுந் தேட வேண்டாம்
  சினத்திருந்தார் வாசல்வழிச் சேறல் வேண்டாம்
வணந்தேடுங் குறவருடை வள்ளி பங்கன்
  மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

**ப — ரை :** மனம் போன போக்கு எல்லாம் — உள்ளம் சென்றபடியெல்லாம், போகவேண்டாம் — செல்லாதே; மாற்றானை உறவு என்று — பகைவனை உறவினன் என்று, நம்பவேண்டாம் — நம்பாதே; தனம் தேடி உண்ணுமல்—பொருளை (வருந்திச்) சம் பாதித்துச் செலவிடாமல், புதைக்கவேண்டாம் — மண்ணிற் புதைக்காதே; தருமத்தை ஒருநாளும் — அறஞ்செய்தலை ஒருபொழுதும், மறக்கவேண் டாம் — மறக்காதே, சினம் தேடி — கோபத்தை அடைந்து, அல்லலையும் — (அதனால்) விளையும் துன்பத்தினையும், தேடவேண்டாம் — தேடாதே; சினந்து இருந்தார் வாசல் வழி — கோபித்திருந்தா ருடைய வாசல் வழியாகவும், சேரவேண்டாம் -

செல்லாதே ; வனம் தேடும் குறவருடை—காட்டின் கண் (விலங்கு முதலியன) தேடித்திரியும் குறவருடைய (மகளாகிய), வள்ளி பங்கன் — வள்ளி நாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனுகிய, மயில் ஏறும் பெருமாளை — மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக்கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் — மனமே வாழ்த்துவாயாக. எ — று. 3

குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
  கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்
கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்
  கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனே டெதிர்மாறு பேச வேண்டாம்
  கோயிலில்லா ஊரிற்குடி யிருக்க வேண்டாம்
மற்றுநிக ரில்லாத வள்ளி பங்கன்
  மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

ப — ரை : குற்றம் ஒன்றும் பாராட்டி—(ஒருவர் செய்த) தவறை மட்டும் எடுத்துச் சொல்லி, திரிய வேண்டாம் — அலையாதே; கொலைகளவு செய்வாரோடு — கொலையும் திருட்டும் செய்கின்ற தீயோருடன், இணங்க வேண்டாம் — சேராதே; கற்றவரை ஒருநாளும் — (கல்விப்) பண்டிதர்களை ஒரு பொழுதும், பழிக்கவேண்டாம்—பழிக்காதே; கற்பு உடைய மங்கையரை — கற்புடைய பெண்களை, கருத வேண்டாம்—இச்சிக்க வேண்டாம்; கொற்றவனேடு — அரசனேடு, எதிர் — எதிரே நின்று, மாறு பேசவேண்டாம் — எதிர்ப்பான சொற்களைப் பேசாதே ; கோயில் இல்லா ஊரில் — கோயில் இல்லாத ஊரில், குடி இருக்க வேண்டாம் — குடியிருக்காதே ; மற்று நிகர் இல்லாத — பிறர் எவரும் ஒப்பாகாத, வள்ளி பங்கன்—வள்ளிநாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனுகிய, மயில் ஏறும் பெரு

மாலை-மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக்கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் – மனமே வாழ்த்துவாயாக. எ – று. 4

வாழாமற் பெண்ணைவைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றமொன்றும் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

ப – ரை : பெண்ணை வைத்து – மனையாளை (வீட்டில் துன்புற)வைத்து, வாழாமல்–(அவளோடு கூடி) வாழாமல், திரியவேண்டாம்–அலையாதே ; மனையாளைக் குற்றம் ஒன்றும் – மனைவியின்மேல் குற்றமான சொல் யாதொன்றும், சொல்லவேண்டாம்–சொல்லாதே; வீழாத படுகுழியில்–(மறுபடியும்) எழுந்திருக்க முடியாத (துன்பப்) படுகுழியில், வீழ வேண்டாம் – வீழ்ந்துவிடாதே; வெஞ்சமரில் புறங் கொடுத்து–கொடிய போரில் எதிர் நின்று சண்டை செய்யாமல் முதுகுகாட்டி, மீளவேண்டாம்–திரும்பிவாராதே; தாழ்வான குலத்துடன்–தாழ்ந்த இழிவான செயல்கள் புரிவாரோடு, சேர வேண்டாம் – கூடாதே; தாழ்ந்தவரை – ஏழைகள் மீது, பொல்லாங்கு–தீங்கு, சொல்லவேண்டாம் – சொல்லாதே; வாழ்வு ஆரும் குறவருடை – செல்வம் நிறைந்த குறவருடைய (மகளாகிய), வள்ளி பங்கன் – வள்ளிநாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனாகிய, மயில் ஏறும் பெருமானை–மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக்கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய்–மனமே வாழ்த்துவாயாக. எ – று. 5

வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்.
வாத்தியார் கூலியைவைத் திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோ டிணங்க வேண்டாம்
சேர்த்தபுக ழாளனொரு வள்ளி பங்கன்
திருக்கைவே லாயுதனைச் செப்பாய் நெஞ்சே.

ப - ரை : வார்த்தை சொல்வார் வாய் பார்த்து – வாயாடிகளின் வாயைப் பார்த்துக் கொண்டு, திரியவேண்டாம் – அவரோடுகூட அலையாதே; மதியாதார் தலைவாசல் – உன்னை மதிக்காதவருடைய கடைவாயிலில், மிதிக்கவேண்டாம் – அடியெடுத்து வைக்காதே; மூத்தோர் சொல்–பெரியோர் கூறுகின்ற, வார்த்தைதனை – சொற்களை, மறக்கவேண்டாம்–மறவாதே; முன்கோபக்காரரோடு–முன்கோப முடையாருடனே, இணங்க வேண்டாம் – சேராதே ; வாத்தியார் கூலியை – உபாத்தியாயரின் சம்பளத்தை, வைத்திருக்க வேண்டாம் – (கொடுக்காமல்) வைத்துக் கொள்ளாதே; வழிபறித்துத் திரிவாரோடு – வழி மடக்கித் திரிந்து பொருள் தேடுவாரோடு, இணங்கவேண்டாம் – சேராதே ; சேர்த்த புகழாளன் – ஈட்டிய புகழுடையவனாகிய, ஒரு – ஒப்பற்ற, வள்ளி பங்கன் – வள்ளியம்மையாரைப் பக்கத்தில் உடையவனாகிய, திருகை வேலாயுதனை– அழகிய கையின்கண் வேற்படையையுடைய முருகக்கடவுளை, நெஞ்சே செப்பாய் – மனமே புகழ்வாயாக. எ – று. 6

கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை யொருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்திற் போக வேண்டாம்
பொதுநிலத்தி லொருநாளும் இருக்க வேண்டாம்
இருதார மொருநாளுந் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனங்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே.

ப—ரை: கருமங்கள் கருதாமல் — (செய்யத் தக்க) காரியங்கள் (செய்யும் உபாயத்தை) யோசியாமல், முடிக்க வேண்டாம் — முடிக்க முயலாதே; அழிவு கணக்கை ஒருநாளும் — பொய்க் கணக்கை ஒருபொழுதும், பேசவேண்டாம் — பேசாதே; பொருவார் — போர்செய்வாருடைய, போர்க் களத்தில் — போர் (நடக்கும்) இடத்தின்கண், போகவேண்டாம் — போகாதே; பொது நிலத்தில் ஒருநாளும் — பொதுவாகிய இடத்தில் ஒருபொழுதும், இருக்க வேண்டாம் — (குடி) இராதே; இருதாரம் ஒருநாளும் — இரு மனைவியரை ஒரு பொழுதும், தேடவேண்டாம் — தேடிக்கொள்ளாதே; எளியாரை — ஏழைகளை, எதிரிட்டுக் கொள்ள வேண்டாம் — பகைத்துக் கொள்ளாதே; குருகு ஆரும்—பறவைகள் நிறைந்த, புனம்காக்கும்-தினைப்புனத்தைக் காத்த, ஏழை பங்கன் - வள்ளி நாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனாகிய, குமரவேள் பாதத்தை — குமரவேளின் திருவடியை, நெஞ்சே கூறாய் — மனமே புகழ்வாய். எ — று. 7

சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி யொருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றுரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்
வாராருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

ப—ரை: சேராத இடந்தனிலே — சேரக் கூடாத இடங்களில், சேரவேண்டாம் — போக வேண்டாம்; செய்த நன்றி — ஒருவர் செய்த உதவியை, ஒருநாளும் — ஒருபொழுதும், மறக்க வேண்டாம் — மறக்காதே; ஊரோடும் குண்டுணி யாய் — ஊர்முழுவதும் கோள் சொல்பவனுக, திரிய வேண்டாம் — அலையாதே; உற்றுரை — உற வினரை, உதாசினங்கள் சொல்ல வேண்டாம் — இகழ்ச்சியாகக் கூறவேண்டாம்; பேர் ஆன — புகழ் அடைதற்குக் காரணமாகிய, காரியத்தை — காரி யத்தை, தவிர்க்கவேண்டாம் — (செய்யாது) விட வேண்டாம்; பிணைபட்டுத் துணைபோகி — (ஒருவ னுக்கு) உடன்பட்டுத் துணையாகச் சென்று, திரிய வேண்டாம் — அவன் செல்லும் கெட்ட வழிக்கெல் லாம் போய் அலையாதே; வார் ஆரும் குறவர் உடை — பெருமை நிறைந்த குறவருடைய (மக ளாகிய), வள்ளி பங்கன் — வள்ளிநாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனுகிய, மயில் ஏறும் பெரு மானை — மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் — மனமே வாழ்த்து வாயாக. எ — று. 8

மண்ணினின்று மண்ணோரஞ் சொல்ல வேண்டாம்
மனஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரிய வேண்டாம்
கண்ணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக்கட் டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
மண்ணளந்தான் தங்கையுமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

ப—ரை: *மண்ணில் நின்று—நிலத்தில் நின்று, மண் ஓரம்—மண்ணைப்பற்றி ஒருதலைச் சார்பாக, சொல்லவேண்டாம்—பேசாதே; மனம் சலித்து—உள்ளச் சலிப்பினால், சிலுகிட்டு—(யார்மாட்டும்) சண்டையிட்டு, திரியவேண்டாம்—அலையாதே; கண் அழிவு செய்து—அருளை அழித்து, துயர் காட்ட வேண்டாம்—பிற (உயிர்களுக்குத்) துன்பஞ் செய்யாதே; காணாத கட்டுவார்த்தையை—காணாதவற்றைப்பற்றிய கட்டுவார்த்தைகளை, உரைக்க வேண்டாம்—சொல்லாதே; புண்பட வார்த்தைதனை—(கேட்போர் மனம்) புண்படுமாறு சொற்களை, சொல்லவேண்டாம்—சொல்லாதே; புறம் சொல்லித் திரிவாரோடு—புறங்கூறி அலைபவருடன்; இணங்கவேண்டாம்—சேராதே; மண் அளந்தான்—நிலத்தை (மூவடியால்) அளந்த திருமாலுக்கு, தங்கை உமை—தங்கையாகிய உமாதேவிக்கு, மைந்தன் எம்கோன்—மகனும் எமக்குத் தலைவனும் ஆகிய, மயிலேறும் பெருமானை—மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக்கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய்—மனமே வாழ்த்துவாயாக. எ—று.* 9

மறம்பேசித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்

இந்றதாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றுரை நத்த வேண்டாம்
குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூருய் நெஞ்சே.

ப — ரை : மறம்பேசித் திரிவரோடு-வீரமொழி கூறி (போருக்கு) அலைபவனுடன், இணங்க வேண்டாம்—சேராதே; வாதாடி அழிவு வழக்கு — வாது கூறிக் கெடு வழக்கு, சொல்ல வேண்டாம்—கூருதே; திறம் பேசிக் கலகம் இட்டு — வலிமை கூறிக் கலகம் செய்து, திரியவேண்டாம் — அலையாதே ; தெய்வத்தை ஒருநாளும் — இறைவனை ஒருபொழுதும், மறக்க வேண்டாம் — மறக்காதே; இறந்தாலும் பொய்தன்னை — (கூருதிருப்பின்) இறக்க நேரிட்டாலும் பொய்யை, சொல்ல வேண்டாம்—சொல்லாதே; ஏசல் இட்ட உற்றுரை — இகழ்ச்சி செய்த உறவினரை, நத்த வேண்டாம் — விரும்பாதே; குறம்பேசி வாழ்கின்ற — குறிசொல்லி வாழும் (குடியிற் பிறந்த), வள்ளி பங்கன் — வள்ளிநாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனுகிய, குமரவேள் நாமத்தை — முருகவேளின் பெயர்களை, நெஞ்சே கூருய்—மனமே சொல்லித் துதிப்பாயாக எ—று. 10

அஞ்சுபேர் கூலியைக்கைக் கொள்ள வேண்டாம்
அதுவேதிங் கென்னின்நீ சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணுன்நா விதன்றன் கூலி
சகலகலை யோதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவிச்சி கூலி
மகாநோவு தனைத்தீர்த்த மருத்துவன்றன் கூலி
இன்சொலுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானே ஏமன் றுனே.

ப - ரை : அஞ்சுபேர் கூலியை — ஐவருடைய கூலியை, கைக்கொள்ளவேண்டாம் — கைப்பற்ற வேண்டாம் (கொடுத்துவிட வேண்டும்); அது ஏது என்னின் — அக் கூலி யாது என்று கேட்பின், சொல்ல நீ கேளாய் — நான் சொல்கிறேன் நீ கேட்பாயாக; வண்ணான் கூலி — வண்ணானுடைய கூலியும், நாவிதன் கூலி — அம்பட்டன் கூலியும், சகல கலை ஓதுவித்த — பல கலைகளையும் படிப்பித்த, வாத்தியார் கூலி—ஆசிரியர் கூலியும், வஞ்சம் அற நஞ்சு அறுத்த — வஞ்ச மனப்பான்மை சிறிதும் இல்லையாக நச்சுக் கொடி அறுத்த, மருத்துவிச்சி கூலி—மருத்துவிச்சியின் கூலியும், மகா நோயைத் தீர்த்த- நீக்குதற்கு அரிய கொடிய நோயினை நீக்கிய, மருத்துவன் கூலி-வைத்தியன் கூலியுமாகிய; இவர் கூலி — இவர்கட்குக் கொடுக்கவேண்டிய கூலியை, தஞ்சமுடன் இன்சொல்லுடன் — அன்புடனும் இன்சொல்லோடும், கொடாதபேரை — கொடுக்காதவர்களை, ஏமன் — இயமன், ஏதுஏது— என்ன என்ன துன்பம், செய்வானோ — செய்வானோ, (நான் அறியேன்). எ — று. 11

கூறுக்கி யொருகுடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேற் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறுக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை யிகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

ப — **ரை :** ஒரு குடியை கூறு ஆக்கி — ஒரு குடும்பத்தைப் பிரித்து, கெடுக்க வேண்டாம் — கெடுக்காதே ; பூ தேடி — (கடவுளுக்குரியதான) பூவை (வலிந்து) தேடி ; கொண்டைமேல் — தலைமயிரில், முடிக்க வேண்டாம் - முடித்துக் கொள்ளாதே ;

தூறு ஆக்கித் தலையிட்டு — அவதூறு பேசி அதே வேலையாக இருந்து, திரிய வேண்டாம்—திரியாதே; துர்ச்சனராய்த் திரிவாரோடு — தீயவர்களாகி (ஊர்தோறும்) அலைபவருடன், இணங்க வேண்டாம் — சேராதே ; வீறுஆன தெய்வத்தை — பெருமையுடையனவாகிய தெய்வங்களை, இகழ வேண்டாம் — இகழாதே ; வெற்றி உள்ள பெரியோரை — மேன்மையுடைய பெரியோர்களை, வெறுக்க வேண்டாம் — வெறுக்காதே ; மாறுஆன குறவர் உடை — போரை விரும்பும் இயல்புடைய குறவர்களுடைய (மகளாகிய), வள்ளி பங்கன் — வள்ளி நாய்ச்சியாரைப் பக்கத்தில் உடையவனுகிய, மயில் ஏறும் பெருமாளை — மயிலின்மீது ஏறி நடத்தும் முருகக் கடவுளை, நெஞ்சே வாழ்த்தாய் — மனமே வாழ்த்துவாயாக. எ — று. 12

ஆதரித்துப் பலவகையாற் பொருளுந் தேடி
 அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலக நாதன்
 உண்மையாய்ப் பாடிவைத்த உலக நீதி
காதலித்துக் கற்றோருங் கேட்ட பேருங்
 கருத்துடனே நாடோறுங் களிப்பி னோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந் தேடிப்
 பூலோக முள்ளளவும் வாழ்வர் தாமே.

உலகநாதன் என்னும் புலவன் பல நல்வழியாற் பொருள் சேர்த்து, பின்பு, தமிழ் மொழியால் முருகக் கடவுளைப் பாட விரும்பி, அப்பெருமான் உணர்த்திய வாசகங்களாற் பாடிவைத்த 'உலகநீதி' என்னும் இந் நூலை விருப்புடன் கற்றவரும் கேட்டவரும் நல்லெண்ணமும், மனமகிழ்ச்சியும், ஞானமும், வாழ்வும்; புகழும் உடையவர்களாய் உலக முள்ளவரையும் வாழ்வார்கள். எ - று. 13

ௐ

# வெற்றிவேற்கை

## (நறுந்தொகை)

## உரையுடன்

### காப்பு

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

பதவுரை : *பிரணவப் பொருளாம் — பிரணவத்தின் பொருளாகிய, பெருந்தகை — பெரிய தகுதியையுடைய, ஐங்கரன் — ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக் கடவுளினது, அற்புத சரண் மலர் — அழகிய திருவடிகளாகிய தாமரைப்பூக்களை, தலைக்கு அணிவோம் — (யாம்) தலையிலே சூடுவோமாக என்றவாறு.*

### நூற்பயன்

**வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னுற்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.**

இ — ள் : *கொற்கை ஆளி — கொற்கை என்கிற நகரத்தை ஆள்பவனும், குலசேகரன் — பாண்டிய குலத்திற்கு மகுடம் போல்பவனுமாகிய, வெற்றி வேல் கை — வெற்றியையுடைய வேலைக் கையிலே கொண்ட, வீர ராமன் புகல் — அதிவீரராமன் என்னும் இயற்பெயரையுடைய பாண்டியன் சொன்ன, நல் தமிழ் தெரிந்த — நல்ல தமிழில் ஆராய்ந்தெடுக்கப்பட்ட, நறுந்தொகை தன்னுல் — நறுந்தொகை என்னும் நீதிமொழிகளாலே, குற்றம் களைவோர் — குற்றங்களை நீக்குவோர், குறைவு இலாதவர் — குறைவில்லாதவர்களாவார். எ — று.*

## நூல்

### எழுத்தறி வித்தவன் இறைவ னாவன்.

இ—ள்: எழுத்து அறிவித்தவன்—இலக்கண இலக்கிய நூல்களைக் கற்பித்த ஆசிரியன், இறைவன் ஆவன்—கடவுளைப்போல மதிக்கத்தக்கவனாவன். எ—று. 1

### கல்விக் கழகு கசடற மொழிதல்.

இ—ள்: கல்விக்கு அழகு—ஒருவன் கற்ற கல்விக்கு அழகாவது, கசடு அற—குற்றம் நீங்கும்படி, மொழிதல்—சொல்லுதலாம். எ—று. 2

### செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.

இ—ள்: செல்வர்க்கு அழகு—செல்வமுடையவர்களுக்கு அழகாவது, செழுங்கிளை—செழுமையாகிய தஞ் சுற்றத்தாரை, தாங்குதல்—பாதுகாத்தலாம். எ—று. 3

### வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.

இ—ள்: வேதியர்க்கு அழகு—பிராமணருக்கு அழகாவது, வேதமும்—வேதம் ஓதுதலும், ஒழுக்கமும்—நல்லொழுக்கத்திலே நிற்றலுமாம். எ—று. 4

### மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.

இ—ள்: மன்னவர்க்கு அழகு—அரசருக்கு அழகாவது, செங்கோல் முறைமை—செங்கோல் முறைப்படி அரசு செய்தலாம். எ—று. 5

### வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.

இ—ள்: வைசியர்க்கு அழகு—வணிகருக்கு அழகாவது, வளர்பொருள்—வளர்த்தற்குரிய பொருளை, ஈட்டல்—சம்பாதித்தலாம். எ—று. 6

### உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்.

இ—ள்: உழவர்க்கு அழகு—உழுது பயிர்செய்யும் வேளாளருக்கு அழகாவது, இங்கு—இவ்வுலகத்தில், உழுதூண்—உழுது பயிர்செய்து உண்ணுதலை, விரும்பல்—விரும்புதலாம். எ—று. 7

**மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.**

இ—ள்: மந்திரிக்கு அழகு—மந்திரிக்கு அழகாவது, வரும்பொருள்—பின்வருங் காரியங்களை, உரைத்தல்—ஆராய்ந்து (அரசனுக்குச்) சொல்லுதலாம். எ—று. 8

**தந்திரிக் கழகு தறுக ணாண்மை.**

இ—ள்: தந்திரிக்கு அழகு—சேனைத் தலைவனுக்கு அழகாவது, தறுகண் ஆண்மை—மறமாகிய ஆண்டகைமையாம். எ—று. 9

**உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.**

இ—ள்: உண்டிக்கு அழகு—(ஒருவன் உண்ணும்) உணவிற்கு அழகாவது, விருந்தோடு உண்டல்—விருந்தினரோடு உண்ணுதலாம். எ—று. 10

**பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.**

இ—ள்: பெண்டிர்க்கு அழகு—பெண்களுக்கு அழகாவது, எதிர் பேசாது இருத்தல்—(தன் கணவனோடு) எதிர்த்துப் பேசாமல் அடங்கியிருத்தலாம். எ—று. 11

**குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.**

இ—ள்: குலமகட்கு அழகு—நற்குலப் பெண்ணுக்கு அழகாவது, தன் கொழுநனை—தன் கணவனை, பேணுதல்—உபசரித்தலாம். எ—று. 12

**விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்.**

இ—ள்: விலைமகட்கு அழகு—வேசிக்கு அழகாவது, தன் மேனி மினுக்குதல்—தன்னுடைய சரீரத்தை அழகு செய்தலாம். எ—று. 13

**அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.**

இ—ள்: அறிஞர்க்கு அழகு—அறிவுடையோருக்கு அழகாவது, கற்று—நல்ல நூல்களைப் படித்து, உணர்ந்து—(அந்நூல்களிற் சொல்லிய ஒழுக்கங்களை) அறிந்து, அடங்கல்—அடங்கி நிற்றலாம். எ—று. 14

**வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.**

இ—ள்: வறிஞர்க்கு அழகு—தரித்திரருக்கு அழகாவது, வறுமையில் செம்மை—வறுமைக் காலத்திலும் ஒழுக்கங் கெடாமல் இருத்தலாம். எ—று. 15

**அதனல்,**
**தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை**
**வானுற வோங்கி வளம்பெற வளரினும்**
**ஒருவற் கிருக்க நிழலா காதே.**

இ—ள்: *அதனல்—அந்த நியாயத்தினல், பனையின்—பனைமரத்தினுடைய, தேம்படு திரள் பழத்து—இனிமையையுடைய திரண்ட பழத்திலுள்ள, ஒரு விதை—ஒரு (பெரிய) கொட்டை, வான் உற ஓங்கி—ஆகாயத்தைப் பொருந்த உயர்ந்து, வளம்பெற வளரினும்—செழுமையுற (மரமாக) வளர்ந்தாலும், ஒருவற்கு இருக்க நிழல் ஆகாது—(அம்மரம்) ஒருவனிருப்பதற்கும் நிழலைத் தராது. எ—று.* 16

**தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை**
**தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்**
**நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை**
**அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு**
**மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.**

இ—ள்: *தெள்ளிய ஆலின்—தெள்ளிய ஆலமரத்தினது, சிறு பழத்து ஒரு விதை—சிறு பழத்திலுள்ள ஒரு வித்தானது, தெள் நீர் கயத்துள்—தெளிந்த நீரையுடைய குளத்திலுள்ள, சிறு மீன் சினையினும்—சிறிய மீனினுடைய முட்டையிலும், நுண்ணிதேயாயினும்—சிறிதாயிருப்பினும் (அது மரமாக வளருமாயின்), அண்ணல் யானை—பெருமை பொருந்திய யானையும், அணிதேர்—அழகிய தேரும், புரவி—குதிரையும், ஆள்—காலாட்களுமாகிய, பெரும் படையொடு—பெரிய சேனைகளோடு, மன்னர்க்கு இருக்க நிழலாகும்—அரசர்கள் தங்குவதற்கு நிழலைத் தருவதாகும். எ—று.* 17

**அதனல்,**
**பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.**

இ—ள்: *அதனல்—அந்த நியாயத்தினல், பெரியோர் எல்லாம்-(உருவிற்) பெரியோரெல்லாம், பெரியரும் அல்லர்-(அறிவிற்) பெரியோராகார். எ—று.* 18

**சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.**

இ—ள்: சிறியோர் எல்லாம்—(உருவிற்) சிறியவரெல்லாம், சிறியரும் அல்லர்—(அளவிற்) சிறியோராகார். எ-று.

**பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.**

இ—ள்: பெற்றோர் எல்லாம்-(ஒருவர் பெற்ற) பிள்ளைகளெல்லாம், பிள்ளைகள் அல்லர் — (அறிவொழுக்கமுடைய) புதல்வர்களாகார். எ — று. 20

**உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.**

இ—ள்: உற்றோர் எல்லாம்—உறவினரெல்லாம், உறவினர் அல்லர் — (அன்புள்ள) உறவினராகார். எ— று. 21

**கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.**

இ—ள்: கொண்டோர் எல்லாம்—கொண்ட மனைவியர் யாவரும், பெண்டிரும் அல்லர்-சிறந்த மனைவியராகார்.எ-று.

**அடினுமா வின்பால் தன்சுவை குன்றாது.**

இ—ள்: ஆவின் பால்—பசுவின் பாலானது, அடினும் — காய்ச்சப்படினும், தன் சுவை — தன்னுடைய சுவையிலே, குன்றாது—குறையாது. எ — று. 23

**சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.**

இ—ள்: செம்பொன் — செவ்விய பொன்னானது, சுடினும்—சுடப்படினும், தன்னொளி கெடாது — தன்னுடைய ஒளி கெடாது. எ — று. 24

**அரைக்கினுஞ் சந்தனந் தன்மண மறாது.**

இ—ள்: சந்தனம்—சந்தனக் கட்டையானது, அரைக்கினும்—அரைக்கப்படினும், தன் மணம் அறாது—தன் வாசனை குறையப்பெறாது. எ — று. 25

**புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.**

இ—ள்: கார் அகில் — கரிய அகிற்கட்டையானது, புகைக்கினும்—(நெருப்பிலிட்டு) புகைக்கப்படினும், பொல்லாங்கு கமழாது — துர்நாற்றம் வீசாது. எ — று. 26

**கலக்கினுந் தண்கடல் சேரு காது.**

இ — ள் : தண் கடல் — குளிர்ச்சி பொருந்திய கடலானது, கலக்கினும் — கலக்கப்படினும், சேருகாது—சேருக மாட்டாது. எ — று. 27

**அடினும்பால் பெய்துகைப்**
**பறுதுபேய்ச் சுரைக்காய்.**

இ — ள் : பேய்ச்சுரைக்காய் — பேய்ச்சுரைக்காயானது, பால் பெய்து அடினும்—பால்வார்த்துச் சமைக்கப்படினும், கைப்பு அறுது—கைப்பு நீங்காது. எ — று. 28

**ஊட்டினும் பல்விரை உள்ளிகம ழாதே.**

இ — ள் : பல் விரை ஊட்டினும் — பல வாசனே ஊட்டினுலும், உள்ளி—உள்ளியானது, கமழாது—நல்ல மணத்தைத் தராது. எ — று. 29

**ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை**
**இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.**

இ — ள் : ஒரு நாள் பழகினும்—ஒரு தினம் பழகினுலும், பெரியோர் கேண்மை—பெரியோர்களது சிநேகமானது, இரு நிலம் பிளக்க — பெரிய பூமி பிளக்கும்படி, வேர் வீழ்க்கும் — வேரூன்றி உறுதியாக நிற்கும். எ — று. 30

**நூறுண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**
**நீர்க்குட் பாசிபோல் வேர்கொள் ளாதே.**

இ — ள் : மூர்க்கர் கேண்மை — மூர்க்கருடைய சிநேகம், நூறு ஆண்டு பழகினும்— நூறு வருடம் பழகினுலும், நீர்க்குள் பாசிபோல் — நீரிலேயுள்ள பாசியைப்போல், வேர்கொள்ளாதே—வேரூன்றி நிலைபெறமாட்டாது. எ — று. 31

**அதனல்,**
**பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே.**

இ — ள் : அதஞல் — அந்த நியாயத்தால், பெருமையுஞ் சிறுமையும்—உயர்ச்சியுந் தாழ்வுந், தான் தர வரும் — (ஒருவன்) தானே உண்டாக்க வருவனவாம். எ — று. 32

**சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்**
**பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.**

இ—ள்: பெரியோராயின் — மேலோர்களாயின், சிறியோர் செய்த—கீழோர் செய்த, சிறு பிழை எல்லாம்-சிறிய பிழைகளனைத்தையும், பொறுப்பது கடன் — பொறுத்துக் கொள்ளுதல் அவர்களுடைய கடனாகும். எ — று. 33

**சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்**
**பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.**

இ-ள்: சிறியோர்—கீழானோர், பெரும் பிழை செய்தனர் ஆயின்—பெரிய குற்றங்களைச் செய்தார்களாயின், பெரியோர்-மேலானோர், அப்பிழை பொறுத்தலும்—அக் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும், அரிது—அரிதாகும். எ—று. 34

**அதனால்,**
**கற்கை நன்றே கற்கை நன்றே.**

இ — ள்: அதனால் - அந்த நியாயத்தினால், கற்கை நன்றே — கற்றறிதல் மிகவுந் நல்லதே, கற்கை நன்றே — கற்றறிதல் மிகவுந் நல்லதே. எ — று. 35

**பிச்சை புகினும் கற்கை நன்றே**

இ — ள்: பிச்சை புகினும் — பிச்சை எடுக்க நேர்ந்தாலும், கற்கை நன்றே—கற்றுணர்தல் நல்லதேயாம். எ—று.

**கல்லா வொருவன் குலநலம் பேசுதல்**
**நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.**

இ — ள்: கல்லா ஒருவன் — படியாத ஒருவன், குலநலம் பேசுதல் — தன் குலத்து உயர்வைப் பேசுதல், நெல்லினுள் பிறந்த பதராகும் — நெல்லினுள்ளே தோன்றிய பதரை நெல்லுக்கு ஒப்பிடுவதை நிகர்க்கும். எ — று. 37

**நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்**
**கற்றில னாயிற் கீழிருப் பவனே.**

இ — ள்: நாற்பாற் குலத்தில்—நான்கு வகுப்பான வருணங்களுள், மேற்பால் ஒருவன் — மேற்பட்ட வருணத்திற் பிறந்த ஒருவன், கற்றிலன் ஆயின்—கல்லாதவனாய் இருப்பானாயின், கீழ் இருப்பவனே—கீழ் வருணத்தானென்று மதிக்கப் பட்டிருப்பான். எ — று. 38

**எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்**
**அக்குடிக் கற்றோரை மேல்வரு கென்பர்.**

இ — ள் : எக்குடிப் பிறப்பினும் — எவ்வகைப்பட்ட (தாழ்ந்த) குடியிற் பிறந்தாலும், யாவரேயாயினும்—எவரேயானாலும், அக்குடிக் கற்றோரை — அந்தக் குடியிற் கற்றவர்களாயுள்ளவர்களை, மேல் — மேலிடத்து, வருகென்பர்— வருகவென்று உபசரிப்பார். எ — று. 39

**அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.**

இ — ள் : அறிவுடை ஒருவனை — கல்வியறிவுடையவொருவனை, அரசனும் விரும்பும் — அரசனும் விரும்புவான். எ — று. 40

**அதனால்,**
**அச்சமுள் ளடக்கி யறிவகத் தில்லாக்**
**கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி**
**எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.**

இ— ள் : அதனால் — அந்த நியாயத்தால், அச்சம் உள் அடக்கி — பயத்தை மனத்திலே அடக்கி, அறிவு அகத்து இல்லா — அறிவு சிறிதுந் தன்னிடத்தில்லாத, கொச்சை மக்களை — மூடப் பிள்ளைகளை, பெறுதலின் — பெறுவதிலும், அக்குடி — அந்தக் குடும்பம், எச்சம் அற்று — புத்திரரின்றி, ஏமாந்து இருக்கை — களிப்புற்றிருத்தல், நன்றே — நல்லதேயாம். எ — று. 41

**யானைக் கில்லை தானமுந் தருமமும்.**

இ — ள் : தானமும் — கொடையும், தருமமும் — தருமமும், யானைக்கு இல்லை — (நீண்ட கையையும் பருத்த தேகத்தையுமுடைய) யானைக்கு இல்லையாம். எ — று. 42

**பூனைக் கில்லை தவமுந் தயையும்.**

இ - ள் : தவமும் — தவமும், தயையும் — இரக்கமும், பூனைக்கு இல்லை — (தவமுடையதுபோலக் கண்ணை மூடிக் கொண்டிருப்பினும், அருளுடையதுபோல அடங்கியிருப்பினும்) பூனைக்கு இல்லையாம். எ — று. 43

**ஞானிக் கில்லை இன்பமுந் துன்பமும்.**

இ—ள்: இன்பமும் துன்பமும் — சுகமுந் துக்கமும், ஞானிக்கு இல்லை—ஞானிகளுக்கு இல்லையாம். எ—று. 44

**சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்.**

இ—ள்: சிதலைக்கு—கறையானுக்கு, செல்வம்—பாக்கியமும், செருக்கும்—அகங்காரமும், இல்லை—இல்லையாம். எ—று.

(செல்வம் வந்தகாலத்துச் செருக்குற்றுத் தனது அரித்தற் ரொழிலை விடுமியல்பு கறையானுக்கில்லை என்றபடி.) 45

**முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.**

இ—ள்: முதலைக்கு—முதலைகளுக்கு, நீத்தும் நிலையும் இல்லை—நீந்துதலு(க்கேற்ற நீரென்பது)ம் நிலையாக நிற்றலு(க்கேற்ற நீர் என்பது)ம் வேண்டுவதில்லை. எ—று. 46

**அச்சமு நாணமு மறிவிலோர்க் கில்லை.**

இ—ள்: அறிவிலோர்க்கு — அறிவில்லாதவர்களுக்கு, அச்சமும் நாணமும் — (பழிபாவங்களுக்கு) அஞ்சுதலும் நாணுதலும், இல்லை— இல்லையாம். எ — று. 47

**நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.**

இ — ள்: நாளும் — நட்சத்திரமும், கிழமையும் — வாரமும், நலிந்தோர்க்கு — வியாதியாற் பீடிக்கப்பட்டவருக்கு, இல்லை — இல்லையாம். எ — று. 48

**கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை.**

இ — ள்: கெட்டோர்க்கு — பொருள் இழந்தோர்க்கு, கேளும் — நட்பினரும், கிளையும் — சுற்றத்தாரும், இல்லை — இல்லையாம். எ — று. 49

**உடைமையும் வறுமையு மொருவழி நில்லா.**

இ — ள்: உடைமையும் — பொருளுடைமையும், வறுமையும்—தரித்திரமும், ஒருவழி—ஓரிடத்திலே, நில்லா — நிலையாய் நிற்பனவல்ல. எ — று. 50

**குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்**
**நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.**

இ – ள் : குடைநிழல் இருந்து-குடை நிழலிலேயிருந்து, குஞ்சரம் ஊர்ந்தோர்-யானையின்மீது சென்றவர்கள், நடைமெலிந்து- நடையினால் வருந்தி, ஓர் ஊர்-ஒரு கிராமத்தை, நண்ணினு நண்ணுவர்—சேர்ந்தாலுஞ் சேருவர். எ – று. 51

**சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்**
**அறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்.**

இ – ள் : சிறப்பும்- அழகும், செல்வமும்—பொருளும், பெருமையும் உடையோர் – மேன்மையும் உடையவர்கள், அறக்கூழ்ச்சாலை-(உணவின் பொருட்டுத்) தரும அன்னசத்திரத்தை, அடையினும் அடைவர்-அடைந்தாலும் அடைவார்கள். எ – று. கூழ் – சோறு. 52

**அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்**
**அரசோ டிருந்தர சாளினு மாளுவர்.**

இ – ள் : அறத்து இடு பிச்சை—தருமத்திற் கொடுக்கப்படும் பிச்சையை, கூவி இரப்போர் – கூவி நின்று இரப்பவர்கள், அரசோடு இருந்து-அரசர்களோடு இருந்து, அரசு ஆளினும் ஆளுவர்—இராச்சிய பரிபாலனஞ் செய்யினுஞ் செய்வர். எ – று. 53

**குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்**
**அன்றைப் பகலே யழியினு மழிவர்.**

இ – ள் : குன்று அத்தனை – மலையளவு, இரு நிதியை – மிக்க செல்வத்தை, படைத்தோர் – பெற்றவர், அன்றைப் பகலே—அந்தத் தினத்திற்றானே, அழியினும் அழிவர்—அதனை அனுபவியாது இறப்பினும் இறப்பர். எ – று. 54

**எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்**
**கழுதை மேய்ப்பா ழாகினு மாகும்.**

இ – ள் : எழுநிலை மாடம் – ஏழு அடுக்குகளையுடைய மாளிகை, கால்சாய்ந்து உக்கு—அடியோடு சாய்ந்து பொடியாகி, கழுதை மேய்பாழ் ஆகினும் ஆகும் – கழுதை மேய்கின்ற பாழ் நிலமானாலும் ஆகும். எ – று. 55

**மணவணி யணிந்த மகளி ராங்கே**
**பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ**
**உடுத்த வாடை கோடி யாக**
**முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.**

இ—ள்: மண அணி அணிந்த மகளிர் — மணக்கோலந் தரித்த பெண்கள், ஆங்கே—அந்த மணப்பந்தரிலேயே, பிண அணி அணிந்து — (தம் கணவனிறந்தமையினால்) இழவுக் கோலம் பூண்டு, தம் கொழுநரைத் தழீஇ — தம்முடைய கணவரைத் தழுவிக்கொண்டு, உடுத்த ஆடை கோடியாக— முன் தரித்துக்கொண்ட கூறை புதிதாயேயிருக்க, முடித்த கூந்தல்-சீவி முடித்த கூந்தலை, விரிப்பினும் விரிப்பர்-விரித்தாலும் விரிப்பார்கள். எ—று. 56

**பெற்றமுங் கழுதையும் மேய்ந்த வப்பாழ்**
**பொற்றொடி மகளிரு மைந்தருங் கூடி**
**நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.**

இ—ள்: பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்— பசுக்களும் கழுதைகளும் மேய்ந்த அந்தப் பாழ்நிலமானது, பொன்தொடி மகளிரும் - பொன் வளையல்களை அணிந்த பெண்களும், மைந்தருங்கூடி — ஆடவரும் குடிகொண்டு, நெல் பொலி நெடுநகர் ஆயினும் ஆகும் — நெல் (முதலிய. தானியங்கள்) நிறைந்த பெரிய நகரமானாலும் ஆகும். எ—று. 57

**இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே.**

இ—ள்: இல்லோர் — பொருளில்லாதவர், இரப்பதும்-யாசிப்பதும், இயல்பே இயல்பே — இயற்கையாம் இயற்கையாம். எ — று. 58

**இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.**

இ—ள்: இரந்தோர்க்கு—யாசித்தோருக்கு, ஈவதும்— கொடுப்பதும், உடையோர் கடனே — பொருளுடையவரது கடனேயாகும். எ — று. 59

**நல்ல ஞாலமும் வானமும் பெறினும்**
**எல்லா மில்லை இல்லில் லோர்க்கே.**

இ—ள்: நல்ல ஞாலமும்—சிறந்த இவ்வுலகச் செல்வத்தையும், வானமும்—விண்ணுலகபோகத்தையும், பெறினும்—பெற்றாலும், இல் இல்லோர்க்கு—(கற்புடைய) இல்லாளை இல்லாதவர்களுக்கு, எல்லாம் இல்லை—ஒன்றும் இல்லையாம். எ—று. 60

**தறுகண் யானை தான்பெரி தாயினும்**
**சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.**

இ—ள்: தறுகண் யானை—அஞ்சாமையையுடைய யானையானது, தான் பெரிது ஆயினும்—தான் பெரிய உருவமுடையதாயினும், சிறு கண் மூங்கிற் கோற்கு—சிறு கண்களுள்ள மூங்கிற் கோலுக்கு, அஞ்சும்-பயப்படும். எ—று. 61

**குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்**
**புன்றலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.**

இ—ள்: குன்று உடை நெடுங்காடு ஊடே வாழினும்—மலைகளையுடைய பெரிய காட்டினுள்ளே வாழ்ந்தாலும், புன் தலைப் புல்வாய்—புன்மையாகிய தலையையுடைய மானானது, புலிக்கு அஞ்சும்—புலிக்குப் பயப்படும். எ—று. 62

**ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்**
**தேரைபாம் பிற்கு மிகவஞ் சும்மே.**

இ—ள்: ஆரையாம் பள்ளத்து ஊடே வாழினும்—மதிலாற் சூழப்பட்ட நீரையுடைய பள்ளத்தினுள்ளே வாழ்ந்தாலும், தேரை—தவளை, பாம்பிற்கு மிக அஞ்சும்—பாம்பினுக்கு மிகவும் பயப்படும். எ—று. 63

**கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்**
**கடும்புலி வாழுங் காடு நன்றே.**

இ—ள்: கொடுங்கோல் மன்னர்—கொடிய கோலையுடைய அரசர், வாழும் நாட்டில்—வாழுகின்ற நாட்டைப் பார்க்கிலும், கடும் புலி வாழும்—கொடிய புலிகள் வாழுகின்ற, காடு நன்று—காட்டிலே குடியிருத்தல் நன்றாம். எ—று. 64

**சான்ரோர் ரில்லாத் தொல்பதி யிருத்தலிற்**
**றேன்றேர் குறவர் தேய நன்றே.**

இ—ள்: சான்ரோர் இல்லா—பெரியோர் இல்லாத, தொல்பதி இருத்தலின்—பழைமையாகிய ஊரிலே குடியிருத்தலினும், தேன் தேர்—தேன்கூடுகளைத் தேடுகின்ற, குறவர் தேயம்—குறவர்களது (சேரியில் வசித்தல்), நன்று—நல்லதாம். எ—று. 65

**காலையு மாலையு நான்மறை யோதா**
**அந்தண ரென்போ ரனைவரும் பதரே.**

இ—ள்: காலையும் மாலையும்—காலையிலும் மாலையிலும், நான்மறை ஓதா—நான்கு வேதங்களையும் ஓதாத, அந்தணர் என்போர்—பிராமணரெனப்படுவோர், அனைவரும் பதர்—யாவரும் பதராவர். எ—று. 66

**குடியலைத் திறந்து கோலொடு நின்ற**
**முடியுடை யிறைவனும் மூர்க்கனும் பதரே.**

இ—ள்: குடியலைத்து—குடிகளை வருத்தி, இறந்து—நெறி கடந்து, கோலொடு நின்ற—கொடுங்கோலொடு கூடி நின்ற, முடியுடை இறைவனும்—கிரீடத்தையுடைய இராசனாகிய, மூர்க்கனும் பதர்—மூர்க்கனும் பதராவான். எ-று. 67

**முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்**
**ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.**

இ—ள்: முதல் உள பண்டங்கொண்டு—தம்மிடத்து முதலாக உள்ள பண்டங்களைக் கொண்டு, வாணிபஞ் செய்து—வியாபாரஞ் செய்து, அதன் பயன் உண்ணு—அதனல் வரும் இலாபத்தை உண்ணுத, வணிகரும்—வைசியரும், பதர்—பதராவார். எ—று. 68

**வித்து மேரு முளவா யிருப்ப**
**எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே.**

இ—ள்: வித்தும் ஏரும்—விதையும் ஏரும், உளவாய் இருப்ப—உள்ளனவாயிருக்க, எய்த்து அங்கும் இருக்கும்—சோம்பலுற்று அவ்விடத்துப் பயிர் செய்யாதிருக்கும், ஏழையும்—அறிவீனனும், பதர்—பதராவான். எ—று. 69

**தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்**
**பின்பவட் பாராப் பேதையும் பதரே.**

இ—ள்: தன் மனையாளை—தன் மனைவியை, தாய் மனைக்கு அகற்றி—அவளது தாய் வீட்டுக்குப் போக்கி, பின்பு—பின்னர், அவள் பாராப் பேதையும்—அவளைப் பாராமலிருக்கின்ற அறிவீனனும், பதர்-பதராவான். எ—று.

**தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்**
**பிறன்மனைக் கேகும் பேதையும் பதரே.**

இ—ள்: தன் மனையாளை—தன் மனைவியை, தனி மனை இருத்தி—தன் வீட்டில் தனிமையாக இருக்கச் செய்து, பிறன் மனைக்கு ஏகும்—பிறன் மனையாளிடத்திற் செல்லுகின்ற, பேதை—அறிவீனனும், பதர்—பதராவான். எ—று. 71

**தன்னு யுதமுந் தன்கையிற் பொருளும்**
**பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.**

இ—ள்: தன் ஆயுதமும்—தன்னுடைய ஆயுதத்தையும், தன் கையிற் பொருளும்—தன் கையிலுள்ள திரவியத்தையும், பிறன் கையில்—பிறனுடைய கையிலே, கொடுக்கும்—கொடுத்துவிட்டிருக்கும், பேதையும்—அறிவில்லாதவனும், பதர்—பதராவான். எ—று. 72

**வாய்ப்பறை யாகவு நாக்கடிப் பாகவுஞ்**
**சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.**

இ—ள்: வாய் பறையாகவும்—வாயே பறையாகவும், நா கடிப்பாகவும்—நாக்கே அப்பறையடிக்குங் கோலாகவும், சாற்றுவது ஒன்றை-(அறிவுடையோர்)சொல்வதொன்றை, போற்றிக் கேண்மின்—உற்றுக் கேளுங்கள். எ—று. 73

**பொய்யுடையொருவன்சொல்வன்மையினுல்**
**மெய்போ லும்மே மெய்போ லும்மே.**

இ—ள்: பொய்யுடை ஒருவன்—பொய் பேசுதலையுடைய ஒருவன், சொல் வன்மையினுல்—சொல்லும் வன்மையினுலே, மெய்போலும்மே மெய்போலும்மே—அவன் கூறிய பொய் மெய் போலத் தோன்றும் மெய்போலத் தோன்றும். எ—று. 74

**மெய்யுடையொருவன்சொலமாட்டாமையாற்**
**பொய்போ லும்மே பொய்போ லும்மே.**

இ-ள்: மெய்யுடை ஒருவன் – மெய் சொல்லுமொரு வன், சொலமாட்டாமையால் – சொல்லும் வல்லமை இல்லாமையால், அவன் (சொல்லப்புகுந்த மெய்) பொய் போலும்மே பொய்போலும்மே–பொய்போலத் தோன்றும் பொய்போலத் தோன்றும். எ–று. 75

**அதனால்,**
**இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே**
**இருவரும் பொருந்த உரையா னாகில்**
**மனுநெறி முறைமையின் வழக்கிழந் தவர்**
**மனமுற மறுகிநின் றழுத கண்ணீர் தாம்**
**முறையுறத் தேவர் மூவர் காக்கினும்**
**வழிவழி யீர்வதோர் வாளா கும்மே.**

இ-ள்: அதனால் – அந்த நியாயத்தினால், இருவர்தம் சொல்லையும் – இருபாலாருடைய சொல்லையும், எழுதரங் கேட்டு – ஏழு முறை விசாரித்து, இருவரும் பொருந்த-அவ்விருவரும் ஒருமைப்பட, மனுநெறி முறைமையின்–மனு நீதி முறைமைப்படி, உரையானகின் – ஒருவன் தீர்ப்புச் சொல்லானாயின், மனம் உற மறுகி நின்று-மனமானது மிகக் கலக்கமுற்று நின்று, வழக்கு இழந்தவர் அழுத கண்ணீர்–நீதியைப் பெறாது தோற்றவர் அழுத கண்ணீரானது, முறையுற-முறையாக, தேவர் மூவர் காக்கினும்–பிரம்ம விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகள் காத்தாலும், வழி வழி ஈர்வது – அவனுடைய சந்ததிதோறும் (அவற்றை) அறுப்பதாகிய, ஓர் வாளாகும்–ஒரு வாளாயிருக்கும். எ–று. 76

**பழியா வருவது மொழியா தொழிவது.**

இ-ள்: பழியா வருவது – நிந்தையாக வருவதை, மொழியாது ஒழிவது–சொல்லாமல் ஒழிக்கவேண்டும். எ-று. 77

**சுழியா வருபுன லிழியா தொழிவது.**

இ — ள் : சுழியா வருபுனல் — சுழித்துக்கொண்டு வரும் வெள்ளத்தில், இழியாதொழிவது — இறங்காமல் நீங்க வேண்டும். எ — று. 78

**துணையோ டல்லது நெடுவழி போகேல்.**

இ — ள் : துணையோடு அல்லது—துணையுடனேயல்லாமல், நெடுவழி போகேல்—தூரமானவழி போகாதே. எ—று. 79

**புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.**

இ — ள் : புணை மீது அல்லது — தெப்பத்தின்மேல் ஏறிக் கொண்டல்லாமல், நெடும் புனல் ஏகேல்—மிக்க நீரிற் செல்லாதே. எ — று. 80

**எழிலார் முலைவரி விழியார் தந்திரம்**
**இயலா தனகொடு முயல்வா காதே.**

இ — ள் : எழில் ஆர் முலை—அழகு பொருந்திய தனங்களையும், வரி விழியார்—வரிகள் பொருந்திய கண்களையுமுடைய பெண்கள், தந்திரம் — (சொல்லும்) உபாயத்தினுல், இயலாதன கொடு—பொருந்தாதவைகளைக் கொண்டு, முயல்வு ஆகாது — முயற்சிசெய்தல் ஆகாது. எ — று. 81

**வழியே யேகுக வழியே மீளுக.**

இ — ள் : வழியே ஏகுக — நல்வழியிலேயே செல்ல வேண்டும், வழியே மீளுக — அவ்வழியிலேயே திரும்ப வேண்டும். எ — று. 82

**இவைகா ணுலகிற் கியலா மாறே.**

இ — ள் : இவை — இந்த நீதிகள், உலகிற்கு — உயர்ந்தோர்க்கு, இயலாம் ஆறு — நடப்பதற்கு உரிய வழியாம். எ — று. 83

**வாழிய நலனே வாழிய நலனே.**

இ — ள் : நலன் வாழிய — (எல்லா) நன்மைகளும் வாழ்க, நலன் வாழிய — (எல்லா) நன்மைகளும் வாழ்க. எ — று. 84

உ

# வாக்குண்டாம்

## (மூதுரை)

## உரையுடன்

### காப்பு

### வெண்பா

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பதவுரை : துப்பு ஆர் திருமேனித் தும்பிக்கையான் பாதம் — பவளம்போலும் (சிவப்பாகிய) திருமேனியையும் துதிக்கையையும் உடைய விநாயகக் கடவுளது திருவடிகளை, பூக் கொண்டு — பூவைக் (கையிலே) கொண்டு, தப்பாமற் சார்வார் தமக்கு — தவறாமல் அடைந்து பூசை செய்வோருக்கு, வாக்கு உண்டாம் — (நல்ல) வாக்கு உண்டாகும், நல்ல மனம் உண்டாம் — நல்ல மனம் உண்டாகும், மாமலராள் நோக்கு உண்டாம் — பெருமை பொருந்திய செந்தாமரைப் பூவில் இருக்கின்ற இலக்குமியினுடைய அருட்பார்வை உண்டாகும், மேனி நுடங்காது — அவருடைய சரீரம் பிணிகளால் வாடிப் போகாது. என்றவாறு.

நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

ப — ரை : நின்று தளரா வளர் தெங்கு — நிலைபெற்றுச் சோராமல் வளர்கின்ற தென்னமரமானது, தாள் உண்ட நீரை — (தன்) அடியிலே உண்ட (வெறு) நீரை, தலையாலே தான் தருதலால் — (தன்) முடியிலே (மதுரமாகிய இளநீராக்கித்) தானே தருதலினாலே, ஒருவற்கு நன்றி செய்தக்கால் — (நற்குணமுடைய) ஒருவனுக்கு ஓர் உபகாரத்தைச் செய்தால், அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா — அந்த உபகாரத்தை (அவன்) எப்பொழுது செய்வானோ என்று சந்தேகிக்க வேண்டுவதில்லை. எ — று. 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரங்
கன்மேல் எழுத்துப்போற் காணுமே — அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

ப — ரை : நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் — நற்குணமுடையவராகிய ஒருவர்க்குச் செய்த உபகாரமானது, கல்மேல் எழுத்துப்போல் காணும் — கல்லின் மேல் எழுதப்பட்ட எழுத்தைப்போல் விளங்கும், அல்லாத ஈரம் இல்லாத நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம் — மற்ற அன்பில்லாத மனமுடையவருக்குச் செய்த உபகாரமானது, நீர்மேல் எழுத்திற்கு நேர் — தண்ணீரின்மேல் எழுதப்பட்ட எழுத்திற்கு ஒப்பாகும். எ — று. 2

இன்னு விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னு வளவில் இனியவும் — இன்னுத
நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

ப - ரை : இளமை வறுமை வந்து எய்தியக்கால் இன்னு - (இன்பத்தைத் தருகின்ற) இளமைப் பருவமானது வறுமை வந்து அடைந்தால் துன்பத்தைத் தருவதாகும், இன்னு அளவில் இனியவும் இன்னுத - துன்பத்தைத் தருகின்ற முதுமைப் பருவத்தில் இனியனவாகிய பொருள்களும் துன்பத்தைத் தருவனவாம், (அவைகள்) நாள் அல்லா நாள் பூத்த நல் மலரும் — சுபகாலமல்லாத காலத்திலே பூத்த நல்ல பூவையும், ஆள் இல்லா மங்கைக்கு அழகும் போலும் — அநுபவிப்பவன் இல்லாத மங்கைப் பருவத்தை உடையவளுக்கு உண்டாகிய அழகையும் போலும். எ - று.

இன்னு - துன்பம், இன்னுவளவு — முதுமைப்பருவம். 3

அட்டாலும் பால்சுவையிற் குன்ரு தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

ப — ரை : பால் அட்டாலும் சுவையில் குன்ருது — பாலானது (தன்னைக்) காய்ச்சினுலும் (தன்) மதுரத்திற் குறையாது மிகும், சங்கு சுட்டாலும் வெண்மை தரும் — சங்கானது (தன்னை) நீருகச் சுட்டாலும் மிகுந்த வெள்ளை நிறத்தையே கொடுக்கும், (அவைபோல) மேல் மக்கள் கெட்டாலும் மேல் மக்களே — மேலோர் (தாம் தம்முடைய சிநேகராலே) கெட்டாலும் (தம்முடைய நற்குணம் வேறு

படாமல்) மேலோராகவே விளங்குவார், நண்பு அல்லார் அளவளாய் நட்டாலும் நண்பு அல்லர் — சிநேக குணம் இல்லாத கீழோர் (தம்மோடு ஒருவர் கலந்து) சிநேகித் தாலும் சிநேகராகார். எ—று. 4

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

ப — ரை: தொடுத்த உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம் — கிளைத்த வடிவத்தால் நீண்ட உயர் வாகிய மரங்களெல்லாம், பருவத்தாலன்றிப் பழா — (அது அது பழுக்குங்) காலம் வந்தாலல்லாமல் பழாவாம், (அது போல) அடுத்து முயன்றாலும் — மேலும் மேலும் முயற்சி செய்தாலும், ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா- முடியுங் காலம் வந்தால் அல்லாமல் எடுத்த முயற்சிகள் முடியாவாம். எ — று. 5

உற்ற விடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ — கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

ப — ரை: கல் தூண் — கல்லுத் தூணனது, பெரும் பாரந் தாங்கின் பிளந்து இறுவது அல்லால் — பெரிய பாரத் தைத் தாங்கினுற் பிளந்து ஒடிவதல்லாமல், தான் தளர்ந்து வளையுமோ — தான் தளர்ந்து வளையுமோ (வளையாது), (அதுபோல) உற்ற இடத்தில் உயிர் வழங்குந் தன்மை யோர் — (தமக்கு) ஆபத்து வந்தவிடத்தே தம் முயிரை விடுங்

குணமுடையவர், பற்றலரைக் கண்டால் பணிவரோ — தம் பகைவரைக் கண்டால் வணங்குவரோ (வணங்கார்). எ — று. 6

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு — மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்.

ப — ரை: நீர் ஆம்பல் நீர் அளவே ஆகும் - நீரில் இருக்கின்ற அல்லியானது அந்த நீரினுடைய உயரத்தினளவாகவே உண்டாகும், (அதுபோல) நுண் அறிவு தான் கற்ற நூலளவே ஆகும் - ஒருவனுக்கு நுட்பமாகிய அறிவானது தான் கற்ற நூலினளவாகவே உண்டாகும், தான் பெற்ற செல்வம் மேலைத் தவத்து அளவே ஆகும் — தான் பெற்ற செல்வமானது முற்பிறப்பிற் செய்த தவத்தின் அளவாகவே உண்டாகும், குணம் குலத்து அளவே ஆகும் — குணமானது (தான் பிறந்த) குலத்தினளவாகவே உண்டாகும். எ — று. 7

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே — நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

ப — ரை: நல்லாரைக் காண்பதுவும் நன்றே — நல்லாரைக் காணுதலும் நல்லதே, நல்லார் நலம் மிக்க சொல் கேட்பதுவும் நன்றே — நல்லவருடைய பயன் நிறைந்த சொல்லைக் கேட்குதலும் நல்லதே, நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே — நல்லவருடைய நற்குணங்களைப் பேசுதலும் நல்லதே, அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று—அந்த நல்லவரோடு கூடியிருத்தலும் நல்லதேயாம். எ— று. 8

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே — தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

ப - ரை: தீயாரைக் காண்பதுவுந் தீதே – தீயவரைக் காணுதலுந் தீயதே, தீயார் திருஅற்ற சொல் கேட்பதுவுந் தீதே–தீயவருடைய பயன் இல்லாத சொல்லைக் கேட்குதலுந் தீயதே, தீயார் குணங்கள் உரைப்பதுவுந் தீதே – தீயவருடைய தீக்குணங்களைப் பேசுதலுந் தீயதே, அவரோடு இணங்கி இருப்பதுவுந் தீது – அவரோடு கூடியிருத்தலும் தீயதே. எ – று. 9

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.

ப - ரை: நெல்லுக்கு இறைத்த நீர் – நெற்பயிரின் பொருட்டு இறைத்த தண்ணீர், வாய்க்கால் வழி ஓடி – வாய்க்கால் வழியால் ஓடி, ஆங்குப் புல்லுக்கும் பொசியும்– அங்கேயிருக்கின்ற புல்லுகளுக்கும் கசிந்தூறும், (அதுபோல்) தொல் உலகில் நல்லார் ஒருவர் உளரேல் – பழமையாகிய உலகத்திலே நல்லவர் ஒருவராயினும் இருப்பரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்யும் – அவர் பொருட்டாகவே எல்லாருக்கும் மழை பெய்யும். எ – று. 10

பண்டு முளைப்ப தரிசியே யானலும்
விண்டுமி போனன் முளையாதாங் — கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

ப — ரை: பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும் — (உமி நீங்குவதற்கு) முன்னே முளைப்பது அரிசியேயாயினும், உமி விண்டு போனால் முளையாது — உமி நீங்கிப்போனால் (அவ்வரிசி) முளையாது, (அதுபோல) கொண்டபேர் ஆற்றல் உடையார்க்கும் — தம்மிடத்து நீங்கா பெரிய வல்லமையை உடையவர்க்கும், அளவு இன்றி ஏற்ற கருமஞ் செயல் ஆகாது — துணைவலி இல்லாமல் எடுத்துக்கொண்ட தொழிலைச் செய்தல் முடியாது. எ — று. 11

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா —கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

ப — ரை: தாழை மடல் பெரிது — தாழம்பூ இதழ்களினாலே பெரிதாயிருக்கின்றது, மகிழ் கந்தம் இனிது—மகிழம்பூ (இதழ்களினாலே சிறிதாயினும்) வாசனையினாலே (தாழம் பூவினும்) இனிதாயிருக்கின்றது, கடல் பெரிது — சமுத்திரம் பெரிதாயிருக்கின்றது, மண் நீரும் ஆகாது—(ஆயினும் அதிலுள்ள நீர் உடம்பின் அழுக்கை) கழுவுதற்குத் தக்க நீருமாகாது, அதன் அருகே சிற்றூறல் உண்ணீரும் ஆகி விடும்—அதன் பக்கத்தே சிறிய மணற்குழியிற் சுரக்கும் ஊற்றுநீர் குடிக்கத்தக்க நீருமாகும், ஆதலினாலே உடல் சிறியர் என்று இருக்கவேண்டா — (ஒருவரை) உருவத்தினாலே சிறியவரென்று (மதியாமல்) இருக்கவேண்டாம். எ — று. மண்ணுதல் — கழுவுதல். 12

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

ப—ரை: கவையாகி — கிளைகளை உடையவைகளாகி யும், கொம்பு ஆகி — கொம்புகளை யுடையவைகளாகியும், காட்டு அகத்து நிற்கும் அவை நல்ல மரங்கள் அல்ல — காட்டினுள்ளே நிற்கின்ற அந்த மரங்கள் எல்லாம் நல்ல மரங்கள் அல்ல, சவை நடுவே நீட்டு ஓலை வாசியா நின்றான் — சபை நடுவே ஒருவர் நீட்டிய ஓலையை வாசிக்க மாட்டாமல் நின்றவனும், குறிப்பு அறிய மாட்டாதவன் — (ஒருவருடைய) குறிப்பை அறியமாட்டாதவனுமே, நல் மரம் — நல்ல மரங்களாவர். எ — று. 13

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

ப—ரை: கல்லாதான் கற்ற கவி — (இலக்கண இலக் கியங்களைக் கற்றவர் பிழையற்ற கவியைச் சொல்லிப் பொருளுரைக்க அதைப் பார்த்துக்கொண்டிருந்து, அவை களைக்) கற்று அறியாதவன் (தன்னையும் கற்றவனாக நினைத் துத் தான்) கற்ற (பிழையாகிய) கவியைச் சொல்லிப் பொருள் உரைத்தல், கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி — காட்டில் உள்ள மயிலானது (தனது அழகுள்ள சிறகை விரித்து) ஆட (அதைப்) பார்த்துக்கொண்டிருந்த வான்கோழியானது, தானும் அது ஆகப் பாவித்து—தானும் அம்மயிலாகவே நினைத்து, தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலும் - தானும் தனது அழகில்லாத சிறகை விரித்து ஆடினாற்போலும். எ — று. 14

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போற்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

ப — ரை : வரிவேங்கைப் புலிநோய் தீர்த்த விடகாரி — வரிகளையுடைய வேங்கைப் புலிக்கு நஞ்சு நோயைத் தீர்த்த விஷவைத்தியன், ஆங்கு அதற்கு ஆகாரம் ஆனாற்போல் பாங்கு அறியா — அப்பொழுது அப்புலிக்கு இரையானாற் போலத் தான் அழியுந் தன்மையை (ஆலோசித்து) அறியாமல், புல் அறிவாளர்க்குச் செய்த உபகாரம் — அற்ப புத்தியை உடையவருக்குச் செய்த உபகாரம், கல்லின் மேல் இட்ட கலம் — கல்லின் மேலே போடப்பட்ட மட் பாத்திரம்போல் அழிந்துபோம். எ — று. 15

அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

ப — ரை : கொக்கு — கொக்கானது, மடைத் தலையில் ஓடும் மீன் ஓட — நீர்மடையினிடத்து ஓடும் சிறு மீன்கள் எல்லாம் ஓடவிட்டு, உறு மீன் வரும் அளவும் வாடி யிருக்கும் — பெருமீன் வரும் வரையும் அடங்கியிருக்கும், (அதுபோல) அடக்கம் உடையர் — (தமக்கு எதிரிகளாகத் தகாதவர் எதிர்ப்படினும் ஓடிப்போகவிட்டு தக்கவர் எதிர்ப்படும்வரையும்) அடங்கியிருக்கும் குணமுடையவரை, அறிவு இலர் என்று எண்ணி — அறிவில்லாதவரென்று கருதி, கடக்கக் கருதவும் வேண்டா — வெல்லுவதற்கு நினைக்கவும் வேண்டுவதில்லை. எ — று. 16

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

ப — ரை : அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் — (நீர்) வற்றிய குளத்தினின்றும் நீங்கிப்போகின்ற நீர்வாழ் பறவைகள்போல, உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் — (ஒருவனுக்கு) வறுமை வந்தபொழுது நீங்குவோர் உற வாகார், அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே — அந்தக் குளத்திலே கொட்டியும் அல்லியும் நெய்தலும் போலவே, ஒட்டி உறுவார் உறவு — தாமும் (வருத்தத்தை) அநுபவித்துக்கொண்டு (அவனை) விட்டு நீங்காதவரே உறவாவார். எ — று. 17

சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னுகும் — சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னுகும்
மண்ணின் குடமுடைந்தக் கால். [என்னுகும்

ப — ரை : சீரியர் கெட்டாலும் சீரியரே — மேலோர் (தம்முடைய செல்வம்) கெட்டாலும் மேலோராகவே மதிக் கப்படுவர், சீரியர் அல்லாதார் கெட்டால் அங்கு என் னுகும் — கீழோர் (தம்முடைய செல்வம்) கெட்டால் அப் பொழுது அவருக்கு என்ன மதிப்பு உண்டாகும், சீரிய பொன்னின் குடம் உடைந்தால் பொன்னுகும் — சிறப்பினை யுடைய பொன்னுலாகிய குடம் உடைந்தாலும் பழைய பொன்னேயாகும், மண்ணின் குடம் உடைந்தக்கால் என் னுகும்—மண்ணுல் ஆகிய குடம் உடைந்தால் (அதற்கு) என்ன மதிப்பு உண்டாகும். எ — று. மற்று — அசை. 18

ஆழ வமுக்கி முகக்கினும் ஆழ்கடனீர்
நாழி முகவாது நானுழி — தோழி
நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

ப — ரை : ஆழ் கடல்நீர் ஆழ அமுக்கி முகக்கினும் — ஆழமாகிய சமுத்திரத்தினுள்ளநீரை முழுக அமுக்கி மொண்டாலும், நாழி நால் நாழி முகவாது — ஒரு நாழியானது நாலு நாழி தண்ணீரை மொள்ளாது, (அதுபோல) தோழி-தோழியே, நிதியும் கணவனும் நேர்படினும் — (பெண்களுக்குத்) திரவியமும் நாயகனும் நேர்பட்டாலும், தம் தம் விதியின் பயனே பயன் — அவரவருடைய ஊழின் அளவாகிய பயனே (அநுபவிக்கப்படும்) பயனாகும். எ— று. 19

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி — உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

ப — ரை : வியாதி உடன்பிறந்தே கொல்லும் — வியாதியானது உடன்பிறந்தே கொல்லும், உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா — (ஆதலால்) உடன் பிறந்தவரே துணையாவோ ரென்று நம்பியிருக்க வேண்டுவதில்லை, உடன் பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும் — உடன் பிறவாமல் பெரிய மலையிலுள்ள மருந்தே அவ் வியாதியைத் தீர்க்கும், அம் மருந்து போல்வாரும் உண்டு — ஆதலால் அம் மருந்துபோல் (அந்நியரா யிருந்தும் ஆபத்திலே உதவி செய்)வாருஞ் சிலருண்டு. எ — று. 20

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் — இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

ப—ரை: இல்லாள் அகத்து இருக்க—(நற்குண நற் செய்கைகளையுடைய) மனையாள் வீட்டில் இருப்பாளாயின், இல்லா தது ஒன்று இல்லை—(அவ்வீட்டில்) இல்லாத பொருள் ஒன்றுமில்லை, இல்லாளும் இல்லாளே ஆயின்—மனையாள் இல்லாமற் போனாளாயினும், இல்லாள் வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல்—மனையாள் கடுமை பொருந்திய சொற் களைச் சொல்வாளாயினும், அவ்வில் புலிகிடந்த தூறு ஆய் விடும்—அவ்வீடு புலி தங்கிய புதர்போல் ஆகிவிடும். எ—று. 21

எழுதியவா றேகாண் இரங்கு மடநெஞ்சே
கருதியவா றுமோ கருமம் — கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்த
முற்பவத்திற் செய்த வினை. [தேல்

ப—ரை: இரங்கு மடநெஞ்சே—வருந்துகின்ற அறி யாமை பொருந்திய மனமே, கருதிப்போய்க் கற்பகத் தைச் சேர்ந்தோர்க்கு—(நல்ல பலனைப் பெறலாமென்று) நினைத்துப் போய்க் கற்பக தருவை அடைந்தவருக்கு, காஞ்சிரங்காய் ஈந்ததேல்—அது எட்டிக் காயைக் கொடுத்த தாயின், முற்பவத்தில் செய்தவினை—(அதற்குக் காரணம் அவர்) முற்பிறப்பிற் செய்த தீவினையாகும், கருமம் கருதிய வாறு ஆமோ—செய்தொழில்கள் (நீ) நினைத்தபடியே ஆகுமோ, எழுதியவாறே காண்—கடவுள் விதித்தபடியே ஆகும் என்று அறிவாயாக. எ—று. 22

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே — விற்
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே [பிடித்து
சீரொழுகு சான்றோர் சினம்.

ப — ரை: கயவர் கடுஞ்சினத்துக் கல்பிளவோடு ஒப்பர் — கீழோர் (தம்முள்ளே) கடுங்கோபத்தினுல் வேறுபட்டால் கல்லினுடைய பிளவுகளைப் போல்வார் (திரும்பக் கூடார்), பொன் பிளவோடு ஒப்பாரும் போல்வார் — (அப்படி வேறுபட்டபோது) பொன்னினுடைய பிளவுகளோடு ஒப்பாவாரும் ஒப்பாவார் (ஒருவர் கூட்டக் கூடுவர்); சீர் ஒழுகு சான்ருேர் சினம் — சிறப்பு மிக்க அறிவுடையோருடைய கோபம், வில் பிடித்து நீர் கிழிய எய்த வடுப் போல மாறும் — (அம்பினுலே) தண்ணீர் பிளக்க எய்த (அதனுடைய) பிளவுகள்போல (அப்போதே) நீங்கும். எ — று. 23

நற்ரு மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற் [போல்
கற்ருரைக் கற்ருரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுவக்கும் பிணம்.

ப — ரை: கயத்தின் நல் தாமரை நல் அன்னம் சேர்ந்தாற் போல — குளத்திலுள்ள நல்ல தாமரைப்பூவை நல்ல அன்னப்பறவை சேர்ந்தாற்போல, கற்ருரைக் கற்ருரே காமுறுவர் — கற்றறிந்தவரைக் கற்றறிந்தவரே விரும்பிச் சேர்வார், முதுகாட்டில் பிணம் காக்கை உவக்கும் — சுடுகாட்டிலே கிடக்கின்ற பிணத்தைக் காக்கையே விரும்பும், (அதுபோல) கற்பு இலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் — கல்வியில்லாத மூடரை மூடரே கொண்டாடுவர். எ — று. 24

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு — நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

ப - ரை: நாகம் தான் நஞ்சு உடைமை அறிந்து கரந்து உறையும் — நாகபாம்பு தான் விஷம் உடையதா யிருத்தலை அறிந்து ஒளித்துக்கொண்டு இருக்கும், நீர்ப் பாம்பு அஞ்சாப் புறங்கிடக்கும் — (தன்னிடத்தில் விஷம் இல்லாத) நீர்ப்பாம்பு அஞ்சாமல் வெளியிலே கிடக்கும், (அவைபோல) நெஞ்சில் கரவு உடையார் தம்மைக் கரப்பர் — மனத்தினுள்ளே வஞ்சனையை உடையவர் தம்மைத் தாமே மறைப்பார், கரவு இலா நெஞ்சத்தவர் கரவார் — வஞ்சனை இல்லாத மனத்தை உடையவர் (அப்படித் தம்மை) மறைக்கமாட்டார். எ - று. 25

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லைக் கற்றோற்குச்
சென்ற விடம்எல்லாஞ் சிறப்பு.

ப - ரை: மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர்தூக்கின் — அரசனையும் குற்றந்தீரக் கற்ற வித்துவானையும் ஆராய்ந்து பார்த்தால், மன்னனில் கற்றோன் சிறப்புடையன் — அரசனிலும் வித்துவானே சிறப்பை உடையவனவன், மன்னற்குத் தன்தேசம் அல்லாற் சிறப்பு இல்லை — அரசனுக்கு அவனுடைய தேசத்தில் அல்லாமல் (அந்நிய தேசங்களிலே) சிறப்பு இல்லை, கற்றோற்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு — வித்துவானுக்கு (அவன்) போன தேசங்கள் எல்லாவற்றிலும் சிறப்பு உண்டாகும். எ - று. 26

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்
றம்அல்லாத மாந்தர்க் கறம்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

ப-ரை: மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் — மெல்லிய வாழை மரத்துக்கு அது ஈன்ற காயே யமனாகும், (அதுபோல) கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம் — கற்று அறியாத மனிதருக்கு கற்றறிந்தவருடைய உறுதிச்சொல்லே யமனாகும், அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் — (தரும சிந்தையை உடையவர்) அல்லாத மனிதருக்குத் தருமமே யமனாகும், இசைந்து இல்லிற்கு ஒழுகாப் பெண் கூற்றம் — கணவன் கருத்துக்கு உடன்பட்டு இல்லறத்தில் ஒழுகாத மனையாளே (அக் கணவனுக்கு) யமனாகும். எ — று. 27

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா தாதலால் — தந்தந்
தனஞ்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கேட்டான்
மனஞ்சிறியர் ஆவரோ மற்று.

ப-ரை: மெல் சந்தனக் குறடு — மிருதுவாகிய சந்தனக் கட்டையானது, தான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைபடாது — தான் தேய்ந்துபோன காலத்திலும் (தன்னுடைய) நன்மணத்திற் குறையாது, ஆதலால் — ஆதலினாலே, தார்வேந்தர் — சேனையையுடைய அரசர்கள், கேட்டால் தம்தம் தனம் சிறியர் ஆயினும் — கேட்டினாலே தங்கள் தங்கள் செல்வத்திற் குறைந்தவரானாலும், மனம் சிறியர் ஆவரோ — மனவலிமையிலே குறைந்தவராவாரோ (ஆகார்). எ — று. 28

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் — திருமடந்தை
ஆம்போ தவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

ப — ரை: மருவு இனிய சுற்றமும் — தழுவிய இனிய உறவும், வான் பொருளும் — மேலாகிய பொருளும், நல்ல உருவும் — நல்ல அழகும், உயர் குலமும் எல்லாம் — உயர்வாகிய குலமும் என்னும் இவைகளெல்லாம், திருமடந்தை ஆம்போது அவளோடும் ஆகும் — சீதேவி வந்து கூடும் பொழுது அவளுடனே வந்து கூடும், அவள் பிரிந்து போம் போது அவளோடும் போகும் — அவள் நீங்கிப் போம் பொழுது அவளுடனே நீங்கிப்போகும். எ — று. 29

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

ப — ரை: மரம் — மரங்களானவை, மாந்தர் குறைக்குந் தனையும் — (தம்மை) மனிதர் வெட்டுமளவும், குளிர் நிழலைத் தந்து மறைக்கும் — அவருக்குக் குளிர்ச்சியாகிய நிழலையே கொடுத்து (வெயிலை அவர் மேலே படவொட்டாமல்) மறைக்கும், (அதுபோல) அறிவு உடையோர் — அறிவுடையவர், சாம் தனையும் தீயனவே செய்திடினும் — (தாம்) இறந்துபோமளவும் (தமக்கு இறந்துபோகத்தக்க) தீங்குகளையே பிறர் செய்தார் ஆயினும், தாம் அவரை ஆம் தனையும் காப்பர் — தாம் அவரையும் (தம்மாலே) ஆகுமளவும் (நன்மையே செய்து) காப்பர். எ — று. 30

உ

# நல்வழி

## உரையுடன்

### காப்பு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

பதவுரை: கோலம்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே — அழகு செய்கின்ற உயர்வாகிய யானை முகத்தையுடைய பரிசுத்தமாகிய இரத்தினம்போலும் விநாயகக்கடவுளே, நான் உனக்குப் பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து தருவேன் — அடியேன் உமக்குப் பாலும் தெளிந்த தேனும் வெல்லப்பாகும் பருப்புமாகிய இந் நான்கையும் கலந்து நிவேதிப்பேன், நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா — நீர் அடியேனுக்குச் சங்கத்தில் வளர்க்கப்பட்ட (இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும்) தமிழ் மூன்றையுந் தந்தருளும். என்றவாறு.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் — எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.

ப — ரை: புண்ணியம் ஆம் — புண்ணியமே செய்யத் தக்கது, பாவம் போம் — பாவமே ஒழியத்தக்கது, போன நாள் செய்த அவை — முற்பிறப்பிற் செய்த அந்தப் புண்ணிய பாவங்களே, மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் —

பூமியிலே பிறந்த மனிதர்களுக்கு (இப் பிறப்பில் இன்ப துன்பங்களை அனுபவித்தற்குக் காரணமாக) வைத்தபொருளாகும், எண்ணுங்கால் எச்சமயத்தோர் சொல்லும் ஈது ஒழிய வேறு இல்லை – ஆராயுமிடத்து எந்தச் சமயத்தார் சொல்வதும் இந்தப் பொருளேயல்லாமல் மற்றொன்றுமில்லை, தீது ஒழிய நன்மை செயல் – (ஆதலினாலே) பாவம் நீங்கப் புண்ணியத்தைச் செய்க. எ – று. 1

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

ப – ரை: சாற்றுங்கால் மேதினியில் சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை – சொல்லுமிடத்துப் பூமியிலே (உயர்வாகிய சாதியென்றும் இழிவாகிய சாதியென்றும்) சாதி இரண்டேயல்லாமல் வேறில்லை, (அவ்விரண்டு சாதியாரும் யாவரெனின்):— நீதி வழுவா நெறிமுறையின் இட்டார் பெரியோர் – நீதி தவறாத நல் வழியிலே (நின்றுகொண்டு முறைமையோடு சற்பாத்திரங்களா யுள்ளவருக்குக்) கொடுத்தவரே உயர்வாகிய சாதியார், இடாதோர் இழிகுலத்தோர் – அங்ஙனம் கொடாதவரே இழிவாகிய சாதியார், பட்டாங்கி லுள்ளபடி - உண்மை நூலின் உள்ள கிரமம் (இதுவேயாம்). எ – று. 2

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே—இடுங்கடுக
உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

ப – ரை: இயல் உடம்பு இது – திரிகின்ற இந்த உடம்பானது, இடும்பைக்கு இடும்பை அன்றே – பல துன்பங்க(ளாகிய சரக்குக)ளுக்கு நிறைத்து வைக்கும் பயன்றோ, இடும் பொய்யை மெய் என்று இராதே-

(போசனத்தை) இடுகின்ற நிலையில்லாததாகிய இந்த உடம்பை நிலையுடையதென்று நம்பி இராமல், கடுக இடும் — சீக்கிரம் (சற்பாத்திரங்களாயுள்ளவர்களுக்குக்) கொடுங்கள், உண்டாயின் — (இத் தருமம் உங்களிடத்து) உண்டாயின், பெருவலி நோய் விண்டாரைக் கொண்டாம் வீடு — பெரிய வலிமையையுடைய மல நோய் நீங்கியவரை மெச்சிக்கொள்கின்ற முத்தியானது, ஊழின் உண்டாகும் — முறையினாலே (உங்களுக்குக்) கிடைக்கும். எ — று. 3

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லாற் — கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு.

ப — ரை: யார்க்கு — யாவருக்காயினும், புண்ணியம் வந்து எய்துபோது அல்லால் — (முன்செய்த) புண்ணியம் வந்து கூடிய போதல்லாமல், எண்ணி ஒரு கருமம் செய்யொண்ணாது — (மற்றைக் காலத்திலே) நினைத்து ஒரு தொழிலைச் செய்ய முடியாது, கண் இல்லான் மாங்காய் விழ எறிந்த மாத்திரைக்கோல் ஒக்கும் — புண்ணியம் வந்து கூடாத அக்காலத்திற் செய்யும் (அத்தொழிலானது) கண் இல்லாதவன் மாங்காய் விழுதற்கு எறிந்த மாத்திரைக் கோலைப் போலும், ஆம் காலம் அவர்க்கு ஆகும் — (புண்ணியம் வந்து கூடியபோது) அவருக்கு அத்தொழில் தானே முடியும். எ — று. 4

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா — இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

ப — ரை: வாராத வருந்தி அழைத்தாலும் வாரா — (தமக்கு) வராதவைகள் வருந்தி அழைத்தாலும் வாராவாம், பொருந்துவன போமின் என்றாற் போகா — (தமக்கு)

வருமவைகள் போமினென்று வெறுத்தாலும் போகா வாம், இருந்து ஏங்கி — (இவ்வுண்மையை அறியாமல்) இருந்துகொண்டு ஏக்கமுற்று, நெஞ்சம் புண் ஆக தாம் நெடுந்தூரம் நினைந்து துஞ்சுவதே — மனம் புண்ணுகும்படி (அவைகளைத்) தாங்கள் நெடுந்தூரம் நினைந்து மாண்டு போவதே, மாந்தர் தொழில் — மனிதருடைய தொழி லாம். எ — று. 5

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி ஞலென்
உடலோடு வாழு முயிர்க்கு.

ப — ரை : ஒருவர்க்கு உள்ளது ஒழிய — ஒருவருக்கு (ஊழினுல்) உள்ளதல்லாமல், ஒருவர் சுகங் கொள்ளக் கிடையா — மற்றெருவருடைய சுகங்களை அநுபவிக்க விரும் பினுல் அவை கிடையாவாம், (ஆதலினுல்) குவலயத்தில் — இப்பூமியிலே, உடலோடு வாழும் உயிர்க்கு — உடம்புக ளோடு கூடிவாழும் உயிர்களுக்கு, வெள்ளக் கடல் ஓடி மீண்டு கரை ஏறினுல் என் — வெள்ள நீரையுடைய சமுத் திரத்திலே (கப்பலின்மேற்) சென்று (சம்பாதித்துக் கொண்டு) திரும்பிவந்து கரை ஏறினுலும் அதனுற் பயன் யாது? எ — று. 6

எல்லாப் படியாலு மெண்ணிஞ லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலிஞ லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

ப — ரை : எல்லாப் படியாலும் எண்ணினுல் — சகல விதங்களினுலும் ஆராயுமிடத்து, இவ்வுடம்பு பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை — இந்தச் சரீரம் பொல்லாத புழுக்களுக்கும் நிறைந்த வியாதிகளுக்கும் புல்லிய ஒரு சிறு வீடாக இருக்கின்றது, நல்லார் அறிந்து இருப்பார் —

நல்லறிவினேர்கள் (இவ்வுடம்பினிழிவை) அறிந்திருப்பார்கள், ஆதலினுல் கமல நீர்போல் பிரிந்து இருப்பார் — ஆகையால் அவர்கள் தாமரை இலையின் நீர்போல (இவ்வுடம்பிலே கூடிருயிருந்தும்) கூடாதிருப்பார்கள், பிறர்க்குப் பேசார்— (பயன்படாமையால்) பிறருக்கு (இந்த நிலையை)ச் சொல்லார்கள். எ — று. 7

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் — தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்.

ப — ரை: மகிதலத்தீர் கேண்மின் — பூமியிலுள்ள மனிதர்களே கேளுங்கள், ஈட்டும் பொருள் — தேடுதற்குரிய பொருள்களானவை, முயற்சி எண் இறந்த ஆயினும்— முயற்சிகள் அளவிறந்தனவாயினும், ஊழ் கூட்டும்படி அன்றிக் கூடாவாம் — ஊழ் கூட்டுமளவில்லாமற் சேராவாம், தனம் தரியாது — (ஊழினுலே சேரினும்) அப்பொருள் நிலைபெறுது, தேட்டம் மரியாதை — (ஆதலினுல்) நீங்கள் தேடத் தகுவது மரியாதையேயாம். எ — று.

மரியாதை — நன்னெறியி னிற்றல். 8

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலும்
இல்லையென மட்டா ரிசைந்து.

ப — ரை: ஆற்றுப் பெருக்கு அற்று—ஆற்றில் வெள்ளம் வற்றிப்போய், அடிசுடும் அந்நாளும் — (மணலானது வெய்யிலினுலே காய்ந்து நடப்பவருடைய) அடியைச் சுடுகின்ற அக் காலத்திலும், அவ் ஆறு ஊற்றுப்பெருக்கால் உலகு ஊட்டும்—அந்த ஆருனது ஊற்றுநீர்ப் பெருக்கினுல் உலகத்தாரை உண்பிக்கும், (அதுபோல) நல்ல குடிப்பிறந்தார் — நல்ல குடியிலே பிறந்தவர், நல்கூர்ந்தார் ஆனலும் —

வறுமையடைந்த காலத்திலும், மற்றவர்க்கு இசைந்து இல்லை எனமாட்டார்—இரந்தவருக்கு (கருத்து) இசைந்து இல்லையென்று சொல்லாது கொடுப்பர். எ – று. 9

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் — வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

ப – ரை: மாநிலத்தீர் – பெரிய பூமியிலுள்ள மனிதர்களே, ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும் – (இறந்த) அவ்விடத்தில் வருடந்தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ – இறந்தவர் திரும்பி வருவாரோ (வரமாட்டார்), வேண்டா – (ஆதலினால்) அழ வேண்டுவதில்லை, நமக்கு அதுவழியே நாம்போம் அளவும் எமக்கு என் என்று – நமக்கும் அம் மரணமே வழியாகும் நாம் இறந்து போமளவும் எமக்கு யாது சம்பந்தம் என்று, இட்டு உண்டு இரும் – பிச்சை இட்டு நீங்களும் உண்டு (கவலையற்று) இருங்கள். எ – று. 10

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் — ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

ப – ரை: இடும்பை கூர் என் வயிறே – துன்பம் மிகுகின்ற என்னுடைய வயிறே, ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய் – (கிடையாதபோது) ஒருநாளுக்குப் போசனத்தை விட்டிரு என்றால் விட்டிராய், இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் – (கிடைத்தபோது) இரண்டு நாளுக்கு (உண்ணும் போசனத்தை ஒருங்கு) ஏற்றுக்கொள் என்றால் ஏற்றுக்கொள்ளாய், ஒரு நாளும் என் நோ அறியாய் – ஒரு நாளிலாயினும் என்னுடைய வருத்தத்தை அறியாய், உன்னோடு வாழ்தல் அரிது – (ஆதலினால்) உன்னோடு கூடி வாழ்தல் எனக்கு அருமையாக இருக்கின்றது. எ – று. 11

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

ப — ரை : ஆறு அம் கரையில் மரமும் — ஆற்றினது கரையில் இருக்கின்ற மரமும், அரசு அறிய வீற்று இருந்த வாழ்வும் விழும் அன்றே — அரசன் அறிய அதிகாரஞ் செய்து (சம்பாதித்துப்) பெருமையாக வாழ்கின்ற வாழ்க்கையும் அழிந்து போமன்றோ, உழுது உண்டு வாழ்வு ஏற்றம் — (ஆதலினாலே) உழுது பயிர்செய்து உண்டு வாழ்வதே உயர் வாகும், அதற்கு ஒப்பு இல்லை — அதற்குச் சமானம் இல்லை, வேறு ஓர் பணிக்குப் பழுது உண்டு — மற்றைத் தொழில் வாழ்க்கைகளுக் கெல்லாம் அழிவு உண்டு. எ — று. 12

ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் — ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்.

ப — ரை : அம்புவி அதன்மேல் — அழகிய பூமியின் மேலே, ஆவாரை அழிப்பார் யார் — (நல்வினையினால் நெடுங் காலம்) உயிர் வாழ்வதற்கு உரியவரை (இடையிலே) அழிக்கவல்லவர் யாவர்?, அது அன்றிச் சாவாரைத் தவிர்ப் பவர் யார் — அதுவல்லாமலும் (தீவினையினால்) இறத்தற் குரியவரை நிறுத்த வல்லவர் யாவர்?, ஓவாமல் ஐயம் புகு வாரை விலக்குவார் யார் — (செல்வம் இழந்து) ஒழியாமல் பிச்சைக்குச் செல்வோரைத் தடுக்க வல்லவர் யாவர்?, மெய் — (இது) சத்தியமேயாம். எ — று. 13

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை — சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும்.

ப — ரை : பேசுங்கால் — (ஆராய்ந்து) சொல்லுமிடத்து, பிச்சைக்கு மூத்த குடி வாழ்க்கை — பிச்சை எடுத்து உண்டலிலும் (இழிவிற்) பெரிய குடிவாழ்க்கை யாவது, பல இச்சை சொல்லி இடித்து உண்கை — பலவாகிய இச்சைகளைப் பேசி (ஒருவரை) நெருங்கி வாங்கி உண்ணுதலாம், சிச்சீ — சீசீ (இது என்ன செய்கை), வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது — வயிற்றை வளர்த்தற் பொருட்டு மானங் கெடாமல், உயிர் விடுகை சால உறும் — உயிரை விடுதலே மிக (உயர்ச்சியைப்) பொருந்தும். எ-று. 14

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை — உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

ப — ரை : சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு— சிவாயநம என்று தியானித்துக்கொண்டு இருப்பவருக்கு, ஒரு நாளும் அபாயமில்லை — ஒரு நாளாயினும் இடுக்கண் உண்டாகாது, இதுவே மதியாகும் உபாயம் — இஃதொன்றுமே விதியை வெல்லுவதற்கேற்ற அறிவான உபாயமாம், அல்லாத எல்லாம் மதி விதியே ஆய் விடும் — (இச் சிவத்தியானம்) அல்லாத மற்றையிடங்களிலெல்லாம் புத்தியானது விதியின் வசத்ததேயாகிவிடும். எ — று.

இதுவே என்பது பின்னுங் கூட்டப்பட்டது. 15

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாறாக் கருணையாற் — பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி.

ப — ரை : தண்ணீர் நிலநலத்தால் — தண்ணீரானது நிலத்தினது நன்மையினாலும், தக்கோர் குணம் கொடையால் — நல்லோரது குணமானது கொடையினாலும், கண்ணீர்மை மாறாக் கருணையால் — கண்களையுடைய குணமானது நீங்காத அருளினாலும், பெண் நீர்மை கற்பு அழியா ஆற்றால் — பெண்களுடைய குணமானது கற்புநிலை கெடாத வழியினாலும், கடல் சூழ்ந்த வைய

கத்துள் அற்புதமா மென்றே அறி-சமுத்திரஞ் சூழ்ந்த பூமி யிடத்து (எல்லாரும்) ஆச்சரியப்படத்தக்கனவைகளாகும் என்று நீ அறிவாயாக. எ—று. 16

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம் — வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

ப—ரை: வையத்து பாவம் அறும் என்ன அறிந்து—பூமியிலே (சற்பாத்திரத்திற் செய்யப்படுந் தானத்தினாலே) பாவம் நீங்கும் என்று உணர்ந்து, அன்று இடார்க்கு—அக் காலத்திலே (சற்பாத்திரத்திலே) தானஞ் செய்யா தவருக்கு, செய் தீவினை இருக்க—செய்த அப்பாவம் (வறுமைக்கு வித்தாய்) இருக்க, இன்று தெய்வத்தை நொந் தக்கால்—இப்பொழுது கடவுளை வெறுத்தால், இருநிதியம் எய்த வருமோ—பெரிய திரவியம் பொருந்த வருமோ (வராது), வெறும் பானை மேல் பொங்குமோ—வெறும் பானை (அடுப்பிலே வைத்து எரித்தால்) மேலே பொங்குமோ (பொங்காது). எ—று. 17

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகின்
உற்றா ருகந்தா ரெனவேண்டார் — மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம்.

ப—ரை: பேர் உலகின்—பெரிய பூமியிலே, பெற்றார் (என) (இவர் எம்மைப்) பெற்றவர் என்றும், பிறந்தார் (என)—(இவர் எமக்குப்) பிறந்தவர் என்றும், பெருநாட் டார் (என)—(இவர் எம்முடைய) பெரிய தேசத்தார் என்றும், உற்றார் (என)—(இவர் எம்முடைய) சுற்றத்தார் என்றும், உகந்தார் (என)—(இவர் எம்மைச்) சினேகித் தவர் என்றும், வேண்டார்—விரும்பாதவராகிய உலோ பிகள், மற்றோர் இரணம் கொடுத்தால் இடுவர்—அந்

நியரே யாயினும் (தம்முடம்பிலே) காயத்தைச் செய்தா ராயின் (அவருக்கு எல்லாங்) கொடுப்பர், சரணம் கொடுத் தாலும் இடார் — (முன் சொல்லப்பட்டவர்) அடைக்கலம் புகுந்தாராயினும் அவருக்கு ஒன்றுங் கொடார். எ — று. 18

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் — போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

ப — ரை : வயிற்றின் கொடுமையால்—வயிற்றினுடைய (பசிக்) கொடுமையால், சேவித்தும் — பிறரைச் சேவித்தும், சென்றிரந்தும் — (பலரிடத்திலே) போய் யாசித்தும், தெண் நீர்க் கடல் கடந்தும் — தெளிவாகிய நீரையுடைய சமுத் திரத்தைக் (கப்பலேறி) கடந்தும், பாவித்தும் — (ஒரு வரைப்) பெரியவராகப் பாவித்தும், பார் ஆண்டும் — பூமியை ஆண்டும், பாட்டு இசைத்தும் — செல்வரைப் (புகழ்ந்து) பாட்டுப்பாடியும், நாம் உடம்பை நாழி அரிசிக்கே பாழின் போவிப்பம் — நாம் இந்தச் சரீரத்தை நாழி அரிசிக்காகவே பாழிலே செலுத்துகின்றோம். எ-று. 19

அம்மி துணையாக வாறிழிந்த வாறொக்கும்
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் — இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.

ப — ரை : கொம்மை முலை பகர்வார்க் கொண் டாட்டம் — குவிவாகிய தனங்களை விற்கின்ற பரத்தை யரைக் கொண்டாடுதல், அம்மி துணையாக ஆறு இழிந்த ஆறு ஒக்கும் — அம்மிக்கல்லே துணையாக ஆற்றுவெள்ளத் தில் இறங்கிய தன்மையைப் போலும், அன்றியும் மா நிதியம் போக்கி வெறுமைக்கு வித்து ஆய் விடும் — (அது) பெரிய செல்வத்தை அழித்து வறுமைக்குக் காரணமாய்விடும். இம்மை மறுமைக்கு நன்று அன்று — (ஆதலினால்) அது இப் பிறப்பிற்கும் வரு பிறப்பிற்கும் நல்லதாகாது. எ — று.

ஓடத்தினாலே கடக்கத்தக்க ஆற்றை அம்மியினாலே கடக்கப் புகுந்தவன் அமிழ்ந்து உயிரை இழத்தல் போல, மனைவியினாலே அநுபவிக்கத்தக்க இன்பத்தை வேசியினாலே அநுபவிக்கப் புகுந்தவன் மேகநோயால் வருந்தி உயிரை இழப்பன். ஆதலின், அம்மி துணையாக வாறிழிந்தவா றொக்கு மென்றார். 20

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் — ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்.

ப — ரை: சிவந்த தாமரையாள் — செந்தாமரை மலரில் இருக்கின்ற சீதேவியானவள், வஞ்சம் இலார்க்கு— வஞ்சனை இல்லாதவருக்கு, நீரும் — நீர் வளத்தையும், நிழலும் — நிழல் வளத்தையும், நிலம்பொதியும் நெற் கட்டும் — நிலத்திலே நிறைய நெற்போரையும், பேரும் — பேரையும், புகழும் — கீர்த்தியையும், பெருவாழ்வு — பெரிய வாழ்வையும், ஊரும் — கிராமத்தையும், வரும் திருவும் — வளர்கின்ற செல்வத்தையும், வாழ்நாளும் — நிறைந்த ஆயுளையும், என்றுந் தரும் — எந்நாளும் கொடுத்தருளுவள். எ — று. 21

பாடுபட்டுத் தேடிப்பணத்தைப்புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

ப - ரை: பணத்தைப் பாடுபட்டுத் தேடிப் புதைத்து வைத்து — பணத்தைப் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து (நீங்க ளும் உண்ணுமல் பிறர்க்குங் கொடாமல் பூமியிலே) புதைத்து வைத்து, கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - அப் பொருட் கேட்டினால் (சரீரசுகத்தையும் ஆன்ம சுகத்தையும் ஒருங்கு) இழந்த மனிதர்காள்! (நான் சொல்வதைக்) கேளுங்கள்,

ஆவி கூடுவிட்டுப் போயினபின்பு — ஆன்மா சரீரத்தைவிட்டு நீங்கிய பின்பு, பாவிகாள் அந்தப் பணம் இங்கு ஆர் அநுபவிப்பார் — பாவிகளே! அப் பணத்தை இவ்விடத்து யாவர் அநுபவிப்பார். எ — று. 22

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே — மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

ப - ரை: மன்று ஓரஞ் சொன்னார் மனை — தரும சபையிலே பட்சபாதஞ் சொன்னவருடைய வீட்டிலே, வேதாளஞ் சேரும் — பேய்கள் (வந்து) சேரும், வெள்ளெருக்குப் பூக்கும் — வெள்ளெருக்கு (முளைத்து) மலரும், பாதாளமூலி படரும் — பாதாளமூலி என்னும் கொடி படரும், மூதேவி சென்று இருந்து வாழ்வள் — மூதேவியானவள் போய் நிலை பெற்று வாழ்வள், சேடன் குடிபுகும் — பாம்பு குடியிருக்கும். எ - று. [பாதாளமூலி — சிறு நெருஞ்சில்] 23

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் — மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

ப — ரை: நீறு இல்லா நெற்றி பாழ் — விபூதியில்லாத நெற்றி பாழாகும், நெய் இல்லா உண்டி பாழ் — நெய்யில்லாத போசனம் பாழாகும், ஆறு இல்லாத ஊருக்கு அழகு பாழ் — நதியில்லாத ஊருக்கு அழகு பாழாகும், மாறு இல் உடற்பிறப்பு இல்லா உடம்பு பாழ் — மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும், மடக்கொடி இல்லா மனை பாழே — (இல்லத்துக்குத்தக்க) மனைவியில்லாத வீடு பாழேயாகும், எ — று. 24

ஆன முதலி லதிகஞ் செலவாளுன்
மான மழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்குங் கள்ளனு யேழ்பிறப்புந் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனு நாடு.

ப — ரை: ஆன முதலில் செலவு அதிகம் ஆனுல் — (தனக்குக்) கிடைத்த முதற்பொருளுக்குச் செலவு அதிகமானவன், மானம் அழிந்து — மானங் கெட்டு, மதிகெட்டு— அறிவு இழந்து, போன திசை எல்லார்க்குங் கள்ளனுய் — (தான் ஓடிப்)போன திசையிலும் எல்லார்க்குங் கள்ளனுகி, ஏழ் பிறப்புந் தீயனுய் — எழுவகைப் பிறப்புகளினும் பாவம் உடையவனுகி, நல்லார்க்கும் பொல்லனும் — (தன்னிடம் அன்பு வைத்த) பெண்டிருக்கும் பொல்லாதவனுவான், நாடு — (இதனை) ஆராய்ந்து அறிவாயாக. எ — று. 25

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை — தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

ப — ரை: பசி வந்திட — பசிநோய் ஒன்று மாத்திரம் வந்தால், மானம் — மானமும், குலம் — குலமும், கல்வி — கல்வியும், வண்மை — வாய்மையும், அறிவுடைமை — அறிவுடைமையும், தானம் — கொடையும், தவம் — தவமும், உயர்ச்சி — உயர்வும், தாளாண்மை — தொழின் முயற்சியும், தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் — தேன் பெருக்குப் போலத் தோன்றுகின்ற சொல்லையுடைய மங்கையர்மேல் ஆசை வைத்தலும் ஆகிய, பத்தும் பறந்துபோம்— இப்பத்தும் விட்டோடிப்போம். எ — று. 26

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்ருகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

ப—ரை: ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும் — ஒரு பொருளைப் பெற நினைத்தால் அப்பொருள் கிடையாமல் வேருெரு பொருள் கிடைத்தாலும் கிடைக்கும், அன்றி அது வரினும் வந்து எய்தும் — அப்படி அல்லாமல் அப்பொருளே வந்து கிடைத்தாலும் கிடைக்கும், ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் — (இன்னும்) ஒரு பொருளை நினையாதிருக்கு முன்னே அது தானே வந்து நின்ருலும் நிற்கும், எனை ஆளும் ஈசன் செயல் — (இவைகளெல்லாம்) என்னை ஆண்டருளும் கடவுளுடைய செய்கைகளாகும். எ - று. 27

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடிநினைந் தெண்ணுவன-கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.

ப — ரை: கண் புதைந்த மாந்தர் — அகக்கண் குருடாக இருக்கின்ற மனிதர், உண்பது நாழி — உண்பது ஒரு நாழி அரிசி அன்னமேயாகும், உடுப்பது நான்கு முழம் — (அவர்) உடுப்பது நான்குமுழ வஸ்திரமேயாகும், (இப்படியாகவும்) நினைந்து எண்ணுவன எண்பது கோடி — (அவர்) நினைத்து எண்ணுங் காரியங்களோ எண்பது கோடியாகும், (ஆதலினுல்) மண்ணின் கலம் போலச் சாம் துணையும் குடி வாழ்க்கை சஞ்சலமே — மட்பாத்திரம் அழிந்தாற்போல (அவர் சரீரம்) அழியும் வரையும் (அவருடைய) குடி வாழ்க்கையிலே துன்பமே விளையும். எ - று. 28

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை — சுரந்தமுதம்
கற்ரு தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்ரு ருலகத் தவர்.

ப — ரை: மரம் பழுத்தால் — மரம் பழுத்திருந்தால், வா என்று வெளவாலை கூவி இரந்து அழைப்பார் அங்கு

யாவரும் இல்லை — இப்பழத்தைத் தின்னுதற்கு வா என்று வெளவாலைக் கூவி வேண்டி அழைப்பவர் அம்மரத்தருகில் ஒருவரும் இல்லை, கன்று ஆ அமுதம் சுரந்து தரல்போல கரவாது அளிப்பரேல் — கன்றையுடைய பசுவானது பாலைச் சுரந்து கொடுத்தல்போல ஒளிக்காமற் கொடுப்பாராயின், உலகத்தவர் உற்றார் — (அவ் வெளவால் போலத் தாமே வந்து) எல்லாரும் உறவினராவர். எ — று. 29

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே — வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்று
வெறுத்தாலும் போமோ விதி.

ப - ரை : வேந்தே — அரசனே, முன் தாம் தாம் செய்த வினை — முற்பிறப்பிலே தாம் தாம் செய்துகொண்ட நல்வினை தீவினைகளை, பூந்தாமரையோன் பொறி வழியே தாமே அநுபவிப்பர் — தாமரை மலரில் இருக்கின்ற பிரமா விதித்த படியே தாமே அநுபவிப்பார்கள், ஒறுத்தாரை என்செயலாம் — (தீவினையினாலே தூண்டப்பட்டுத்) தீங்கு செய்தவரை நாம் யாது செய்யலாம், ஊர் எல்லாம் ஒன்றாக வெறுத்தாலும் விதி போமோ — ஊரிலுள்ளோர் எல்லாருந் (துணையாக) திரண்டு வெறுத்தாலும் விதி போமோ (போகாது). எ - று. 30

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலும்
ஒழுக்க முயர்குலத்தி னன்று — வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி.

ப - ரை : இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று — இலக்கண வழுக்களை யுடைய செய்யுளினும் இசை நல்லது, உயர் குலத்தின் சாலும் ஒழுக்கம் நன்று—உயர்வாகிய குலத்திலும் மாட்சிமைப்பட்ட ஒழுக்கம் நல்லது, வழுக்கு உடைய வீரத்தின் விடாநோய் நன்று — தவறுதலையுடைய

வீரத்திலும் தீரா வியாதி நல்லது, பழிக்கஞ்சாத் தாரத்தில் தனி நன்று — பழிச்சொல்லுக்கு அஞ்சாத மனைவியோடு கூடி வாழ்தலினும் தனியே இருத்தல் நல்லது. எ - று. 31

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர் — சோறிடுந்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து.

ப - ரை: மா நிலத்தீர் — பெரிய பூமியிலுள்ளவர்களே, ஆறு இடும் மேடும் மடுவும் போல் — ஆற்று வெள்ளத்தினுல் உண்டாக்கப்படும் மேடும் பள்ளமும்போல, செல்வம் ஏறிடும் மாறிடும் — செல்வம் வளர்வதும் தேய்வதுமாயிருக்கும், (ஆதலினுல்) தண்ணீரும் வாரும் — குடிக்கத் தண்ணீரையும் வாருங்கள், தருமமே சார்பு ஆக உள் நீர்மை உயர்ந்து வீறும் — (இப்படிச் செய்துவருவீர்களானுல்) இந்தத் தருமமே துணையாக உள்ளத்திலே (சத்தியமாகிய) தன்மை ஓங்கி விளங்கும். எ - று. 32

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

ப — ரை: வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது — (வலிய) யானையின்மேலே பட்டு உருவும் அம்பானது (மெல்லிய) பஞ்சின்மேலே பாயாது, (அதுபோல) வெட்டெனவை மெத்தெனவை வெல்லா — வன் சொற்கள் இனிய சொற்களை வெல்லமாட்டா, நெடு இருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை — நெடுமையாகிய இருப்புப் பாரைக்குப் பிளவாத கருங்கற்பாறையானது, பசு மரத்தின் வேருக்கு நெக்கு விடும் — பச்சைமரத்தின் வேருக்குப் பிளந்துபோம். எ - று. 33

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்.

ப — ரை: கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் — (ஒருவன்) படியாதவனேயாயினும் அவன் கையிலே பொருள் மாத்திரம் இருந்தால், எல்லாரும் சென்று எதிர்கொள்வர் — (அவனை) யாரும் போய் எதிர் கொண்டு உபசரிப்பர், இல்லானை இல்லாளும் வேண்டாள் — (படித்தவனேயாயினும் பொருள்) இல்லாதவனை (அவன்) மனைவியும் விரும்பாள், ஈன்று எடுத்த தாய் வேண்டாள் — (அவனைப்) பெற்று வளர்த்த மாதாவும் விரும்பாள், அவன் வாயில் சொல் செல்லாது — அவன் வாயிற் பிறக்குஞ் சொல்லானது பயன்படாது. எ - று. 34

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே — தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

ப — ரை: பூவாதே காய்க்கும் மரமும் உள—பூவாமலே காய்க்கின்ற மரங்களும் உண்டு (அதுபோல), மக்களும் ஏவாதே நின்று தாம் உணர்வார் உளர் — மனிதர்களுள்ளும் ஏவாமலே இருந்து தாமே அறிந்து செய்ய வல்லவரும் உண்டு, தூவா விரைத்தாலும் நன்று ஆகா வித்து என — தூவி விதைத்தாலும் முளைத்துப் பயன்படாத விதைபோல, பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது — மூடனுக்கு (எடுத்து விளங்க)ச் சொன்னாலும் (அதனை அறியும்) அறிவு அவனிடத்து உண்டாகாது. எ - று. 35

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல் — ஒண்டொடீ
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம்.

ப — ரை : ஒள் தொடி — ஒள்ளிய வளையலை யணிந்தவளே, நண்டு சிப்பி வேய் கதலி—நண்டும் சிப்பியும் மூங்கிலும் வாழையும், நாசம் உறும் காலத்தில் — தாம் அழிவை அடையும் காலத்திலே, கொண்ட கரு அளிக்கும் கொள்கை போல் — (முறையே தாம்) கொண்ட (குஞ்சும் முத்தும் அரிசியும் காய்க்குலையும் ஆகிய) கருக்களை ஈனும் தன்மை போல, (மனிதர்கள்) போதம் தனம் கல்வி பொன்ற வருங் காலம் — ஞானமும் செல்வமும் வித்தையும் அழிய வருங் காலத்திலே, அயல் மாதர்மேல் மனம் வைப்பார் — பிறர் மனைவியர்மேல் மனம் வைப்பார்கள். எ — று. 36

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை — நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி.

ப — ரை : வேதம் முதலாம் அனைத்து ஆய நூலகத்தும் — வேதம் முதலாகிய எல்லா நூல்களினுள்ளும் (ஆராய்ந்தால்), வினைப்பயனை வெல்வதற்கு — இருவினைப் பயனை வெல்வதற்கு (உபாயம்), அது நினைப்பு எனக் கண்ணுறுவது அல்லால் இல்லை — அவ்வினைப்பயன் (நம்முடைய) நினைவாலாவது என்று அறிவதல்லாமல் வேறு இல்லை, நெஞ்சமே கவலை படேல் — மனமே கவலையை அடையாதே, மெய் விண் உறுவார்க்கு விதி இல்லை — நித்தியமாயுள்ள ஞானகாசமாகிய பதியோடு கலந்து நிற்பவருக்கு ஊழ் இல்லை. எ — று. 37

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்றும்
அன்றென்று மாமென் று மாகாதே — நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.

ப — ரை : நன்று என்றும் — (இது) நல்லது என்றும், தீது என்றும் — (இது) தீயது என்றும், நான் என்றும் —

(இது செய்தவன்) நான் என்றும், தான் என்றும் — (இது செய்தவன்) அவன் என்றும், அன்று என்றும் — (இது) அன்று என்றும், ஆம் என்றும் — (இது) ஆகும் என்றும், ஆகாதே நின்ற நிலே — பேதஞ் செய்யாமலே (பதியினுள் அடங்கி இரண்டறக் கலந்து) நின்ற நிலேயே, தான் அது ஆம் தத்துவம் — (ஆன்மாவாகிய) தான் (பதியாகிய) அது வாகின்ற உண்மை நிலேயாகும், சம்பு அறுத்தார் யாக்கைக்குத் தேடும் பொருள் போனவா — சம்பை அறுத்தார் அதனேக் கட்டுவதற்குத் தேடும் பொருள் அதுவன்றி வேறில்லாமற் போனவாறு போலப் பாசத்தின் வேருகக் காணப்பட்ட தன்னேப் பதியினுள்ளே அடைத்தற்குத் தேடும் பொருள் தானன்றி வேறில்லே. எ — று. 38

முப்பதா மாண்டளவில் மூன்றற் றெருபொருளேத்
தப்பாமற் றன்னுட் பெருஞயிற் — செப்புங்
கலேயளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலேயளவே யாகுமா மூப்பு.

ப — ரை : முப்பது ஆம் ஆண்டு அளவில் — முப்பது வயதினளவிலேயே, மூன்று அற்று — (மலம் மாயை கன்மம் என்னும் பந்தம்) மூன்றும் நீங்கி, ஒரு பொருளேத் தப்பாமல் தன்னுள் பெருன் ஆயின் — ஒப்பில்லாத முதற் பொருளாகிய பதியைத் தவருமல் தன்னுள்ளே (அனுபூதி ஞானத்திஞல் ஒருவன்) அடையாஞயின், செப்பும் கலே அளவே ஆகும் — (அம்முதற் பொருள் அவனுக்கு அவன்) கற்ற சாத்திர ஞானத்தினளவேயாகும். மூப்புக் காரிகையார் தங்கள் முலே அளவே ஆகும் — (அவன் பின் வரும்) முதுமைப் பருவத்திலே (தான் கண்ட) பெண்களுடைய தனத்தினளவாகவே (தளர்ச்சியுடையவன்) ஆவன் (ஆதலால்). எ — று. 39

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங் — கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

**ப — ரை :** தேவர் குறளும்—திருவள்ளுவநாயனாருடைய திருக்குறளும், திருநான்மறை முடிவும் — சிறப்புப் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், மூவர் தமிழும் — (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும்) சமயகுரவர் மூவருடைய (தேவாரமாகிய) தமிழ்வேதமும், முனிமொழியும் — வியாச முனிவருடைய வேதாந்த சூத்திரமும், கோவை திருவாசகமும் — (திருவாதவூரடிகளுடைய) திருக்கோவையார் திருவாசகங்களும், திருமூலர் சொல்லும் — திருமூல நாயனாருடைய திருமந்திரமும், ஒரு வாசகம் என்று உணர் — ஒரு பொருளையே குறித்த வாக்கியங்களென்று அறிவாயாக. எ — று.

உபநிடதமெனினும் வேதாந்தமெனினும் வேதாந்த சிரசெனினும் பொருந்தும். வேதாந்த சூத்திரமெனினும் பிரமமீமாஞ்சையெனினும் உத்தர மீமாஞ்சையெனினும் பொருந்தும்.

[முனிமொழியும் கோவை திருவாசகமும் என்பதற்கு துறவியாகிய மாணிக்கவாசகசுவாமிகள் பாடியருளிய திருக்கோவையாரும் திருவாசகமும் எனப் பொருள் கொள்ளலுமாம்.] 40

உ

# நன்னெறி

## உரையுடன்

### கடவுள் வாழ்த்து

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

(பதவுரை) மின்எறி — மின்னல் போலும் ஒளியை வீசுகின்ற, சடாமுடி — சடை முடியையுடைய, விநாயகன் அடிதொழ — விநாயகக் கடவுளின் திருவடிகளை வணங்குதலால், நன்னெறி வெண்பா நாற்பதும் வரும் — நன்னெறி என்னும் நூலின் நாற்பது வெண்பாவும் வரும். எ — று. ஏ - ஈற்றசை.

என்று முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்று
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ [சுவை
நாவிற் குதவும் நயந்து.

ப — ரை: பூவின் பொலிகுழலாய் — பூவினால் விளங்குகின்ற கூந்தலை யுடையவளே, பூ கை — அழகிய கையானது, புகழவோ — தன்னைப் புகழ்தல் கருதியோ, நாவிற்கு — நாவினுக்கு, துன்று சுவை — மிக்க சுவையுள்ள உணவினை, நயந்துதவும் — விரும்பிக் கொடுக்கும், (புகழ அன்று; அது போல), தீது அற்றோர் — குற்றமற்றவராகிய பெரியோர், என்றும் முகமன் இயம்பாதவர்கண்ணும் — யாதொரு

நாளிலும் (தமக்கு) உபசார வார்த்தைகளைச் சொல்லா தவரிடத்திலும், சென்று பொருள் கொடுப்பர் — தாமே சென்று (அவர்க்கு வேண்டும்) பொருள்களைக் கொடுப்பர். எ — று. 1

மாசற்றநெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

ப — ரை: நல் நுதால் — நல்ல நெற்றியை உடைய வளே, மாசு அற்ற நெஞ்சு உடையார் வன்சொல் இனிது— குற்றமற்ற மனத்தை யுடையவரது கடுஞ்சொல்லும் இனிய தாகும், ஏனையவர் பேசுற்ற இன்சொல் பிறிது என்க — (குற்றம் பொருந்திய மனத்தை யுடையவராகிய) பிறர் சொல்லிய இன்சொல்லும் கொடியதாகும் என்று அறிவா யாக, ஈசற்கு — சிவபெருமானுக்கு, நல்லோன் எறி சிலையோ — நற்குண முடையவராகிய சாக்கிய நாயனார் (அன்போடு) எறிந்த கல்லோ, ஒள் கருப்பு வில்லோன் மலரோ — ஒள்ளிய கரும்பு வில்லையுடைய மன்மதன் (அன் பின்றி) எறிந்த பூவோ, விருப்பு — விருப்பாயிற்று. எ - று. 2

தங்கட்குதவிலர்கைத் தாமொன்றுகொள்ளினவர்
தங்கட் குரியவராற் றுங்கொள்க—தங்கநெடுங்
குன்றினாற்செய்தனைய கொங்கையாய்! ஆவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து.

ப — ரை: நெடும் தங்கக் குன்றினால் செய்து அனைய கொங்கையாய் — நெடிய பொன்மலையினாலே செய்தாற் போன்ற தனங்களை யுடையவளே, ஆவின்பால் கன்றினால் கறந்து கொள்ப — (தங்களுக்குக் கொடாத) பசுவினுடைய பாலை (அப் பசுவுக்குரிய) கன்றைக் கொண்டு கறந்துகொள் வார்கள், (அதுபோல) தங்கட்கு உதவிலர் கை — தங்க ளுக்கு உதவாதவர்களுடைய கையினின்றும், தாம் ஒன்று

கொள்ளின் — தாங்கள் ஒரு பொருளைக் கொள்ளவேண்டி ஞல், அவர் தங்கட்கு உரியவரால் தாம் கொள்க — அவர்களுக்கு உரியவராலே (அப்பொருளைத்) தாங்கள் கொள்ளக் கடவர்கள். எ — று. 3

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

ப — ரை: பிறர்க்கு உதவி செய்யார் — பிறருக்கு உபகாரஞ் செய்யாத, கருங்கடல் நீர் — கரிய கடலின் நீரை, புயல் சென்று முகந்து — மேகமானது போய் மொண்டு வந்து, பிறர்க்குப் பெய்யாக் கொடுக்கும் — பிறருக்குப் பெய்து கொடுக்கும், (அதுபோல) பிறர்க்கு உதவிசெய்யார் பெருஞ்செல்வம் — பிறர்க்கு உபகாரஞ் செய்யாதவருடைய பெரிய செல்வமானது, வேறு — பிறிதேயாயினும், பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம் — பிறருக்கு உபகாரஞ் செய்பவருடைய செல்வமாகும். எ — று. 4

நீக்க மறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழ
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற் [லாய்!
புல்லினுந் திண்மைநிலை போம்.

ப - ரை: பூக் குழலாய் — பூக்களை முடிந்த கூந்தலையுடையவளே! நெல்லின் உமி சிறிது நீங்கி — நெல்லினின்றும் உமியானது சிறிது நீங்கி, பழமைபோல் புல்லினும் — முன்போலவே கூடினுலும், திண்மைநிலை போம் — (முளைத்தற்கேற்ற) வலிமையின் நிலை போய்விடும், (அதுபோல) நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும் — பிரிவு இல்லாத நண்பர் இருவர் பிரிந்து (முன்போலவே) கூடினுலும், நோக்கின் அவர் பெருமை நொய்து ஆகும் — பார்க்குமிடத்து அவருடைய பெருமை அற்பமாகும். எ — று. 5

காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி என்முகத்தாய் நோக்
கண்ணிரண்டு மொன்றையே காண். [கருன்

ப — ரை : ஓது — புகழ்ந்து சொல்லப்படுகின்ற, எண்ணிரண்டு கலையும் ஒன்றும் - பதினேறு கலைகளும் பொருந்திய, மதி என் முகத்தாய் — சந்திரன் என்று சொல்லப்படும் முகத்தையுடையவளே! கண் இரண்டும் — இரண்டு கண்களும், நோக்கல் — பார்த்தல், ஒன்றையே — ஒரு பொருளையேயாம், (இதுபோல) காதல் மனையாளும் காதலனும் — அன்புடைய மனைவியும் கணவனும், மாறு இன்றித் தீது இல் ஒரு கருமமே செய்ப — (தம்முள்ளே) மாறுபாடில்லாமல் (ஒத்துக்) குற்றமில்லாத ஒரு கருமத்தையே செய்வர். எ — று. தான் - அசை. காண் - முன்னிலையசை. 6

கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும்.

ப — ரை : முழங்கும் பனிக்கடலும் — ஒலிக்கின்ற குளிர்ச்சி பொருந்திய கடலும், முனிக்கு அரசு கையால் — முனிவர்களுக்குத் தலைவராகிய அகத்தியமுனிவர் கையால், முகந்து உண்ணப்படும் — மொண்டு பருகப்படும், (ஆதலால்) யாம் — நாம், கல்வியால் கடல் அனையம் — கல்விப் பெருமையால் கடலை நிகர்ப்போம், என்னும் — என்று கொள்கின்ற, அடல் ஏறு அனைய செருக்கு — வலிமை பொருந்திய ஆண் சிங்கத்தினது செருக்கைப் போலும் செருக்கிலே, ஆழ்த்தி விடல்— (உங்களை) அமிழ்த்தி விடாதீர்கள். எ—று. ஏ இரண்டும் - அசை. 7

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

ப—ரை: உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம்—மனத்தைத் தன்வயத்ததாக்கிக்கொண்டு எழுந்து வளர்கின்ற கோபத்தை, காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க — அடக்கிக்கொள்ளுகின்ற குணமே (அருமையாகிய) குணம் என்று அறியக்கடவாய்; வெள்ளம் தடுத்தல் அரிதோ—(பெருகி வருகின்ற) வெள்ளத்தை (க் கரைகட்டி)த் தடுத்தல் அரியதோ, தடம் கரை பேர்த்து விடுத்தல் அரிதோ—முன்கட்டப்பட்டிருந்த பெரிய கரையை உடைத்து (அதனுள் அடங்கியிருந்த வெள்ளத்தைப் புறத்திலே செல்ல) விடுத்தல் அரியதோ, விளம்பு — நீ சொல்வாயாக. எ—று. தான் — அசை. 8

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவில்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து.

ப—ரை: பலி ஏல்—(அன்பருடைய) பூசையை ஏற்றுக் கொள்ளும், கடவுள் — சிவபெருமானது, அவிர் சடைமேல் கட்செவி — விளங்குகின்ற சடையின்மேல் அணியப்பட்டிருக்கின்ற பாம்பானது, படர் சிறை — விரிந்த சிறகினையுடைய, அப் புள்ளரசைப் பார்த்து — அந்தப் பறவைகட்கு அரசராகிய கருடனைப் பார்த்து, அஞ்சாது — பயப்படாது; (அவ்வாறே) மெலியோர் — வலிமையில்லாதவர், வலிய விரவலரை — வலிமையுடைய பகைவருக்கு, தாம் வலியோர் தமை மருவில் அஞ்சார் — தாம் (அவரினும்) வலியோரைச் சேர்ந்தால் பயப்படார். எ—று. ஏ — அசை. 9

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே நின்று.

ப — ரை : திங்கள் — சந்திரனானவன், கறை இருளை நீக்கக் கருதாது — தனது களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல், மேல்நின்று உலகின் நிறை இருளை நீக்கும் — ஆகாயத்திலே நின்று உலகத்து நிறைந்த இருளை நீக்குவான்; (அதுபோல) விழுமியோர் — மேலோர், தம் குறை தீர்வு உள்ளார் — (தமது) குறை நீங்குதலை நினையாராகி, தளர்ந்து — மனம் இளகி, பிறர்க்கு உறும் — பிறருக்கு உண்டாகிய, வெம் குறை — வெவ்விய குறையை, தீர்க்கிற்பார் — நீக்குவார். எ — று. 10

பொய்ப்புலன்களைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்—துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறு வழிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு.

ப — ரை : சூறுவழிபோய் — சுழற்காற்றானது சென்று, சிறு புல் துரும்பு — சிறிய நொய்தலாகிய துரும்பை, சுழற்றும் — (எடுத்துச்) சுழற்றும், துப்பின் — (அது தன்) வலிமையால், கல்தூணைச் சுழற்றும் கொல் — சுழற்றுமோ கல்லுக்கம்பத்தை (சுழற்றமாட்டாது); (அதுபோல) பொய்ப்புலன்கள் ஐந்தும் — பொய்யாகிய ஐந்து புலன்களும், புல்லியர்பால் அன்றி — புல்லறிவாளரிடத் தல்லாமல், மெய்ப்புலவர்தம்பால்—மெய்யறிவுடையவரிடத்தே, நோய் விளையா — துன்பத்தைச் செய்யமாட்டா. எ — று. ஏ, ஆம் — அசை.

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை—திருந்திழாய்!
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.

ப — ரை : திருந்து இழாய் — திருந்திய ஆபரணத்தை யுடையவளே, சீதநீர்-குளிர்ச்சியாகிய நீரானது, பொள்ளல் சிறுகுடத்து நில்லாது வீதலோ — இல்லியை (துவாரத்தை) யுடைய சிறிய குடத்திலே நில்லாது ஒழுகிப்போதலோ (ஆச்சரியம்), நிற்றல் வியப்பு — நிற்றலே ஆச்சரியமாகும் : (அதுபோல) வருந்தும் உயிர் — வருந்துகின்ற உயிரானது, ஒன்பான் வாயில் உடம்பில் பொருந்துதலே புதுமை—ஒன்பது துவாரங்களை யுடைய உடம்பிலே தங்குதலேஆச்சரியம்; (நீங்குதல் ஆச்சரியமன்று). எ — று. தான் — அசை. 12

பெருக்க மொடுசுருக்கம் பெற்ற பொருட்கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர்—சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே! மதியின்
கலையளவு நின்ற கதிர்.

ப — ரை : மலை அளவு நின்ற சுரக்கும் முலைமாதே — மலையளவாக நின்ற (பால்) சுரக்கின்ற தனங்களை யுடைய பெண்ணே, மதியின் கதிர் கலை அளவுநின்ற — சந்திரனுடைய கிரணங்கள் வளர்தலையும் தேய்தலையும் பொருந்திய கலைகளினளவாக நின்றன; (அதுபோல) மேலோர் — பெரியோர், பெருக்கமொடு சுருக்கம் பெற்ற பொருட்கு ஏற்ப — வளர்தலையும் குறைதலையும் பொருந்திய செல்வத்திற்கு இசைய, விருப்பமொடு கொடுப்பர் — அன்போடு கொடுப்பர். எ — று. 13

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோமென்
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால் [று
இரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு.

ப — ரை : இரைக்கும் வண்டு ஊதும் - ஒலிக்கின்ற வண்டுகள் ஊதுகின்ற, மலர் ஈர்ங் கோதாய் — பூக்களாலாகிய குளிர்ச்சி பொருந்திய மாலையை யுடையவளே, மேருவரைக்கும் வளைவு வந்தன்று — (எக்காலத்திலும் அசை

வற்றிருந்த) மகாமேருமலைக்கும் (ஒரு காலத்தில்) வளைவு வந்தது; (ஆதலால்) தலையாயவர் — முதன்மையான அறிவுடையவர்கள், தொலையா — அழியாத, பெருஞ்செல்வம் — பெரிய செல்வத்திலே, தோற்றத்தோம் என்று—பிறந்திருக்கின்றோம் என்று, செருக்குச் சார்தல் இலை—செருக்கடைதல் இல்லை. எ — று. ஆல் — அசை. 14

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்(று)
எல்லா மிருந்தும்அவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

ப — ரை : நல்லாய் — நற்குணமுடையவளே, மொழி இலார்க்கு முதுநூல் ஏது — பேச்சில்லாதவராகிய ஊமைகளுக்குப் பழமையாகிய நூல் யாது பயனைச் செய்யும்; தெரியும் விழி இலார்க்கு விளக்கு ஏது — பார்க்கின்ற கண்ணில்லாதவராகிய குருடருக்குத் தீபம் யாது பயனைச் செய்யும்; (அதுபோல) இங்கு அன்பு இல்லானுக்கு — இவ்வுலகத்தில் அன்பில்லாதவனுக்கு, இடம் பொருள் ஏவல் எல்லாம் இருந்தும்—இடமும் பொருளும் ஏவலுமாகிய இவை எல்லாம் இருந்தும், அவற்கு என் செய்யும் — அவனுக்கு யாது பயனைச் செய்யும் (ஒரு பயனுஞ் செய்யா). எ — று. மற்று — அசை. 15

தம்மையுந் தங்க டலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல்.

ப — ரை : கடல் — (பெரிய) கடலானது, அல்கு கழியினும் — (தன்னை அடுத்த) சிறிய உப்பங்கழியிலும், செல்லாதோ—போய்ப்பாயாதோ; (போய்ப் பாயும்; அதுபோல) உயர்ந்தோர்—(அறிவொழுக்கங்களினால்) உயர்ந்தவர்கள், தமை அடைந்தோர் தம்மின் இழியினும் — தங்களைச்

சார்ந்தவர்கள் தங்களைப் பார்க்கினும் தாழ்ந்தவர்களாயினும், தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்து தம்மை மதியார் — தங்களையும் தங்களுடைய தலைமையையும் பார்த்துத் தங்களை மதியாதவர்களாகி, செல்வர் இடர் தீர்ப்பர்—(அவர்கள் இருக்கும் இடத்துக்குப்) போய் அவர்களுடைய துன்பத்தை நீக்குவார்கள். எ—று. 16

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

ப-ரை: பைந்தொடீ — பசும் பொன்னாலாகிய வளையல்களை யுடையவளே, எந்தை இரப்பார்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என்று—எங்கள் பிதா இரப்பவர்க்குக் கொடுத்து வறியவனானன் என்று, அவன் மைந்தர் தம் ஈகை மறுப்பரோ — அவனுடைய புதல்வர் தமது ஈகையைக் கை விடுவாரோ (விடார்; எதுபோல் எனின்) நின்று பயனுதவி நில்லா — (முன்னே அழிவில்லாமல்) நின்றுகொண்டு (பழமாகிய) பயனைக் கொடுத்து (அதனாலே) அழிவையடைந்த, அரம்பையின் — வாழை மரத்தினது, கீழ்க்கன்றும் — கீழ் நிற்கின்ற கன்றும், கனிஉதவும் — பழத்தைக் கொடுக்கும் (அதுபோல), எ—று. 17

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

ப—ரை: பொன் செய் அதிர் வளையாய்—பொன்னாலே செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களை யுடையவளே, கடல் தண் என் கதிர் வரவால் பொங்கும் — கடலானது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களை யுடைய சந்திரன் வருகையினால் பொங்கும், (அதுவன்றி) அழற்கதிரால் பொங்காது —

வெம்மை பொருந்திய கிரணங்களையுடைய சூரியன் வருகை யினாலே பொங்காது; (அதுபோல) இருநீர் வியன் உலகம் — பெரிய கடல் சூழ்ந்த பரந்த உலகத்திலுள்ளவர்கள், இன் சொலால் அன்றி வன்சொலால் என்றும் மகிழாது — இன் சொல்லினாலல்லாமற் கடுஞ் சொல்லினால் எந்நாளும் மகிழ்ச்சியடையார். எ — று. ஏ — அசை. 18

நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழற்கால் வர.

ப — ரை: தேமா—தேமா மரமானது, தென்றல் வரத் தளிர்காட்டித் திருந்தும் — தென்றற் காற்று வரத் தளிரைக் காட்டிச் சிறப்புற்றிருக்கும்; சுழல்கால் வர வருந்தும்—சுழல் காற்று வர வருந்தும், (அதுபோல) வல்லோர் — (கல்வி யறிவில்) வல்லவர், நல்லோர் வரவால் முகநகை கொண்டு இன்பு உறீஇ — நல்லவருடைய வருகையினாலே முகமலர்ச்சி கொண்டு இன்பத்தை அடைந்து, அல்லோர் வரவால் அழுங்குவார் — தீயவருடைய வருகையினாலே துன்பத்தை அடைவர். எ — று. 19

பெரியவர் தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவ தென்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

ப — ரை: தெரி இழாய் — ஆராய்ந்த ஆபரணத்தை யுடையவளே! கண் — கண்கள், மண்டு பிணியால் வருந்து பிற உறுப்பைக் கண்டு—நெருங்கிய நோயினால் வருந்துகின்ற மற்றைய உறுப்புக்களைப் பார்த்து, கலுழும் — அழும்; (அது போல) பெரியவர் — (அறிவொழுக்கங்களிற்) பெரியவர், பிறர் நோய் கண்டு — பிறருக்கு வந்த நோயைக் கண்டு, தம் நோய்போல் உள்ளம் எரியின் இழுது ஆவர் என்க —

தமக்கு வந்த நோய்போல நினைத்து மனம் நெருப்பிலே பட்ட நெய்போல் உருகுவார் என்று அறியக்கடவாய். எ — று. ஆம் — அசை. 20

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

ப — ரை : சுரநீர் மிகை — ஆகாய கங்கையின் பெருக்க மானது, எழுத்து அறிவார் ஆயும் கடவுள் — எழுத்துக் களினியல்பை அறியும் பெரியோரால் ஆராயப்படும் சிவ பெருமானது, அவிர்சடைமுன் கண்ட அளவில் — விளங்கு கின்ற சடையை எதிரே கண்ட அளவில், வீயும் — அடங்கி விடும்; (அதுபோல) எழுத்து அறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும் — இலக்கண நூலை அறியாதவருடைய மற்றைக் கல்வியினது பெருக்கமுழுதும், எழுத்து அறிவார்க் காணின் இலை — இலக்கண நூலை அறிந்தவரைக் கண்டால் இல்லா மற் போகும். எ — று. ஆம் — அசை. 21

ஆக்கும் அறிவா னலது பிறப்பினுன்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

ப — ரை : அரவின் பருமணி கண்டு நீக்குபவர் ஆர் — (நஞ்சையுடைய) பாம்பினிடத்து உண்டாகிய பருத்த மாணிக்கத்தைக் கண்டு நீங்குவோர் யாவர்; (ஒருவரு மில்லை) கடலின் கடு என்றும் கவரார் — பாற்கடலினிடத்து உண்டாகிய நஞ்சை ஒருநாளும் கொள்வாருமில்லை; (ஆத லால்) மீக்கொள் உயர்வு இழிவு — மேலாகக் கொள்கின்ற உயர்வையும் (கீழாகக் கொள்கின்ற) இழிவையும், ஆக்கும் அறிவான் அலது பிறப்பினுன் வேண்டற்க—(நற்குணங்களை) உண்டாக்குகின்ற கல்வியறிவினு லல்லாமல் சாதியினுலே விரும்பாதிருக்கக்கடவீர். எ — று. 22

பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம்—நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலேப் பேதாய்! பலகால்
எறும்பூரக் கற்குழியு மே.

ப — ரை : பூரிக்கின்ற முலேப் பேதாய் — விம்முகின்ற தனங்களேயுடைய பெண்ணே, பலகால் எறும்பு ஊரக் கல் குழியும் — பலதரம் சிற்றெறும்புகள் ஊர்ந்துகொண்டு வந்தாலும் கருங்கல்லும் குழிந்துபோகும், (அதுபோல) மடவார் பகர்ச்சி பயில — பெண்களிடத்தில் வாய்ப்பேச்சோடு பழகிக்கொண்டு வந்தாலும், நோன்பு ஆற்றல் திகழ்ச்சி தரும் நெஞ்சத் திட்பம் நெகிழ்ச்சி பெறும் — தவத்தைச் செய்தலில் விளங்குகின்ற (ஒருவனுடைய) மனத்தின் உறுதியானது (நாளுக்கு நாள்) தளர்ந்துபோகும். எ — று. ஏ — அசை. 23

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி.

ப — ரை : செழும் பொழில்வாய் — செழுமையாகிய சோலேயினிடத்தே, மலர்ச்சேக்கை வண்டு விரும்பும் — பூவாகிய மெத்தையை வண்டுகள் விரும்பும், வேம்பு அன்றே காக்கை விரும்பும் கனி — வேப்பம்பழமன்றே காக்கைகள் விரும்பும் பழம்; (அதுபோல) இங்கு ஒருவர்க்குக் குணம் உண்டு எனினும் — இவ்வுலகத்தில் ஒருவருக்கு நற்குணம் உள்ளதாயினும், கீழ் கொண்டு புகல்வது அவர் குற்றமே— கீழோர் எடுத்துப் பேசுவது அவருடைய குற்றமேயாகும். எ — று. 24

கல்லா அறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணுரே—வில்லார்
கணேயிற் பொலியுங் கருங்கண்ணுய் நொய்தாம்
புணேயிற் புகுமொண் பொருள்.

ப — ரை : வில் ஆர் கணையின் பொலியும் கருங்கண்ணாய் — வில்லோடுகூடிய அம்பைப்போலப் (புருவத்தோடு கூடி) விளங்குகின்ற கருமையாகிய கண்களை யுடையவளே, புணையில் புகும் ஒள் பொருள் நொய்து ஆம் — (கனமில்லாத) தெப்பத்திலே சேர்ந்த கனமுடைய பொருள் இலகுவாம்; (அதுபோல) கல்லா அறிவின் கயவர்பால் — கல்லாத அறிவினையுடைய மூடரிடத்திலே (சேர்ந்தால்), கற்று உணர்ந்த நல்லார் தமது கனம் நண்ணார் — கற்றறிந்த நல்லோர் தமது பெருமையை இழப்பர். எ — று. 25

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

ப — ரை : மடவரால்—இளமை பொருந்திய பெண்ணே, ஒள் புலவர் உடலின் சிறுமை கண்டு — ஒள்ளிய புலவருடைய உடலின் சிறுமையைக் கண்டு, கல்விக் கடலின் பெருமை கடவார் — (அவரது) கல்வியாகிய கடலின் பெருமையை (ஒருவரும்) கடக்க மாட்டார், கதிர் காணும் ஒளி - சூரியனுடைய ஒளியோடு கூடிக் காண்கின்ற கருமணி யொளியானது, கண் அளவு ஆய் நின்றதோ — (தனக்கிடமாகிய சிறிய) கண்ணினளவாக அடங்கி நின்றதோ, விண் அளவு ஆயிற்றோ விளம்பு — (தான் காண்கின்ற பெரிய) ஆகாயத்தினளவாக வியாபித்து நின்றதோ நீ சொல்லுவாயாக. எ-று. தான் — அசை. 26

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.

ப — ரை : முளைக்கும் எயிறு — முளைக்கின்ற பற்களானவை, நாவிற்கு (தமக்கு ஒருபகாரமுஞ் செய்தற்கு இயலாத) நாக்குக்கு, வலியன தாம் மென்று முதிர் சுவை விளைக்கும்—கடினமாகிய தின்பண்டங்களைத் தாமே மென்று

கொடுத்து நிறைந்த சுவையை உண்டாக்கும், (அதுபோல) கற்று அறிந்தோர்—கற்றறிந்தவர், கைம்மாறு உகவாமல்—பிரதியுபகாரத்தை விரும்பாமல், மெய் வருந்தித் தம்மால் இயல் உதவி தாம் செய்வர் — சரீரம் வருந்தித் தம்மால் இயன்ற உதவிகளைத் தாமே செய்வர். எ — று. அம்மா — வியப்பிடைச்சொல். 27

முனிவினும் நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகும் கதலிதா னெட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை.

ப — ரை: மூதறிஞர் முனிவினும் நல்குவர் — பேரறிவுடையவர் கோபமுள்ள காலத்திலுங் கொடுப்பர், கயவர் உள்ளக் கனிவினும் நல்கார் — மூடர் மனமகிழ்ச்சி உள்ள காலத்திலும் கொடார், கதலி நனி விளைவு இல் காயினும் ஆகும் — வாழையானது மிக முற்றுதலில்லாத காயினுலும் பயன்படும், எட்டி பழுத்து ஆயினும் ஆமோ அறை—எட்டியானது பழுத்தாலும் பயன்படுமோ நீ சொல்வாயாக. எ — று. தான் — அசை. 28

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கும் ஒருகோடி யாக — நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியாய் அஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்.

ப — ரை: பண்ணின் புகலும் பனிமொழியாய் — பண்ணைப்போலப் பேசுகின்ற குளிர்ச்சி பொருந்திய சொல்லையுடையவளே, மதிமான் — சந்திரனிடத்திலிருக்கிற மானனது, மண்ணில் புலியை அஞ்சுமோ — பூமியில் இருக்கிற புலிகளுக்குப் பயப்படுமோ, (பயப்படாது; அதுபோல) நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர் — (தம்முடைய) மனம் உயர்ந்த பரம்பொருளினிடத்தே அழுந்தப்பெற்ற ஞானிகள், உடம்புக்கு வரும் இடர் அடுக்கும் ஒரு கோடி ஆக — (தம்முடைய) உடம்புக்கு வருந் துன்பங்கள் அடுக்கிச் செல்லப்படும் ஒரு கோடியளவினவாக இருந்தாலும், நடுக்கமுறார் — அச்சமடையார். எ — று. 29

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே — வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு.

ப — ரை : கொள்ளுங் கொடுங் கூற்றம் கொல்வான் குறுகுதல் முன் — (உயிரைக்) கொண்டு செல்கின்ற கொடுமையாகிய யமனுனவன் கொல்லும்படி அணுகுவதற்கு முன்னே, உள்ளம் கனிந்து அறம்செய்து உய்க — மனங்கரைந்து தருமங்களைச் செய்து பிழைக்கக் கடவாய்; வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகோலி வையார் — வெள்ளம் வருவதற்கு முன்னே கரையைக் கட்டிவையாதவர், பெருகுதற்கண் என்செய்வார் பேசு — (அது) பெருகி வரும்பொழுது யாது செய்வார், நீ சொல்வாயாக. எ — று. ஏ — அசை. 30

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் — நேரிழாய் !
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது.

ப — ரை : நேர் இழாய் — தகுதியாகிய ஆபரணத்தையுடையவளே, மெய் சென்று தாக்கும் வியன்கோல் அடி — உடம்பிலே போய்த் தாக்குகின்ற பெரிய கோலினுடைய அடியை, கை கடிது சென்று தன்மேல் தாங்கும் — கை விரைந்துபோய்த் தன்மேல் ஏற்றுக்கொள்ளும்; (அது போல) பேர் அறிஞர் — பெரிய அறிவுடையவர், தாக்கும் பிறர் துயரம் வீரமொடு தாங்கி — வருத்துகிற பிறருடைய துன்பத்தை வீரத்தோடு தாம் ஏற்றுக்கொண்டு, காக்க விரைகுவார் — (அவரைப்) பாதுகாத்தற்கு முற்படுவர். எ — று. (ஏ — அசை). 31

பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே — நன்னுதால்!
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் ருன்.

ப — ரை: நல் நுதால் — நல்ல நெற்றி யுடையவளே, காழ் ஒன்று உயர் திண் கதவு — வயிரம் பொருந்திய உயர்ந்த வலிய கதவானது, தாழ் ஒன்று இலது ஆயின் வலி உடைத்தோ — ஒரு தாழ் இல்லாததாயின் உறுதியை உடைத்தாகுமோ, (உடைத்தாகாது; அதுபோல) பன்னும் பனுவல் பயன் தேர் அறிவு இலார் — சொல்லப்படுகின்ற நூல்களினது பொருளை அறியும் விவேகமில்லாதவர் செய்யும், மன்னும் அறங்கள் வலி இலவே — மிகுந்த தருமங்கள் உறுதியில்லாதனவேயாம். எ—று. தான்—அசை. 32

எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்
வில்ளா அறிஞரது வேண்டாரே — தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்.

ப — ரை: நீர் கட்டு குளம் தள்ளாக் கரை காப்பு உளது — நீரைக் கட்டிவைக்கின்ற (சிறிய) குளமே தள்ளப் படாத கரைகாவலாக உள்ளது, அன்றிக் கடல் கரை காப்பு உளதோ — அதுவல்லாமற் (பெரிய) கடலானது கரை காவலாக உள்ளதோ (உள்ளதன்று; அதுபோல) இழிஞர் எள்ளாது இருப்பப் போற்றற்கு உரியர் — அறிவில்லாத சிறியோர் (தம்மைப் பிறர்) இகழாதிருக்கும்படி காக்கப்படுதற்கு உரியராவார், வில்ளா அறிஞர் அது வேண்டார் — நீங்காத அறிவுடைய பெரியோர் அங்ஙனங் காக்கப்படுதலை வேண்டார். எ — று. ஏ — அசை. 33

அறிவுடையா ரன்றி அதுபெருர் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும் — பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே அன்றிமறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு.

ப — ரை : பிறை நுதால் — பிறை போலும் நெற்றியை யுடையவளே! வண்ணம் செய் வாள்விழியே யன்றி—அழகு செய்கின்ற ஒளியையுடைய கண்களேயல்லாமல், மறை குருட்டுக் கண் — (ஒளி) மறைந்த குருட்டுக் கண்களானவை, இருளைக் கண்டு அஞ்சுமோ — இருட்டைக் கண்டு அஞ்சுமோ, (அஞ்சா ; அதுபோல) அறிவுடையார் அன்றி — அறிவுடையவரேயல்லாமல், அது பெறார் — அவ்வறிவைப் பெறாத மூடர், தம்பால் செறிபழியைச் சிறிதும் அஞ்சார் — தம்மிடத்து நெருங்கிவரும் பழியைச் சிறிதும் அஞ்சார். எ—று. 34

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே — வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்
பால்வேண்டும் வாழைப் பழம். [காடி

ப — ரை : வெற்றிநெடும் வேல் வேண்டும் வாள் விழியாய் — வெற்றியையுடைய நெடிய வேற்படை விரும்புகின்ற ஒளிபொருந்திய கண்களையுடையவளே! வாழைப் பழம் பால் வேண்டும் — வாழைப் பழத்தை (தித்திப்பாகிய) பாலானது அவாவும், புளிங்காடி வேண்டா — புளிப்பாகிய காடி நீரானது (அதனை) அவாவாது, (அதுபோல) கற்ற அறிவினரை மேன்மக்கள் காமுறுவர் — (நூல்களைக்) கற்ற அறிவுடையவரை மேலோர் விரும்புவர், மற்றையர் என்றும் மதியார்—கீழோர் (அவரை) எப்போதும் மதியார். எ — று. தாம், ஏ — அசை. 35

தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர் — எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

ப — ரை : எக்காலும் நீர் நெல்லுக்கு இறைப்பதே அன்றி — எக்காலத்தும் நீரை நெற்பயிருக்கே இறைப்பதல்லாமல், காட்டு முளி புல்லுக்குப்போய் இறைப்பரோ — காட்டினிடத்தே உலரும் புல்லுக்குப் போய் இறைப்பரோ, (இறையார்; அதுபோல) தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார் இல் என்று — தகுதியுடையவருக்கே கொடுப்பார் தகுதியற்றவருக்குக் கொடுப்பவர் இல்லையென்று அறிந்து, விழுமியோர் — மேலோர், மிக்கார்க்கு உதவார் — நன்னெறி கடந்தவர்க்குக் கொடார். எ — று. 36

பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்கவன்று தாழும் — தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய்! விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து.

ப — ரை : பொன் உயர்வு தீர்த்த புணர் முலையாய் — இலக்குமியுடைய உயர்வை (அழகினாலே) நீக்கிய நெருங்கிய தனங்களையுடையவளே, பெரியோர்முன் தன்னைப் புனைந்து உரைத்த பேதை - பெரியோர் முன்னே தன்னைச் சிறப்பித்துச் சொல்லிய மூடன், உயர்வு தரியாது அகன்று தாழும் — உயர்வைப் பொறுக்கமாட்டாது இழந்து தாழ்வையடைவன், விந்தமலை தாழ்ந்து தன் உயர்வு தீர்ந்ததன்று — (அகத்திய முனிவர் முன்னே தன்னைச் சிறப்பித்துச் சொல்லிய) விந்தமலையானது (அவர் கையினாலே ஊன்றப் பாதாளத்திலே) தாழ்ந்து தன்னுடைய உயர்வு நீங்கியது, தெரியாய்கொல் — (நீ அதனை) அறியாயோ. எ — று. 37

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே — நல்லாய்கேள்
காய்முற்றின் தின்றீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம்.

ப — ரை : நல்லாய் கேள் — நற்குணத்தை யுடையவளே கேட்பாயாக, காய் முற்றின் தின் தீம் கனி ஆம் — காயானது (நாள்சென்று) முற்றினல் தின்னுதற்குரிய இனிய கனியாகும், இளம் தளிர் நாள்போய் முற்றின் என் ஆகிப் போம்—இளந்தளிரானது நாள் சென்று முற்றினல் யாதாகிப் போம், (அதுபோல) நல்லார் செயும் கேண்மை நாடோறும் நன்று ஆகும் — நல்லோர் செய்யும் நட்பானது நாடோறும் நன்ருகி வளரும், அல்லார் செயும் கேண்மை ஆகாது — அல்லார் செய்யும் நட்பானது நல்லதாகாது. எ — று 38

கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே — பொற்ரொடீ!
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம்.

ப — ரை : பொன் தொடீ — பொன்னுலாகிய வளையல் களையுடையவளே, சென்று படர்ந்த செழுங்கொடி மென்பூ- போய்ப் படர்ந்த செழுமையாகிய கொடியின் மெல்லிய பூவானது, மலர்ந்த அன்றே மணமுடையது ஆம்—மலர்ந்த அன்றைக்கே மணம் உடையதாகிப் பின் கெட்டுவிடும், (அதுபோலக்) கற்று அறியார் செய்யும் கடு நட்பும் — கற்றறியாதவர்கள் செய்கின்ற மிகுதியாகிய நட்பும், தாம் கூடி உற்ற உழியும் — (நெடுங்காலம்) தாங்கள் கூடியிருந்த விடத்தும், தீமை நிகழ்வே உள்ளது — தீங்கு விளைதலே உள்ளதாகும். எ — று. 39

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்ரெவ்வார் — மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்.

ப – ரை : பொன்னே – இலக்குமியைப் போன்றவளே, மின்னும் அணி பூணும் பிற உறுப்பு – விளங்குகின்ற ஆபரணத்தை அணிந்துகொள்கின்ற (கைகால் முதலிய) மற்றை அவயவங்களானவை, அது புனையாக் காணும் கண் ஒக்குமோ – அதனை அணியாத பார்க்கின்ற கண்களுக்கு ஒப்பாகுமோ (ஒப்பாகா; அதுபோல), பொன் அணியும் அரசர்–பொன் ஆபரணங்களாலே அலங்கரித்துக்கொள்ளும் அரசர்கள், புனையாப் பெருங் கல்வி மன்னும் அறிஞரை ஒவ்வார் – (அதனை) அணியாத பெரிய கல்விப் பொருள் நிலைபெற்ற விவேகிகளுக்கு ஒப்பாகார். எ-று.

தாம்–மற்று அசை. காண்–முன்னிலையசை. 40

---

038003


நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப்
பெறுமதியானவை

**மில்க்வைற் தயாரிப்புக்களே !**

மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவாகும்.

★

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : **7233**

★

கிளை :
79, மெசன்சர் வீதி,
கொழும்பு–12.
தொலைபேசி : **36063**


திருமகள் அழுத்தகம், சுன்னாகம்